கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...



"ஏமாற்றி விடுவார்!"

KALKI • 21.06.2009 • ரூ.10.00 • 96 பக்கங்கள்



திருவாரூர் - நாகை மாவட்ட ஸ்பெஷல்-!



எதைப் படிப்பது என்பதை
நீங்கள் தேர்வு செய்யுங்கள்
படிப்பிற்கு ஆகும் செலவுக்கு
நாங்கள் தீர்வு தருகிறோம்
TMB
கல்விக் கடன்
வட்டி விகிதம் 12.50% p.a. முதல்
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது
• அனைத்து பட்டப்படிப்புகளுக்கும்
• சுலபத் தவணை வசதி
• எளிய விதிமுறைகள்
• விரைவான பரிசீலனை
ரூ. 20 இலட்சம் வரை
தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிட்.
Customer Oriented & Committed to Excellence
பதிவு அலுவலகம் : 57, வி.இ. ரோடு, தூத்துக்குடி-628 002 இணையதளம் www.tmb.in
ESTD. 1921
• சென்னை : 98428 13786 • கோயம்புத்தூர் : 98421 97712
• ஈரோடு : 98422 58477 • சேலம் : 98422 13451
• திருச்சி : 98424 10695 • தஞ்சாவூர் : 98424 31574
• திருநெல்வேலி: 98421 33596 • நாகர்கோவில்: 98424 15446
• தூத்துக்குடி : 98421 47410 • மதுரை : 98421 54142
• சிவகாசி : 98421 21556 • விருதுநகர் : 98421 45341
மற்றும் TMB-ன் அனைத்து கிளைகளிலும்
மேலும் விபரங்களுக்கு இலவச தொலைபேசி எண் : 180 0425 0426

யார் அந்த மூவர்? கெஸ்ஸிங் போட்டி

ஹாய் ரீடர்ஸ்!

கல்கி ஜூலை இதழிலிருந்து ஸ்வீட்டா, ஸ்டைலா, ஸ்மார்ட்டா மூன்று தொடர்களை மூன்று ஜாம்பவான்கள் எழுத இருக்காங்க. அந்த மூணு பேரு யாராக இருக்கும்ன்னு கெஸ் பண்ண முடியுமா? ஒவ்வொரு தொடருக்கும் இரண்டு பேரைக் கொடுத்திருக்கிறோம். அவற்றுள் சரியான பெயரை 'டிக்' (✓) அடித்து கூப்பனைப் பூர்த்தி செய்து இந்தப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்க. மூணு பேரையும் சரியாக 'கெஸ்' பண்றவங்கள்ல இருந்து குலுக்கலில் தேர்வாகும் ஐந்து பேருக்குப் பரிசு உண்டு. ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. உறையின் மீது 'கெஸ்ஸிங் போட்டி' என்று குறிப்பிடவும்.

விடைகள் வந்து சேர கடைசித் தேதி: 20.6.09

அட்டகாசமான சினிமா தொடர்



அனுஹாசன் ☐



கே.வி.ஆனந்த் ☐

அதிரடியான த்ரில்லர் தொடர்



ராஜேஷ்குமார் ☐



பி.கே.பி. ☐

அசத்தலான ஹாஸ்யத் தொடர்



☐ பாரதி பாஸ்கர்



☐ கு.ஞானசம்பந்தன்

கல்கியில் மிகவும் பிடித்த பகுதி..

நிச்சயம் தவிர்க்க வேண்டிய பகுதி ....

நான் கல்கியின்... சந்தாதாரர் ☐

கடையில் வாங்குபவர் ☐

பெயர்: .... வயது : ....

விலாசம் : ....

....

....

செல்: .... ஈமெயில்:........................

நியூஸ்பாய்

M. குமரன் S/o மகாலெட்சுமி இப்போது ஜெயம் ரவி H/o ஆர்த்தி ஆகிவிட்டார். முகத்தில் 'கணவன்' களை கூடிவிட்டது ஜெயம் ரவிக்கு! சென்னை சாந்தோமில் மேயர் ராமநாதன் செட்டியார் மண்டபத்தில் ஞாயிறு மாலை நடந்த வரவேற்பில் சில துளிகள்....

● வண்ண விளக்குகளால் மண்டபமே பிரகாசிக்க, கேரளாவின் பாரம்பர்ய சிங்காரி மேளத்துடன் வரவேற்பு நிகழ்ச்சி களைகட்ட ஆரம்பித்தது.

● சரியாக மாலை 7.30 மணிக்கு வந்தார் துணை முதல்வர் மு.க.ஸ்டாலின். கூடவே உதயநிதி ஸ்டாலினும் வந்திருந்தார். வாழ்த்திவிட்டு மேடையை விட்டு இறங்கும் போது ஜெயம் ரவி காதில் உதயநிதி ஏதோ கிசுகிசுக்க, 'அடுத்த படத்துக்கு அட்வான்ஸ் புக்கிங்கா...' என்று மேடையில் கமெண்ட் கிளம்ப, புன்னகைத்தார் உதயநிதி.

(அப்படியே அப்பா போல!)

● இயக்குநர் ஜனநாதன் அவரது உதவியாளர்களுடன் கல்யாண வேலைகளை இழுத்துப் போட்டுக்கொண்டு செய்தது அனைவரையும் ஈர்த்தது.

(உண்மையிலேயே பேராண்மைதான்!)

● சிரித்தபடியே வந்தார் இயக்குநர் செல்வராகவன். கூடவே அவரோடு சோனியா அகர்வால்.

(பிரிந்து விடுவார்கள் என்ற பேச்சுக்கு முற்றுப்புள்ளியா!?)



● ஜெயம் ரவி - ஆர்த்தியை வாழ்த்தியதோடு மட்டுமில்லாமல், மேடையில் நிற்கும் கூட்டத்தையும் சரிபண்ணும் வேலை செய்தார் இயக்குநர் விஜய்.

(இங்கேயும் டைரக்ஷனா?)

● மணமேடையில் திடீர் சலசலப்பு. பார்த்தால் விஜய் உதட்டில் உறைந்திருக்கும் சிரிப்போடு, கையில் பூங்கொத்தோடு ஜெயம் ரவி காதுக்குள் வாழ்த்துத் தெரிவித்துவிட்டுக் கிளம்பினார்.

(கிசுகிசு மேட்டரா... விஜய்)

● M. குமரன் S/o மகாலட்சுமியில் ஜெயம் ரவிக்கு அம்மாவாக நடித்த நதியா சுடிதார் போட்ட மகாலட்சுமியாக வந்திருந்தார்.

(மருமகள் எப்படி மேடம்?)

● இயக்குநர் சுரேஷ் கிருஷ்ணா மேடைக்கு வந்ததும் ஜெயம் ரவிக்கு முகத்தில் பணிவு கலந்த சந்தோஷம். காரணம் இவரிடம், ஜெயம் ரவி உதவி இயக்குநராக வேலை பார்த்தவராம்.

(இருக்காதா பின்னே...)

● குஷ்புவும், மணமகள் ஆர்த்தியின் அம்மாவும் பிஸினஸ் பார்ட்னர்ஸாம். திருமணம், வரவேற்பு இரண்டிலுமே குஷ்பு குடும்பத்தோடு ப்ரசண்ட்.

(இல்லைன்னா கணக்கு வழக்குல இடிக்கும்ல!)



● ஆர்த்தியின் ஸ்காட்லாந்து தோழிகள் ஃப்ளைட் பிடித்துத் திருமணம் + வரவேற்புக்கு வந்திருந்தனர்; ஆர்த்தி ஸ்காட்லாந்தில் படித்தவராம்!

(பெரிய படிப்போ...?)

● மணமக்களுக்கு நிறைய பேர் பரிசு தந்திருக்கலாம். ஆனால், ஜெயம் ரவிக்கு ஆர்த்திதான் கல்யாணப் பரிசு!

(எப்படி முடிச்சோம்ல... ஹீ... ஹீ...)

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் : **லக்ஷ்மி நடராஜன்**

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் : **சீதா ரவி**

உதவி ஆசிரியர்கள் :
கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், பா.கோபால்

தொலைபேசி :
044 - 4343 8888 (30 lines)

தொலைநகல் : **044 - 4343 8899**

மின்னஞ்சல் - ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
விளம்பரப் பிரிவு :
marketing@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்கள் :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் - உள்நாடு :
ஒரு வருடம் : ரூ. 500/-
ஆறு மாதம் : ரூ. 270/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : ரூ.3,800/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

ஃப்ரெஞ்ச் ஒப்பன் போட்டியை ஃபெடரர் வென்று வரலாற்றுப் பக்கங்களில் இடம்பிடித்துவிட்டார். சாம்ப்ராஸுக்கு இணையாக இப்போது 14 கிராண்ட் ஸ்லாம் கோப்பைகள் அவர் வசம். இன்னும் ஒரு கிராண்ட் ஸ்லாம் போதும். உலகின் அசாத்தியமான டென்னிஸ் வீரர் என்கிற பெருமையை அடைந்துவிடுவார். இதைவிட ஃப்ரெஞ்ச் ஒப்பன் போட்டியில் கண்ட பெரிய ஆச்சரியம், ஃப்ரான்சு நாட்டுக்கு தன் மொழி மீதுள்ள பெருமிதமும் கர்வமும்.

இன்றைக்கும் ஃப்ரெஞ்ச் ஒப்பன் போட்டியில் ஃப்ரெஞ்ச் மொழியில்தான் அறிவிப்புகள் வெளியிடப்படுகின்றன. அட, உலகம் முழுக்கப் பார்க்கும் ஒரு சர்வதேசப் போட்டியாயிற்றே என்று

ஃப்ரெஞ்சு



அவர்கள் மருந்துக்குக்கூட ஆங்கிலத்தில் சிறு அறிவிப்பும் வெளியிடுவதில்லை. டியூஸ், அட்வான்டேஜ் போன்ற டென்னிஸ் வார்த்தைகள் ஈகலைட், அவான்டேஜ் என்றுதான் சிறிதும்



வெல்க!

சங்கோஜம் இல்லாமல் ஃப்ரெஞ்ச் மொழியில் அறிவிக்கப்படுகின்றன. கோப்பை வாங்கும் வெற்றியாளர்கள் ஆங்கிலத்தில் பேசினால், அடுத்த நொடியே ஃப்ரெஞ்சில் மொழிபெயர்க்கிறார்கள். தமிழகம் ஃப்ரான்ஸிடமிருந்து நிறைய கற்றுக்கொள்ள வேண்டி இருக்கிறது.

20 - 20 உலகக்கோப்பையில் தன் முதல் ஆட்டத்தில் இங்கிலாந்துடன் தோற்றுப்போனது பாகிஸ்தான். மிக மோசமான தோல்வி. ஆனால் சமீபகாலமாக எந்த கிரிக்கெட் போட்டிகளிலும் பங்கு பெறாமல் தனிமைப்படுத்தப்பட்ட காரணத்தால் பாகிஸ்தான் அணி வீரர்கள் எவ்வளவுதூரம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள் என்பதை பாகிஸ்தான் கேப்டன் யூனிஸ்கானின் பேட்டியிலிருந்து தெரிந்து கொள்ள முடிந்தது. 'நாங்கள் அடுத்த சுற்றுக்கு முன்னேறாவிட்டாலும்கூட அது எங்களுக்குப் பெரிய இழப்பு கிடையாது. நான் 20-20க்குப் பெரிய முக்கியத்துவம் கொடுப்பது கிடையாது. அது சும்மா பொழுது போக்குக்காக விளையாடப்படும் கிரிக்கெட். சர்வதேச கிரிக்கெட் என்றாலும் மக்களை மகிழ்விப்பதற்காக ஆடும் ஆட்டம் அது. ப்ளா.. ப்ளா...' பாவம்தான்.

20 - 20 உலகக் கோப்பையை எந்த அணி வெல்லும்? இதுவரை நடந்த 20-20 போட்டிகள் எல்லாவற்றிலும் ஊர் பேர் தெரியாத அணிகள்தான் கோப்பையை வென்றிருக்கின்றன. இந்தியாவில் நடந்த ஒரேயொரு தேசிய 20-20 போட்டியை வென்றது மும்பையோ, வங்காளமோ கிடையாது; தமிழ்நாடு!

முதல் 20-20 உலகக் கோப்பையை ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா போன்ற அணிகள் வெல்லக்கூடும் என்று எல்லோரும் அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கும்போது பெரிய அதிர்ச்சி கொடுத்தது இந்திய அணி. முதல் ஐ.பி.எல். போட்டியில் பலவீனமாகக் காட்சியளித்த ஒரே அணி - ராஜஸ்தான். ஆனால் கோப்பையை வென்றது இந்த அணிதான். இரண்டாவது ஐ.பி.எல்-லிலும் டெக்கான் தலையில் மண் விழப்போகிறது என்று எல்லோரும் எதிர்பார்த்தபோது அபாரமாக ஆடி முதலிடம் பெற்றது. 20-20யில் யாரை நம்புவது? ●

ச.ந.கண்ணன்


நம்பர் ஒன்'னில்
நம்பிக்கை இல்லை!
- ரீமா சென்

என்ன ரெண்டு வருஷமா ஒரு படமும் பண்ணலை?

''ஆயிரத்தில் ஒருவன் படத்துல நடிக்க ஆரம்பிச்சபிறகு என்னால வேற எந்தப் படத்துக்கும் கால்ஷீட் ஒதுக்க முடியலை. என்னாலயும் இதுமாதிரி ஒரு அபாரமான கேரக்டர் உள்ள படத்துல நடிக்கும்போதே வேற படத்துல சுலபமா நுழைஞ்சுட முடியாது. இந்தப் படத்து மேல எனக்கு நிறைய எதிர்பார்ப்பு இருக்கு. தமிழ்ல இடைவெளி இருந்தாலும் அதனால எனக்கு எந்த நஷ்டமும் இல்லைங்கிறது தான் உண்மை.''

செல்வராகவன் எப்படி?

''செல்வராகவன் பத்தி தவறா எழுதுறது பார்த்து எனக்குக் கவலையா இருக்கு. அவர் ஹீரோயினை டார்ச்சர் செய்றார்னு எல்லாம் எழுதுறதுல உண்மையே இல்லை. அவர் எதையும் சரியா செய்யணும்னு எதிர் பார்க்கிறவர். தான் நினைச்சது சரியா வரும்வரை விடமாட்டார். அதனால அவரை மத்தவங்க தப்பா நினைச்சிருக்கலாம். அவர் கடுமையான டைரக்டரா இருந்தா என்னால எப்படி ரெண்டு வருஷம் அவர் படத்துக்கு வேலை செய்ய முடியும்? அவர்கிட்ட அபாரமான காமெடி சென்ஸ் இருக்கு. அவரோட ஒரு வரி கமெண்ட் எல்லாம் அவ்வளவு டைமிங்கா இருக்கும். அவருக்கு சினிமா மேல அவ்வளவு வெறி. எப்பவும் சினிமா பத்திதான் நினைச்சுட்டு இருப்பார்.''

> **"பரபரப்பா சினிமா வாழ்க்கைய ஆரம்பிச்ச பலர் இன்னைக்குக் காணாம போயிட்டாங்க."**

உங்களால ஏன் தமிழ்ல நம்பர் ஒன் நடிகையாக வர முடியல?

''நான் இப்ப எப்படி இருக்கறேனோ, என்ன பண்றேனோ அதுவே எனக்கு திருப்தி கொடுக்குது. மத்தவங்க ஒரே நேரத்துல நாலஞ்சு படங்கள் பண்ணுவாங்க. என்னால அப்படியெல்லாம் நடிக்க முடியாது. ஒரே நேரத்துல பல படங்கள்ல நடிக்கிறதால கால்ஷீட் பிரச்னைல ஆரம்பிச்சு பல தவறுகள் நடக்கலாம். நான் தவறான செய்திகள்ல அடிபட விரும்பல. பரபரப்பா சினிமா வாழ்க்கைய ஆரம்பிச்ச பலர் இன்னைக்குக் காணாம போயிட்டாங்க. நான் நடிக்க வந்து ஆறு வருஷமாச்சு. இன்னைக்கும் தொடர்ந்து நடிச்சுட்டு வர்றேன். இது போதும். எனக்கு நம்பர் ஒன்னில் நம்பிக்கை இல்லை!''

விதி மேல நம்பிக்கை இருக்கா?

''கண்டிப்பா. எனக்குப் படிப்பு அவ்வளவா வராது. முதல் பட வாய்ப்பு வந்தப்போதான் நினைச்சேன். நாம இப்படியெல்லாம் வாழணும்னு விதில எழுதப்பட்டிருக்குனு.''

தமிழ் நடிகைகள்ல உங்களைக் கவர்ந்தவர்கள்?

''சிம்ரன், அஸின்.''

- சநகன்





கிரேஸியைக் கேளுங்கள்

புன்னகையா...

● ஸ்வர்ணலதா, காஞ்சிபுரம்

பெண்கள் அணிய வேண்டிய நகை 'புன்னகை'...அணியக் கூடாத நகை...?

சூர்ப்ப'நகை'....!

● ரா.பிரசன்னா, மதுரை

ஊசியின் துளையை ஏன் 'காது' என்கிறோம்....?

'நூல்' நுழைவதால்....!

● ஆர்.கோபாலன்,மேற்கு மாம்பலம்

பெண்ணுக்கு அழகு மூக்குத்தியா இல்லை கால் கொலுசா...?

ராவணன் சீதையைக் கவர்ந்து சென்ற போது, அன்னை அடையாளமாகத் தனது ஆபரணங்களை வீசி எறிந்தாள். அதில் லக்ஷ்மணனால் அடையாளம் கண்டுபிடிக்க முடிந்தது, அண்ணியின் கால் கொலுசு ஒன்றைத்தான். ஆக ஆணுக்கு அழகு அடுத்தவன் மனைவியின் கால் கொலுசை மட்டுமே பார்ப்பது.

● என்.பாலகிருஷ்ணன், மதுரை

வறுமையை ஜெயித்துவிட்டால் வாழ்க்கையை ஜெயித்துவிட்ட மாதிரி தானே?

மாதிரிதான்! வறுமையைத் தோற்கடித்தால்கூட போதாது. அதை ஒரேயடியாக ஒழித்துக் கட்டுவதே உருப்படியான ஜெயம். சம்பாத்தியத்துக்கும் வறுமைக்கும் சம்பந்தமே கிடையாது. கண்ணனின் நட்பைச் சம்பாதித்த ஆண்டி குசேலன் வறுமையை வென்றான். மாறாக அரசன் துரியோதனன் கண்ணனின் வெறுப்பைச் சம்பாதித்து வாழ்க்கையில் தோற்றான். வரிகளில் வறுமை இருந்தாலும், திருக்குறள் போல நிறைவாக வாழ்வோம்!

● ஆர்.அஜிதா, கம்பம்

நகம் கடிக்கும் பழக்கம் உண்டா?

சில சமயம் வெறித்தனமாக நகம் கடிக்கும் சுவாரஸ்யத்தில், என்னை நானே முழுங்கி இருக்கிறேன் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

● அ.யாழினி பர்வதம், சென்னை

தங்கள் காலில் விழுந்து யாரெல்லாம் ஆசிர்வாதம் வாங்கியிருக்கிறார்கள்....?

அந்த வயித்தெரிச்சலை ஏன் கேக்கறீங்க! தடுக்கி விழுந்தால்கூட குறி பார்த்து தள்ளித்தான் விழுகிறார்கள். என் காலுக்கு அப்படி ஒரு தலையெழுத்து!

● எம்.மிக்கேல் ராஜ், சாத்தூர்

'நான்' என்னும் அகந்தை மனிதனுக்கு எப்போது ஆரம்பமாகிறது?

தொப்புள் கொடி கட்டிப் பறக்கும் போதே, லாரி பிறக்கும் போதே ஆரம்பமாகி விடுகிறது. இந்த தொப்புள் கொடிப் பழக்கம் சுடுகாட்டுப் படி வரைக்கும்.

● நீலதயாட்சி, நெல்லை

வெங்காய சாம்பார் சாதத்துக்கு

தொட்டுக் கொள்ள, உருளைக் கிழங்கு கறியா, தயிர்ப் பச்சடியா, அப்பளமா, சிப்ஸா... எது உசத்தி....?

தொட்டுக் கொள்ள உசத்தி, சுவையாகச் சமைத்த மனைவி....!

● ரேவதிப்ரியன், ஈரோடு

இன்றைய இளைஞர்களிடம் அறிவுரை கூறினால் கிண்டலடிக் கிறார்களே...என்ன செய்வது...?

அன்றைய இளைஞர்களிடம் அறிவுரை கேளுங்களேன்...!

● மு.மதிவாணன், அரூர்

துன்பம் எப்போது தொடர் கதையாகிறது...?

சேர்த்து வைத்துப் படிக்கும்போது...!

● ரமாதேவி, கோலார்

சரித்திரத்தில் இடம் பெற என்ன செய்ய வேண்டும்...?

பூகோளத்துக்கு உங்களைத் தெரிந்திருக்க வேண்டும். அழகிப் போட்டியில் வென்ற 'பூகோள- ரம்பையாகவோ' அல்லது அறுவைப் போட்டியில் வென்ற 'பூகோள-ரம்பனாகவோ' இருக்க வேண்டும்.

பொன்னகையா?



● அ.ஷண்முக சுந்தரம், பெங்களூர்

டி.வி.யில் 'சிறிய இடைவேளைக்குப் பிறகு தொடரும்' என்று அறிவித்ததும் நீங்கள் என்ன செய்வீர்கள்....?

எங்கிருந்தாலும் ஓடி வந்து விளம்பரங்களைப் பார்ப்பேன்!

33க்கு முட்டுக்கட்டை?

நாடாளுமன்றத்தில் பெண்களுக்கு 33 சதவிகித இடஒதுக்கீடு வழங்கும் மசோதாவை இப்போதிருக்கும் நிலையிலேயே தாக்கல் செய்தால் நாடாளுமன்றத்திலேயே விஷம் குடித்துச் சாவேன்'' என்று அதிரடியாக அறிவித்தார் ஜனதா தள தலைவர் சரத் யாதவ். இவரது மிரட்டலுக்கு, பெண்கள் அமைப்புகளிடமிருந்து கண்டனக் கணைகள் வந்துகொண்டிருக்கின்றன.

''சரத் யாதவ்வின் அப்பட்டமான ஆணாதிக்க மனப்பான்மையைத்தான் இது பிரதிபலிக்கிறது'' என்கிறார் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினரும் ஜனநாயக மாதர் சங்கப் பிரமுகருமாகிய உ.வாசுகி. ''லல்லு, முலாயம், சரத்யாதவ் போன்றோர் தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தடைக்கற்களைப் போட்டுக்கொண்டே இருக்கிறார்கள்.

மேலும், இப்போது பாராளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் தாழ்த்தப்பட்ட மற்றும் மலை ஜாதியினருக்கு 22.5 சதவிகித இடஒதுக்கீடு இருக்கிறது. ஆகவே 33 சதவிகிதம் பெண்களுக்கு ஒதுக்குவதில் எந்தப் பிரச்னையும் இருக்காது. ஆனால் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இப்போது ஒதுக்கீடே கிடையாது. அப்புறம் மகளிர் ஒதுக்கீட்டில் அவர்களுக்கு எப்படி ஒதுக்க முடியும்? எனவே, சரத் யாதவ் போன்றவர்கள் முதலில் பொது ஒதுக்கீட்டில், பிற்படுத்தப்பட்ட வர்களுக்கு தனி ஒதுக்கீட்டை வாங்கித் தர முயலட்டும்!'' என்கிறார்.

எந்தவித ஒதுக்கீடும் இல்லாமலேயே, பிற்படுத்தப்பட்டவர்கள்



* உ.வாசுகி

மலைவாசிகள், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் ஆகியோருக்கு 33 சதவிகிதத்தில் உள்ஒதுக்கீடு செய்த பின்னரே மசோதா நிறைவேற்றப்பட வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால், இம்மசோதா தாக்கல் செய்யப்படக்கூடாது என்பதே அவர்கள் விருப்பம். எனவேதான் ஏதாவது சட்டமன்றங்களில் பெரும்பான்மையான வாய்ப்புகளைப் பெற்று வருகிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். உதாரணமாக தமிழக சட்டமன்றத்தில் கடந்த ஐந்து முறைகளும், எந்தவித ஒதுக்கீடும் இல்லாமல் 60, 70 சதவிகித இடங்களில் பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. எனவே சரத்யாதவ் போன்றவர்கள் சிறுபிள்ளைத்தனமாகப்

இட ஒதுக்கீடு

பேசாமல் மசோதா நிறைவேற உதவ வேண்டும்.

''உள்ளாட்சிகளில் இடம்பெற்றுள்ள பெண்கள் பிரதிநிதிகளின் செயல்பாடுகளைப் பார்க்கும்போது இன்னமும் அரசியல் அதிகாரத்தை ஏற்றுக் கொள்ள பெண்கள் தயாராகவில்லை போலத் தெரிகிறதே!'' என்று வாசுகியிடம் கேட்டோம்.

''பல நூற்றாண்டுகளாக வீட்டில் அடைக்கப்பட்ட பெண்கள் இப்போதுதான் வெளியே வருகிறார்கள். முதலில் கொஞ்சம் தடுமாற்றம் இருக்கத்தான் செய்யும். இப்போதுள்ள நிலைக்கு அரசு அதிகாரிகளும் ஒரு காரணம். அவர்கள் பெண்களிடம் பேசாமல் அவர்களின் பின்னணியில் உள்ள ஆண்களிடம் நிர்வாக விவரங்களைப் பேசுகிறார்கள்'' என்றார்.

''அரசியல் கட்சிகளில் பெண்கள் முன்னணிக்கு வர வாய்ப்பு கொடுப்பதில்லை. அப்படியே கிடைத்தாலும், தலைவர்களின் பெண்களாகவும், பேத்திகளாகவும் இருக்கிறார்கள்'' என்கிறார் எழுத்தாளரும், குமரி பாராளுமன்றத் தொகுதியில் பி.எஸ்.பி.யின் சார்பாகப் போட்டியிட்டவருமான முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி சிவகாமி!

''பெண்களிடம் தகுதியிருந்தாலும் அது மதிக்கப்படுவதில்லை. இப்படி இருக்க, 33 சதவிகித இடஒதுக்கீட்டை

''சரத்யாதவ் போன்றவர்கள் முதலில் பொது ஒதுக்கீட்டில் பிற்படுத்தப்பட்டோருக்கு. தனி ஒதுக்கீடு வாங்கித்தர முயலட்டும்!''



துக்கடா நியூஸ்

❋ நாகைக்கு அருகில் உள்ள பரவை என்ற ஊர் மஞ்சள் காமாலை நோய் வைத்தியத்துக்கு மிகவும் பிரபலமானது. பல ஊர்களில் இருந்தும் இங்கு வந்து இந்நோய்க்கு மருந்து சாப்பிட்டுக் குணமாகி வருகிறார்கள். இந்த ஊர் இசைப் பிரபலம் தான் 'பரவை முனியம்மா'.

❋ நாகை-திருவாரூர் மாவட்டங்களின் படைப்பாளிகள்(எழுத்தாளர்கள்)தான் பத்திரிகைத் துறையில் அதிகம் பணிபுரி கிறார்கள்.

- டி.முருகேசன், திருவாரூர்.

ஆண் அரசியல்வாதிகளால் எப்படி ஜீரணிக்க முடியும்? உள்ளாட்சிகளில் ஆண்களின் பினாமியாகத்தான் பெண்கள் இடம்பெற்றிருக்கிறார்கள் என்பது வருந்தத்தக்க நிலை.

கட்சித் தலைவரிடத்தில் தேர்தல் சீட் கேட்டுப் போனால் 'எவ்வளவு பணம் செலவழிப்பாய்?' என்று கேட்பதும், ஜாதி பார்ப்பதும்தானே வழக்கமாக இருக்கிறது!

இந்த 'உள் ஒதுக்கீடு' என்பது யதார்த்த ரீதியாகத் தேவைதானா என்ற கேள்வியும் எழுகிறது. ஒரு தொகுதியில் அதிக எண்ணிக்கையில் இருக்கும் ஜாதியைச் சார்ந்தவரே அரசியல் கட்சிகளால் வேட்பாளராக அறிவிக்கப்படுகிறார். இப்படியிருக்க, எந்தவித ஒதுக்கீடும் இல்லாமலேயே பிற்படுத்தப்பட்டவர்களும், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறார்கள். அந்த வகுப்பைச் சார்ந்த பெண்களும் அந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் வாய்ப்புண்டு. அதே சமயம் நாடாளுமன்ற ராஜ்ய சபையில் எப்படி ஒதுக்கீடு என்பது வெளிப்படையாகச் சொல்லப்பட வேண்டும். ஏனென்றால், அங்கே உறுப்பினராவது கட்சித் தலைவர்களது இஷ்டமாகத்தான் இப்போது இருக்கிறது.

"அரசியல்ல பெண்கள் முன்னுக்கு வர்ற வாய்ப்பு ரொம்ப கம்மி. அப்படியே வந்தாலும் அவங்க கட்சித் தலைவரோட மகளாவோ பேத்தியாவோ இருக்காங்க!"

❋ சிவகாமி



இப்போதிருக்கும் வடிவிலேயே மசோதா நிறைவேற்றப்பட்டால் ராஜ்ய சபையில் ஆதிக்க சக்திகள்தான் அதிக இடங்களில் வருவார்கள்'' என்று எச்சரிக்கிறார் சிவகாமி. இந்த நிலையில், மீண்டும் ஒரு நிலைக்குழு நியமித்து, மறுபடி ஆராயப் போகிறார்களாம். போச்சுடா!

- ப்ரியன்

'பாலைவனச் சோலை'!



பிரபல இயக்குநரான கே.எஸ்.ரவிக்குமாரின் பட்டறையிலிருந்து சமீபத்தில் திரைப்பட இயக்குநராக அறிமுகமாகி இருப்பவர் எஸ்.தயாளன். பழைய 'பாலைவனச் சோலை' திரைப்படத்தையே இப்போதைய சூழலுக்கு ஏற்றவாறு மாற்றி, படப்பிடிப்பை நடத்தியிருக்கிறார்.

படத்தில் ஐந்து பாடல்களில் இரண்டு ரீ-மிக்ஸ். கடலூர், பாண்டிச்சேரி பகுதி கடற்கரை மணலில் பாடல்கள் படம்பிடிக்கப்பட்டுள்ளன. இளைஞர் களைக் குறி வைத்து 'ஃபோக்' வகை பாடல்களைப் போட்டிருக்கிறார் இசையமைப்பாளர் இ.கே.பாபி.

படத்தின் இயக்குநர், காத்தாடி ராமமூர்த்தியின் இருநூறு மேடை நாடகங்களில் நடித்தவர். பழைய படத்திலிருந்து சில முக்கியமான அம்சங்களை எடுத்துக் கொண்டு, நட்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அந்தப் படத்தில் காட்டப்பட்ட நண்பர்கள் எதிர்த்துக் கொள்ளும் காட்சிகளை, இதில் ஆதரவு அளிக்குமாறு மாற்றியிருக்கிறார் இயக்குநர்.

ஏனைய கதாபாத்திரங்கள் வெவ்வேறு சூழலில் இருக்குமாறு அமைத்திருக்கும் இயக்குநர், ''இந்தப் பாலை வனச்சோலை பலரது வாழ்க்கைக்கு பழமுதிர்ச்சோலை '' என்கிறார்.

- ஜான்மதி

பாலிடிக்ஸ் போட்டி - 5 முடிவு

கல்கி 17.5.2009 இதழில் அறிவித்த பாலிடிக்ஸ் போட்டி-5ல் கலந்து கொண்டு கலக்கிய வாசகர்களில் சரியான விடையெழுதி குலுக்கலில் தலா ரூ.100/- பரிசு பெறும் பத்து பேர்

1. மலை அரசன், வேலூர்
2. ஆர்.ரத்தினசாமி, சத்தியமங்கலம்
3. சி.சுகுணா, சோழசிராமணி
4. எம்.ஜி.பரத், திண்டுக்கல்
5. எல்.மாறன், மேல்பட்டி
6. அன்னாமேரி இவான், சென்னை
7. ப.மூர்த்தி, பெங்களூரு
8. ஆர்.ஜெயபாரதி, சாத்தூர்
9. ஆர்.சரஸ்வதி, திருச்சி
10. எஸ். கனகராஜ் மாணிக்கம், சென்னை

சரியான விடைகள் : 1. இ, 2. உ, 3. ஈ, 4. ஆ

மிஞ்சிய பிரமுகர் 'ஜெயலலிதா'வுக்கு அசத்தலான பஞ்ச் டயலாக் கொடுத்து ரூ.1000/- பரிசு பெறுபவர்:

எஸ். கோபிநாதன், தஞ்சாவூர்.

பஞ்ச் டயலாக்:

கதம்... கதம்... முடிஞ்சது முடிஞ்சு போச்சு.





கல்கி

2009 ஜூன் 21
விரோதி ஆனி 7
மலர் : 67
இதழ் : 47



தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்

சொன்னதைச் செய்யட்டும் ஒபாமா!


அமெரிக்க அதிபர் ஒபாமாவின் தந்தை இஸ்லாமியர் என்பது அவருக்கு அனுகூலமாக அமைய வாய்ப்பிருக்கிறது. அவர் பேசுவதை இஸ்லாமிய நாடுகள் கவனமாகக் கேட்கும் என நம்பலாம். இந்த நம்பிக்கையினால்தானோ என்னவோ, கெய்ரோ பல்கலைக்கழகத்தில் பேசிய ஒபாமா, பைபிள்-குரான் ஆகிய இரு மத நூல்களிலிருந்தும் நிறைய மேற்கோள்களை எடுத்தாண்டு பேசியிருக்கிறார்.

இஸ்லாமிய நாடுகள் மத அடிப்படைவாதத்தை ஆதரிக்கக் கூடாது; காலத்துக்கேற்ற சீர்திருத்தங்களை, தங்கள் பண்பாட்டுக்கு விரோதமின்றி அவை ஏற்க வேண்டும். குறிப்பாக, இஸ்லாமியப் பெண்களுக்குக் கல்வியும் சமூக ஏற்றமும் தேவை என்றெல்லாம் விவரமாகப் பேசியுள்ளார்.

இஸ்ரேல்-பாலஸ்தீன தகராறு, ஈராக்கில் உள்ள பிரச்னை, ஆஃப்கானிஸ்தான் சிக்கல் என்று பல கோணங்களை அலசிப் பார்த்துப் பேசியுள்ளார். உலக அமைதி கருதி, அணு ஆயுத சோதனை- உற்பத்தியை அடியோடு நிறுத்துவதுடன் ஏற்கெனவே உற்பத்தி ஆகியுள்ள அணு ஆயுதங்களைச் செயலிழக்கச் செய்யவும் எல்லா நாடுகளும் முன்வர வேண்டும் என்று கூறியிருக்கிறார். அமெரிக்கா இதற்கு முழு ஒத்துழைப்புத் தரத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்.

இவ்வாறு பேசுவதற்கே ஓர் அமெரிக்க அதிபருக்கு மிகுந்த நெஞ்சுரம் தேவை. ஆகவே ஒபாமாவின் உரையை வரவேற்றுப் பாராட்டலாம். ஆனால், மத அடிப்படைவாதமும், சரி, அணு ஆயுதங்களும் சரி, சமீப ஆண்டுகளில் இவ்வளவு தூரம் பெருகியிருப்பதற்கு ஒரு முக்கியக் காரணமே அமெரிக்காதான்! ஆகவே, அமைதியும் பாதுகாப்பும் இவ்வுல





குக்கு மீண்டும் கிடைப்பதற்கான முதல் அடியை எடுத்து வைக்க வேண்டியது அமெரிக்காதான்!

ஈராக்கிலும் ஆஃப்கானிஸ்தானிலும் உள்ள அமெரிக்க ராணுவம் இன்னும் முழுமையாக வெளியேறியபாடில்லை. இந்த நாடுகளில் தனது ஆளுமையை வலுப்படுத்த வசதியாக, அமெரிக்க ராணுவப் பிரிவு பாகிஸ்தானில் தண்டிறங்கி பல வருடங்களாக நீடிக்கிறது. இதை அனுமதிக்கும் பாகிஸ்தானுக்கு, அமெரிக்கா நிதி உதவி அளிக்கிறது. பாகிஸ்தானோ, அந்த நிதியை, இந்தியாவை எதிர்ப்பதற்கான ஆயுதங்கள் வாங்கப் பயன்படுத்துகிறது! அமெரிக்காவின் மறைமுக ஆதரவுடன் இந்தியாவுக்கு எதிரான பயங்கரவாதம் பெருகித் தழைக்கிறது! இன்று உலகத்தையே ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும் அல் கைதா அமைப்பை ஆரம்பத்தில் ஊக்குவித்து, ரஷ்யாவுக்கு எதிராக ஏவியதே அமெரிக்காதான்!

மொத்தத்தில், அமெரிக்கா பிற நாடுகளின் விவகாரங்களில் தலையிட்டதனாலும், 'ஜனநாயக முறையிலான' ஆட்சியை, தான் விரும்பிய வகையில் அவ்விடங்களில் திணிக்க முற்பட்டதனாலும், உலகெங்கும் ஏராளமான சிக்கல்கள். அமெரிக்கா இந்த நடைமுறையைக் கைவிட்டாலேயன்றி ஒபாமா விரும்பும் அமைதி மீளாது.

ஒபாமாவின் உலக அமைதி லட்சியத்துக்கு மற்றொரு இடையூறும் உண்டு. அமெரிக்க நாட்டில்தான் மிக அதிகமான ராணுவக் கருவிகளும் துப்பாக்கிகளும் உற்பத்தியாகின்றன. இவற்றை உற்பத்தி செய்யும் தனியார் நிறுவனங்களின் செல்வாக்கும் அமெரிக்காவில் அதிகம். பயங்கரவாத அமைப்புகள் பெருகப் பெருக, இந்நிறுவனங்களுக்கு லாபமும் பெருகுகிறது! இந்நிறுவனங்களை அதிகம் பகைத்துக் கொள்ள விரும்பாத வகையிலும் அவற்றுக்கு அதிக வருமானம் பெற்றுத் தரும் முகமாகவும்தான் இதுநாள் வரை அமெரிக்க அதிபர்கள் சிந்தித்தார்கள்; செயல்பட்டார்கள். அவர்களிடமிருந்து ஒபாமா சொல்லில் மட்டுமின்றி செயலிலும் மாறுபடுவாரேயானால், அவர் கனவு காணும் அமைதி பூமி உருவாக வாய்ப்பு உண்டு. அணு ஆயுதங்கள் என்பவை கடந்த கால வரலாறாக மாறும்; பயங்கரவாதம் மடிந்து போகும். ●

'அக்கம்-பக்கம்' பகுதியில், ஆந்திரா மாநிலச் செய்திகள், அட்டகாசம்!

-வி.என்.கதிர்வேல், வேலூர்-6

'சிவாஜி த சுப்ரீம் பாஸ்' தொடரில் வேட்டை பற்றிய விரிவான விவரணை தேவையா? ஆயுதம் ஏந்தாத விலங்குகளுக்கு எதிராக மனிதன் உயிர்க்கொல்லித் துப்பாக்கியைப் பிரயோகிப்பது என்ன வீரம்?

- வீ.சரஸ்வதி, மேட்டுப்பாளையம்

ராம்கி மீண்டும் நடிக்க வந்ததையும், கூடவே டைரக்ஷன் செய்வதையும் சொல்லிவிட்டு, 'அப்ப ஹீரோயின் நிரோஷான்னு சொல்லுங்க!'னு கமெண்ட் அடித்துள்ளீர்களே... தெரியாமத் தான் கேக்குறேன். இந்த மாதிரி விஷயங்கள்ல உங்களுக்கு ஞாபகமறதி என்பதே கிடையாதுங்களா?

- மலை அரசன், அருகந்தம்பூண்டி

'பாடம்' அ.நாராயணனும், சசியும் 'அலைபேசி'யில் அலசிக் கொள்வதில் அமிர்தச் சொற்களால் சூர்யக் கிரணங்களை உள்வார்த்திருக்கும் சூட்சுமம் வியக்க வைக்கிறது.

- எஸ்.ஏ.கேசவன், இனாம்மணியாச்சி

நடிகர் விஜய்யின் தசாவதார கெட்டப்கள் செம வெரைட்டி!

- சு. இந்துமதி, நெய்வேலி

கே.பி. பத்மநாபன் எழுதிய 'காகம்' கதை மனத்தைத் தொட்டு இழுத்தது!

- ஜி.லட்சுமிவாசுதேவன், வேளச்சேரி

நூல் அ(றிமு)கம்... பகுதிக்கு இன்னும் ஒரு பக்கம் ஒதுக்கலாமே...!

- டி.ஜி.நாராயணராவ், வியாசர்பாடி

கல்கி தலையங்கத்தின் வாழ்த்தைப் பெற்ற மு.க.ஸ்டாலின், முதல்தர துணை முதல்வராகப் பிரகாசிக்கட்டும்!

-அ.யாழினி பார்வதம், சென்னை-78



நோ ஞாபக மறதி!

'சினி சிப்ஸ்' சுடச்சுட, மொறுமொறுவென கொறிக்க ஏதுவான அப் டு டேட் நியூஸ்! வெல்டன் நியூஸ் பாய்!

- எஸ்.மீனா, ஸ்ரீரங்கம்.

வட்டமேஜை

திருவாரூர், நாகை மாவட்டச் செய்திகள் :
கதிர்பாரதி, ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

தீராத விளையாட்டு விட்டலன் - அடுத்த இதழில்...



ஸ்ரீ சுவாமி நாத சுவாமி சஹாயம்

ௐ

இந்தியாவின் சிறப்புமிக்க முன்னணி ஸ்தாபனம்

SGS

Sri Gomathi Sankar Catering Service

ஸ்ரீ கோமதி சங்கர் கேட்டரிங் சர்வீஸ்

Master Cook Catering Contractors



சமையல் சக்கரவர்த்தி

மாம்பலம் **G. சங்கர் ஐயர்**

பாரதம் முழுவதும்


15/6, Nayakkamar Street, Near Postal Colony, West Mambalam, Chennai - 600 033.

Ph: 2371 2318 Cell: 98411 13559, 93810 53924, 2483 2334 (R)

புதிய பாக்கேஜ் நூல் விற்பனை! 200 குலுக்கல் பரிசுகள்!! முந்துக!!!

புத்தக ரசிகர்கட்கு ஒரு வரப்பிரசாதம். பிரபல *'சக்தி உபாசகர்'* நீலாங்கரையின் ஸ்ரீ அன்னை சக்தி யோகா ஆலய நிறுவனர் **கவியோகி (யோகியார்) வேதம்** அவர்களின் கீழ்க்கண்ட 4 நூல் பாக்கேஜ் - மொத்தமும் வாங்குவோருக்கு மிக்ஸி, புக் ஸ்டாண்ட், கொலு பொம்மைகள் போன்ற விலை உயர் - 200 பரிசுகள் (குலுக்கலில்) காத்திருக்கின்றன. **திரு.கார்த்திகேயன், எல்.கே.எம். பப்ளிகேஷன்ஸ், 33/1, ராமநாதன் தெரு, தி.நகர், சென்னை - 600 017. (போன் : 24361141)** அவர்களுக்கு நேரிலோ அல்லது அவர்கள் பெயரில் எம்.ஓ. ரூ.**200/-** அல்லது செக் அனுப்பி, தெய்வீக அருள்வாக்குப் பெற்ற கவியோகியாரின் கீழ்க்கண்ட - 4 நூல்கள்

1. **எளிய யோகாசனங்கள் - விலை ரூ.50/-**
2. **போகமும் யோகமும் - விலை ரூ.40/-**
3. **ஸ்ரீகாஞ்சி மாமுனிவர் (அஞ்சலி) - விலை ரூ.50/-**
4. **கவியோகி கவிதைகள் - விலை ரூ.50/-** ஆக மொத்தம் ரூ.200. (190 + கூரியர் ரூ.10) இவற்றை வாங்கி மறக்காமல் டோக்கன் (ஒரு பிரதியை) வைத்துக் கொள்ளவும். உரிய நேரத்தில் குலுக்கல் பரிசு அறிவிக்கப்படும். உங்கள் முழு முகவரியும், போன் நம்பரும் அவசியம். விவரத்துக்கு **திரு.கார்த்திகேயனை போன்: 044-24361141**-ல் தொடர்பு கொள்க. சில பிரதி பாக்கேஜ்-களே உள்ளன. **முந்துங்கள். தனித்தனி நூல் விற்பனை இல்லை.**



கேகார்த்திகேயன், (நல்ல ஆன்மிக, இலக்கிய நூல் வெளியீட்டாளர்கள்), எல்.கே.எம்.பப்ளிகேஷன்ஸ், புது எண்: 33/4, ராமநாதன் தெரு, தி.நகர், சென்னை - 600 017.

* **கவியோகி வேதம்**

''பிரபாகரன், இருக்காரா... இறந்து விட்டாரா?'' இன்னும் குழப்பங்கள் தொடர்ந்து கொண்டிருக்க, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர், இலங்கைத் தமிழரசு கட்சியின் எம்.பி. சம்பந்தத்திடம் இலங்கை நிலவரம் குறித்துப் பேசினோம்!

ஈழத் தமிழர்களின் எதிர்காலம்?

''மிகவும் நிச்சயமற்ற நிலையில் தான் இலங்கையில் தமிழ் மக்களின் நிலைமை இருக்கிறது. துரதிர்ஷ்ட வசமாக ராஜபக்ஷே பதவிக்கு வந்த பிறகு, அரசியல் தீர்வுக்கான முயற்சிகளுக்கு ஒரு பின்னடைவு ஏற்பட்டு விட்டது! விடுதலைப் புலிகளை முற்றிலுமாக அழிப்பதுதான் நோக்கமாக இருந்தது. அவர் பதவிக்கு வந்தது முதல், தமிழர் பிரச்னை தொடர்பாக இந்தியாவுக்கு அளித்த எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை.''

பாதிக்கப்பட்ட தமிழர்களின் மறுவாழ்வு?

''புலிகள் மீதான ராணுவ நடவடிக்கையில் தமிழ் மக்கள் பாதிக்கப்படாதபடி பார்த்துக் கொள்வேன் என்றார் ராஜபக்ஷே. ஆனால், கடைசி கட்ட தாக்குதலில் மட்டும் இருபதாயிரம் தமிழ் மக்கள் பலியாகி இருப்பார்கள். ஏராளமானவர்கள் உடைமைகளை இழந்து, இன்று அகதிகள் முகாம்களில் இருக்கிறார்கள். ராஜபக்ஷே இப்போது அளிக்கும் வாக்குறுதிகளையும் நிச்சயமாக நிறைவேற்றமாட்டார். இந்திய அரசு தமிழ் மக்கள் மறுவாழ்வுக்காக அளிக்கும் பணத்தையும், தம் விருப்பப்படிதான் செலவு செய்வார். பாதிக்கப்பட்டவர்கள் மறுவாழ்வுக்கான பணிகளை ஐ.நா. சபை அல்லது செஞ்சிலுவைச் சங்கம், இந்திய அமைப்புகள் மூலம் ராஜபக்ஷே எதுவும் செய்யவில்லை! உதாரணமாக வன்னி மாவட்டத்தில் மொத்தமுள்ள ஆறு பாராளுமன்ற உறுப்பினர்களுள் ஐந்து பேர் தமிழர்கள். ஆனால், அந்த மாவட்டத்தில் நடைபெறும் மறுவாழ்வுப் பணிகளில் அவர்களுக்கு எந்தவிதமான பங்கும் இல்லை. தமிழர்களை மீண்டும் குடியேற்றம் செய்வதற்காக 20 பேர் கொண்ட ஒரு குழுவை அமைத்திருக்கிறார்கள். அதில் 19 பேர் சிங்களவர்கள். ஒரே ஒரு முஸ்லிம். ஆக, தமிழ்ப் பகுதி முழுவதையும் சிங்களமயமாக்குவதுதான் அவர்களது நோக்கம்.''



அதிகாரப் பகிர்வு?

''ராஜீவ் காந்தி கொண்டு வந்த இந்தியா-இலங்கை ஒப்பந்தத்தின்படி இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் ஒன்றாக இணைக்கப்பட்டிருக்க வேண்டும். கணிசமான அதிகாரப் பகிர்வு அளிக்கப்பட்டிருக்கவேண்டும். தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கும் அந்த ஒப்பந்தம் உதாசீனப்படுத்தப்பட்டுள்ளது. அப்பகுதியின் மாநில அரசாங்கம் ஏதாவது செய்தாலும், அதை ரத்து செய்யும் அதிகாரம் இலங்கை அரசுக்கு உண்டு.''

இந்தியாவின் தலையீடு?

''அரசியல் ரீதியான தீர்வு காணப்பட வேண்டும் என்று இந்தியா சார்பில் ராஜபக்ஷேவுக்குக் கொடுத்த

அழுத்தம் உரிய பலன் அளிக்கவில்லை. ஆனால், இன்று ஐ.நா., அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் என்று சர்வதேச சமூகம் இலங்கை தமிழ் மக்களுக்குப் பின்னால் முழுமையாக நிற்கின்றன. தமிழ் மக்களுக்குப் போதிய சுயாட்சி அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்பதில் தீவிர மாக இருக்கின்றன. இந்தியா, கனடா, ஸ்விட்சர்லாந்து போல இலங்கையிலும் அதிகாரப் பகிர்வு அளிக்கும் முறை வேண்டும். இதற்கு இந்தியாதான் உதவ வேண்டும்.''

விடுதலைப் புலிகள்?

''ஆயுதப் போராட்டம் தொடங்கப் பட்டதற்குக் காரணமே அடுத்தடுத்து வந்த அரசுகள் தமிழர்களுக்காக நியாயமான நேர்மையான அரசியல் தீர்வை ஏற்படுத்த வில்லை என்பதுதான். அவ்விதம் நடந் திருந்தால் ஆயுதப் போராட்டம் வந்திருக் காது. ஆரம்பத்தில் புலிகளின் நோக்கம் ஆயுதப் போராட்டத்தின் மூலமாக தமிழ் மக்களது நியாயமான உரிமைகளைப் பெறுவதாக இருந்தாலும்கூட காலப் போக்கில், தனிப்பட்ட கொலைகள், வேறு விதமான வன்முறைகள் என்று பாதை மாறியது. அரசியல் தீர்வை நோக்கிச் செல்லும் சந்தர்ப்பங்களை அவர்கள் பயன்படுத்திக்கொள்ளவில்லை!''

பிரபாகரன்?

''இலங்கைத் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் மதிப்பு பெற்றிருந்த பிரபாகரனின் முடிவு இப்படி இருக்கும் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. பிரபாகரன் உயிருடன் இருப்பதாக நான் சொல்ல மாட்டேன். ஆனால் அது இன்னமும் மக்கள் மத்தியில் ஒரு கேள்விக் குறியா கவே இருக்கிறது. தற்போது கூறப்படுவது உண்மை இல்லாவிட்டால், எதிர்காலத்தில் அந்த உண்மை வெளிவந்தே தீரும்.''

- எஸ்.சந்திரமௌலி

படம் : **கௌதம் ராம்**



''தமிழர்களை மீண்டும் குடியேற்றம் செய்வதற்காக 20 பேர் கொண்ட ஒரு குழுவை அமைத்திருக்கிறார்கள். அதில் 19 பேர் சிங்களவர்கள்''



''ராஜபக்ஷே ஏமாற்றிவிடுவார்!''

இலங்கைத் தமிழ் எம்.பி. சம்பந்தம்

பிரிமனை எறும்புகள்

ப்ளாக் அண்ட் வொய்ட்

கதை-10

மடியிலிருந்து வீணையை இறக்கி வைத்தாள் கமலம். வாசித்து முடித்த கல்யாணி ராகத்தின் ஒய்யார வளைவுகளும் ஒடுங்கிய முடுக்குகளும் மழை நாளின் குளிர்ச்சியாகச் சூழ்ந்திருந்தன. அதன் நினைப்பில் கமலம் ஊறிக் கொண்டிருந்தாள். கரங்களும் கற்பனையும் கல்யாணியை விட்டு அகன்றுவிட்டாலும் அகமும் புறமும் அதிலேயே சுழன்றன.

அகலாத வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான் தாண்டவன். கல்யாணியை அவனுக்குத் தெரியாவிட்டால்தான் என்ன? கமலத்தை அவன் அறிவான். தியாகேசர் ஆலயத்தில் அவள் நாட்டியம் செய்வதைப் பார்த்திருக்கிறான். நாட்டியமா அது? தன் அங்கங்களால் அந்த ஈசனுக்கு அவள் நடத்தும் ஆராதனை அல்லவா! கண்களால் காட்டும் கற்பூர ஆரத்தி. தியாகேசனின் அருளும் கமலாம்பிகையின் கருணையும் கமலாலய குளத்தின் வற்றாத ஜீவனும் தங்கள் வலிமையை இந்த கமலத்தின் பக்தியிடமிருந்து பெறுவதாகவே அவனுக்குத் தோன்றியது.

கமலத்தின்பால் பரவசக் காதல் கொண்டிருந்தான் அவன். அதை அப்படியே அந்தத் தியாகேசனுக்கு மடை திருப்பி விட்டாள் அவள்!

இந்த மண்ணுக்கே உரிய குணம்!



காலால் வாய்க்கால் மண் கரையை ஓர் இடறு இடற வேண்டியதுதான். தண்ணீர் மடை திரும்பிவிடும்; வயல் களுக்கு ஜிலுஜிலுவென்று வழிந்து பாயும். வண்டலும் கரை சலும் படிந்த ஈர உள்ளங்களில் கற் பனைக் கொடிகள் பின்னித் தழைத்து, தாமரை மொட்டு விடும். தடாகம் தடாகமாகத் தாமரைகள், ஏக்கம் நிறைந்த இதழ்களை வானம் நோக்கி மலர்த்திக் கிடக்கும்! எத்தனைதான் பார்த் தாலும் நெஞ்சை உருக்கும் அழகு.



கமலம் மடை திருப்பிவிட்ட தன் காதல், இந்நேரம் தியாகேசனைச் சுற்றி சமுத்திரமாக ஆர்ப்பரித்துக் கொண்டிருக்க வேண்டும். பாற் கடலில் ஒயில் துயில் கொள்ளும் திருமால் போல, காதல் கடலில் செங்கோலோச்சும் தியாக ராஜன்!



இந்தக் கற்பனை விளைவித்த சிரிப்பு, களுக்கென்று வெளிப்பட்டது தாண்டவனி டம்.

''என்ன, இன்னிக்கு ஒரே குதூகலம்?'' கமலம் கவனம் திரும்பி குறுகுறுப்புடன் கேட்டாள்.

அவன் தாமரைத் தடாகத்தையும் காதல் கடலையும் விவரித்தான்.

''பார்த்தியா! நீயும் கலைஞன்தானே! கற்பனையிலேயே தியாகேசனுக்குப் புது அலங்காரம் பண்ணிட்டியே. அதையே தான் நான் நாட்டியத்திலயும் சங்கீதத்துல யும் பண்றேன். அப்புறம் ஏன் என் மேலே இவ்வளவு பிரமை உனக்கு?''

''அது பிரமை இல்லை; பிரேமை!''

''அப்படியானால் அது என் தியாகேச னுக்கே உரியது.''

''இருக்கட்டும். இப்போ நீ இதை வாங்கிக்கோ'' - சிறிய துணி மூட்டையை நீட்டினான்.

''ஆஹா...! பிரிமணை!'' மூட்டை யைப் பிரிக்காமலே தொட்டுணர்ந்து சந்தோஷப்பட்டாள்.

''நீ கொடுக்கற பிரிமணைதான் வருஷம் பூராவும் இத்துப்போகாம யிருக்கு தாண்டவா...'' என்றபடி மூட்டையைப் பிரித்து இரண்டு பிரிமணைகளை எடுத்துப் பார்த் தாள். ''எவ்வளவு அழகா பின்னி யிருக்கே! இழைச்சு இழைச்சு தங்கத் துல செஞ்ச கைக் கொலுசு மாதிரி

• சீதா ரவி •

யில்லே இருக்கு! நருவிசுன்னா அது தாண்டவன் கைப்பின்னல்தான்!''

மணி மணியாக ஒன்றுபோல் திரித்த பிரிகள், வட்ட வடிவ அடுக்கில் கோத்துக் கொண்டு இறுகத் தெறித்து நின்றன.

சட்டென்று இரண்டு பிரிமனைகளையும் இரு கைகளில் வளையல்களைப்போல் கோத்தணிந்து கொண்டாள் கமலம். கைகளை உயர்த்தி அவற்றைச் சுழற்றிக் குலுக்க முயன்றாள். தோள் வரை ஓடிப் போய் அவை உட்கார்ந்து கொள்ள, குழந்தையைப் போல் சிரித்தாள்.

தாண்டவன் சிலிர்த்து கண்கலங்கினான். கண்ணி தோறும் காதல் சேர்த்துத் தன் கைப்பட திரித்த கயிற்றில் உருவான பிரிமனைகள். அவை கமலத்தின் தோள்களைத் தொட்ட கணத்தில் தன் காதலுக்குப் பட்டாபிஷேகம் நிகழ்ந்ததுபோல் நெகிழ்ந்தான்.

'கமலம்! கமலம்!' என்று நெஞ்சு அரற்ற, உதடுகள் ''தியாகேசா!'' என்று வெப்பப் பெருமூச்சுடன் உச்சரித்தன.

''இப்போதான், ஒரு பத்து நாளா பழைய பிரிமனை இத்துப் போக ஆரம்பிச்சிருக்கு, தெரியுமா? சரியான நேரத்துக்குப் புதுசு கொண்டு வந்திருக்கியே!'' என்றாள் அவற்றை நீக்கித் தரையில் வைத்தவாறு.

''இதில் என்ன அதிசயம்? வருஷா வருஷம் தேர் வடம் சரிபார்க்க வர்றப்போ உனக்கும் புதுப் பிரிமனை கொண்டு வரேன். பழசு நஞ்சு போயிட்டா தூக்கிப் போட்டுட்டு, மணல் கொட்டி பானை வைச்சுக்க வேண்டியதுதானே?''

''ஊஹூம்... அது மட்டும் மாட்டேன்...''

ஒருகணம் தாண்டவனின் இதயம் நின்றது.

''ஏன்?'' என்றான் எதிர்பார்ப்பு பொங்க.

''பழைய பிரிமனையோட ஈரத்துக்காக எறும்பு வந்து அண்டியிருக்குமில்லே? அதைக் கலைக்க மனசே வராது. புதுசைக் கூட கொஞ்ச நாளைக்குப் பழசு மேலயே வைப்பேன். அதுவும் ஈரம் படிஞ்ச பிறகு பழசை மட்டும் எடுத்துடுவேன்.''

''எறும்பு அண்டறது பிரிமனை ஈரத்துக்கா உன் மனசோட ஈரத்துக்கான்னு தெரியலை!'' பிரமிப்போடு சொன்னான்.

''ப்ச்! புகழ வேண்டாமே! ஈரம் எங்க இருந்தாலும் உயிர் அண்டத்தானே செய்யும். காவேரியை அண்டி நாம இல்லையா? அவளோட ஜலம்தானே பசியும் தாகமும் ஆத்துறது? அவளோட மடியில தானே ஸாவேரியும் சங்கராபரணமும் நாட்டைக்குறிஞ்சியும் விளையாடி வளர்ந்து கனிஞ்சுது? அவ ஊட்டின சோறு தானே கோயிலுக்குக் கல் சுமக்க பலம் தந்தது? அவ கரையோரத்துக் கொடிக்கால் வெற்றிலைச் சாறுதானே கல்லுக்கு உயிருட்டற கற்பனையை, சிற்பிகளுக்குள் ஊறவிட்டது? அவளோட ஓட்டமும் நடையும்தானே நாட்டியமானது? சின்னச் சின்ன கற்களின் மேல் சிலுசிலுத்தோடும் அவள் ஓசையிலேருந்துதானே கால்



சதங்கை தோன்றித்து? அவள் பெருவெள்ளத்தின் இரைச்சல் அல்லவா தமிழின் கம்பீரமாச்சு? அவள் அமைதியின் ஆழத்திலிருந்துதானே நம்மோட பக்தி திரண்டு கரையொதுங்கியிருக்கு!'' கமலம் இன்னும் மூச்சு விடாமல் அடுக்கிக் கொண்டே போனாள்.

ரொம்ப நாட்களாகப் பொத்தி வைத்த உணர்ச்சிக் கலவை அவளிடமிருந்து பெருகிப் பொழிவதை உணர்ந்தான். ''போதும், போதும்! மூச்சு நின்னுடப் போகுது'' என்றான், அன்பாக.

''நதி ஒரு விந்தைதான் தாண்டவன்; மனுஷ மனசு மாதிரி அதுவும் ஒரு விந்தை.''

''ஒத்துக்கறேன். ஆனா, அதைக்காட்டிலும் விந்தை உங்க திருவாரூர். ஒரே காலகட்டத்துல மூணு வாக்கேயக்காரர்கள் இங்கேயே பிறந்தது எவ்வளவு விந்தை? அதுவும் ஒருத்தரைப் பார்க்க ஒருத்தர் சங்கீத சாகரம்னாலும் வித்தியாசம். தனிப் பெருமை... இது எப்படி சாத்தியம்?''

''அது தியாகேசனோட சித்தம்!'' பளிச்சென்று அவள் அளித்த பதிலில் அப்பழுக்கற்ற நம்பிக்கையின் பிரகாசம். விளக்குச் சுடர் போல் மின்னிய அவள் முகத்தை ரசித்தான்.

''நான் கேட்ட இந்தக் கேள்வியை உன் ★ குருநாதர்கிட்டே என்னிக்காவது கேட்டிருக்கியா கமலம்?''

வேகமாகத் தலையசைத்து மறுத்தாள்.

''அவரைப் பார்த்த மாத்திரத்துல எல்லா கேள்விகளுமே அடங்கிப் போயிடும் தாண்டவன். நீ அவரைப் பார்த்திருக்கியோ?''

''தியாகராஜரை திருவையாற்றிலேயும் ஷ்யாமா சாஸ்திரியை தஞ்சாவூரிலேயும் பார்த்திருக்கேன் - எட்டயிருந்து பார்த்திருக்கேன். ஆனா தீக்ஷிதரைப் பார்க்கக் கிடைக்கல்லே. எட்டயபுரத்துல இருக்கார்னு தெரிஞ்சு நான் பார்க்கப் போகறதுக்குள்ளே அவர் சித்தி ஆயிட்டார்.''

கமலத்தின் கண்கள் கலங்கியிருந்தன. நினைவுகளோ முத்துஸ்வாமி தீக்ஷிதரின் பாதங்களில் படிந்திருந்தன.

''எப்பேர்ப்பட்ட மனுஷர் தெரியுமா? இன்னைக்கு என் ஆட்டத்துல நீ பார்க்கிற எல்லாமே அவர் போட்ட பிச்சைதான்!''

''ஆட்டத்துலயா? அவர்கிட்டே நீ சங்கீதம்தானே கத்துண்டே?''

''ம். பதிலுக்குக் கொஞ்சம் எங்க பரம்பரை பாட்டுகூட கத்துக் கொடுத்தேன். எண்ணூறு வருஷமா நாங்க கோயில்கள்ல ஆடற பரம்பரைன்னு அவருக்கு ரொம்ப மரியாதை. ஆனால், வேடிக்கை பாரு! என் ஆட்டத்துக்கு அர்த்தம் கிடைச்சதே நான் அவர்கிட்டே பாட்டு கத்துக்க ஆரம்பிச்சப்புறம்தான்.''

''அதெப்படி...?''

''அதுவரைக்கும் நான் கத்துக்கிட்டதும் பழகினதும் கலைஞர்கள்கிட்டே. ஆனா முத்தண்ணா ஒரு ஞானி. மஹாஞானி! எல்லாமே அர்ப்பணம்தான் அவருக்கு. சங்கீதமும் சாஹித்யமும் அவருக்கு பக்தி யோகம். அந்த அர்ப்பணிப்புல இருக்கிற

★ முத்துஸ்வாமி தீக்ஷிதருக்கு திருவாரூர் கமலம் என்ற சிஷ்யை இருந்தது வரலாறு. இக்கதையின் மற்ற அம்சங்கள் முற்றிலும் கற்பனை.

''விளையாட்டு வினையாயிடும் என்ற பழமொழி என் விஷயத்துல ஒத்துப் போச்சு!''

''எதை வச்சு சொல்றே?''

''நான் ஒண்ணாவது படிக்கிறப்ப என் மாமா பொண்ணுதான் எனக்குன்னு சொன்னவங்க இப்ப நிஜமாகவே அவளை எனக்குக் கட்டி வச்சுட்டாங்களே!''

- எஸ். புவனா சாமா



ஆழம், நிம்மதி, விச்ராந்தி எல்லாத்தையும் கிட்டேயிருந்து அனுபவிக்கக் கிடைச்சதுல எனக்குள்ளே என்னமோ ஆச்சு! அதுக்கப்புறம் இந்த கமலம் வேறேதான். அவ ஆட்டம் வேறேதான். அதுவும் கூட குருநாதர் கிருபை தான். இல்லையானா கிடைக்காது...'' கமலம் கண்ணீர் பெருக்கினாள். அவள் மேலும் துயரத்தில் ஆழ்ந்திருக்க தாண்டவன் உரையாடலைத் தொடர்ந்தான்.

''சரி, மூணு மகான்கள் இந்தத் திருவாரூர்ல பிறந்ததைப் பத்தி நீ கேட்கலை. ஒருவேளை கேட்டிருந்தா குருநாதர் என்ன சொல்லியிருப்பார்னு நினைக்கறே?''

''தெரியலையே தாண்டவா! உன் ஊர்ல கூடத்தான் அருணாசல கவியும் மாரிமுத்தா பிள்ளையும் உனக்குப் பேர் குடுத்திருக்கிற முத்துத்தாண்டவரும் அவதாரம் பண்ணினா. வாழ்க்கையின் விந்தைகளுக்கு ஒரு அழகு இருக்கு. அதை ரசிச்சுட்டுப் போயிடணும்; இழை இழையா பிரிச்சு பதில் தேடக் கூடாது தெரியுமோ!'' - அவள் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''வாஸ்த்தவம்தான். எத்தனையோ கேள்விகளுக்கு நமக்குப் பதில் தெரியறதில்லே. அதனாலேயே பதில் இல்லாமல் போயிடறதில்லையே...'' என்றான்.

சடாரென்று அவன் கண்களைச் சந்தித்த அவள் பார்வையின் ஊடுருவல் முகத்தைத் தாண்டிப் பாய்ந்தது. அதன் வலிமை அவனுக்கு ஓர் ஆயுளின் பலத்தை அள்ளித் தந்தது. இருவரது பார்வைகளும் பிரியவியலாமல் கோத்திருக்க, மெள்ள, தீர்மானமாக வெளிவந்தன அவன் வார்த்தைகள்.

கமலத்தின் கண்கள் கலங்கியிருந்தன. நினைவுகளோ முத்துஸ்வாமி தீக்ஷிதரின் பாதங்களில் படிந்திருந்தன.

''தியாகேசனையும் அம்பாளையும் அலங்காரத்தாலே அடைச்சு மறைச்சுட்டா, உள்ளே, அவாளுக்கு நடுவில குஹ பெருமான் இல்லாமலா போயிடுவான்? ரகசிய தத்துவமா அங்கே சிரிச்சுண்டு அவன் உட்கார்ந்தில்லியா என்ன!''

அவன் விளக்கத்தின் அழகில் சொக்கிப் போன கமலம் எழுந்து வந்து அருகே மண்டியிட்டு அமர்ந்தாள். மெதுவே அவன் வலக்கரத்தைப் பற்றி எடுத்து தன் நெஞ்சில் பதித்துக் கொண்டாள். ''இவ்வளவு அழகா பேசறப்போ, இந்தத் தாண்டவனைப் பார்க்க என் குருநாதர் இல்லையேன்னு தோணறது!''



ஈர முத்தம் ஒன்று அவன் கையில் பதிந்தது.

''தியாகேசா!'' என்று அழைத்தபடி அகன்றாள் கமலம். ''நேரமாச்சு, தாண்டவா! நான் பூஜையை முடிச்சுட்டுக் கோயிலுக்குக் கிளம்பணும். அங்கே வருவே இல்லே? பார்ப்போம்.''

எழுந்துகொண்டான் தாண்டவன். ''வருவேன்; வராம இருப்பேனா?'' தழுதழுக்கச் சொல்லிவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் வாசலிறங்கினான். அவள் முத்தத்தின் ஈரம், வற்றாத நதியின் ஜீவனாக அவன் நினைவைத் தண்ணென்று நனைத்தது. ●

அருள்வாக்கு

அன்பு



அன்பு என்பது என்ன? ஒரே பரமாத்மாதான் எல்லா உயிர்களுமாக ஆகியிருக்கிறது. பல உயிர்களாகும்போது ஒன்றையொன்று வேறுபடுத்தி வைத்து மாய பிரபஞ்ச நாடகம் நடக்கிறது. இதிலேயே எதிர் டைரக்ஷனில், ரொம்பவும் உத்தமமான அம்சமாக, வேறுபட்டவற்றை ஒன்றாக ஐக்கியப்பட வைக்கவும் பரமாத்மா அநுக்ரஹித்திருக்கிற forceதான் அன்பு. பொதுவாக மற்றவரிடமிருந்து நமக்கு ஒன்றைப் பெற்று லாபமடைவதாகவே மனுஷ்ய மனப்பான்மை இருக்கும். அதற்கு எதிர் மருந்தாக நம்மை இன்னொருவருக்குக் கொடுத்து அதில் நிறைவுபெறச் செய்வது அன்பு. ஆசைக்கும் அன்புக்கும் இதுதான் வித்தியாசம்: நாம் ஒன்றிடம் ஆசையாயிருக்கிறோமென்றால் நமக்கு அதனிடமிருந்து சந்தோஷம் தேடிக் கொள்கிறோம்; அன்பாயிருக்கும்போது நம்மால் அதற்கு சந்தோஷம் உண்டாக்குகிறோம். ஆசை என்பது வாங்கல்; அன்பு – கொடுக்கல். 'நமக்கு' சந்தோஷம் என்பது அந்த உயிரிடம் ரூப ஸம்பத்து, குண ஸம்பத்து – திரவிய ஸம்பத்து கூடத்தான் – இவை, அல்லது இந்த மாதிரி வேறு எதை நாம் அதனிடமிருந்து பெற்றால் நமக்கு சந்தோஷம் உண்டாகுமோ அவை இருந்தால்தான் ஏற்படும். இவற்றுக்காகவே அதனிடம் நமக்கு உண்டாகிற பற்றுதான் ஆசை. தப்பாக அதை அன்பு என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம்.

அன்பு என்பது அந்தக்கரணம்* உசந்த நிலையில் உள்ளபோது உண்டாவது. அப்போது மனசும் புத்தியும் அஹங்காரத்துக்குள்ளே இழுக்கப்பட்டு, அந்தக்கரணம் ஹ்ருதயத்துக்கு இடம் மாறி அங்கேயிருந்து வேலை செய்யும்.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

* அந்தக்கரணம் – ஆழ்மனம்



நடக்குமென்பார்;

மேஷம்: வெளிநாடு போக அழைப்பு வரும். இல்லற வாழ்க்கையில அடிக்கடி சண்டை சச்சரவுங்க வரும். தேவையில்லாம வாக்குவாதம் செய்யாதீங்க. உடம்பைக் கொஞ்சம் கவனிச்சுக்குங்க. கடன் தொல்லை மன வேதனையைத் தரும். எதிரிகள் பின்தொடர்வார்கள். ராகு / கேது / சனி வழிபாடு செய்துவர நன்மை உண்டாகும்.

ரிஷபம்: உங்கள் மனக் குழப்பம் தீர ஆன்மிக நண்பர்களிடம் வழி கேளுங்கள். பணக் கஷ்டம் இருக்கும். மறைமுகத் தொல்லை தொடரும். யாரிடமும் வாக்குவாதம் வேண்டாம். கணவன் - மனைவிக்குள் சண்டை சச்சரவு தொடரும். நெருங்கிய நண்பர்களே உங்களைக் காட்டிக்கொடுப்பார்கள். ராகு / கேது / சனி வழிபாடு சங்கடங்களைத் தீர்க்கும்.

மிதுனம்: மன உளைச்சல் தீரும். பணக் கஷ்டம் இருக்காது. குடும்பத்துல பிரச்னைகள் தீரும். உத்தியோகத்துல இட மாற்றம் உண்டு. வியாபாரத்துல நல்ல ஏற்றம் உண்டுங்க. குழந்தைகள் மூலம் சந்தோஷம் உண்டாகும். ராகு / கேது / குரு வழிபாடு நன்மையை அதிகமாக்கும்.

கடகம் : பூர்விகச் சொத்துகள் பாகப் பிரிவினை ஆகும். திடீர் பிரபலம் ஆவீங்க. உடல் ஆரோக்கியம் நல்லா இருக்கும். வியாபாரம் சூடுபிடிக்கும். கடன் தொல்லைகள் தீரும். தொலை தூரத்திலிருந்து நல்ல செய்தி வரும். ராகு / கேது / குரு வழிபாடு தீமையைக் குறைக்கும்.

சிம்மம் : சுபகாரியங்கள் தடையில்லாம நடக்கப்போகுதுங்க. தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த கூட்டாளிங்க விலகி ஓடுவாங்க. வீடு, மனை வாங்க நல்ல நேரம். யாரிடமும் வாக்குவாதம் செய்யாதீங்க. கல்வி ஞானத்துல பேர் வாங்குவீங்க. கணவன் - மனைவி உறவு உற்சாகமாக இருக்கும். ராகு / கேது / சனி வழிபாடு நன்மையை அதிகமாக்கும்.

கன்னி : சுப காரியங்கள் நீங்கள் நினைத்தபடி நடக்கப்போகுது. பணக் கஷ்டம் இருக்காது. எதிரிகள் தொல்லை விலகும். குழந்தைகள் படிப்பில் கவனம் செலுத்தவும். பாக்கிகள் வசூலாகும். உல்லாசப் பயணம் போவீங்க. உடல், மனம் நல்ல நிலையில் இருக்கும். ராகு / கேது / குரு வழிபாடு தீமையைக் குறைக்கும்.

துலாம்: இந்த வாரம் முழுதும் கோபம் இல்லாத மனிதராக இருக்கப் போறீங்க. புண்ணிய ஸ்தலம் போவீங்க. குடும்பத்துல இருந்த வாக்குவாதங்கள் குறையும். சுபகாரியங்கள் நடந்தேறுமுங்க. வியாபாரம் சுமாராக இருக்கும். பூர்விகச் சொத்து பாகப்பிரிவினை ஆகும். ராகு / கேது / சனி வழிபாடு நன்மையைத் தருமுங்க.

விருச்சிகம் : வேலையில் மாற்றம் வரப்போகுது. வீட்டைக்கூட மாற்றப் போறீங்க. நண்பர்களைப் பிரியப் போறீங்க. காதல் கசக்கும். பூமி மூலம் ஆதாயம் கிட்டும். கடன் தொல்லைகள் கட்டுக்குள்ளே இருக்கும். ராகு / கேது / குரு வழிபாடு தீமையைக் குறைக்கும்.

தனுசு : உங்களுக்கு இடமாற்றம் ஏற்படப் போகுது. வேலைப் பளு அதிகரிக்கும். அதே நேரத்துல பணக் கஷ்டம்

நடக்கும்!

தஞ்சை பரத்வாஜ்

14.06.09 முதல் 20.06.09 வரை

இருக்காது. நண்பர் வழியில பெரிய நன்மையை அடை வீங்க. செலவுகளைக் கட்டுக் குள் வைத்துக் கொள்வது அவசி யம். ராகு / கேது / சனி வழி பாடு நன்மையைத் தரும்.

மகரம்: வெளியூர் பயணம் போகப்போறீங்க. கணவன் - மனைவி உறவுகள் நல்ல நிலையில் இருக்கும். உத்தி யோகத்தில் பதவி உயர்வு உண்டு. வியாபாரத்தில் சாதிப் பீங்க. ராகு / கேது / சனி வழி பாடு நன்மையை அதிகரிக்கும்.

கும்பம்: உங்கள் 'வாக்கு' மேன்மையடையப் போகுது. புண்ணிய ஸ்தலம் சென்றுவரப் போறீங்க. திருமணப் பேச்சு கைகூடப் போகுது. நண்பரை விட்டுப் பிரியப் போறீங்க. புதிய தொழில் முயற்சி யில இறங்கப் போறீங்க. சனி வழிபாடு செய்து வர நன்மை பெருகும்.

மீனம்: வீடு / மனை வாங்க சூப்பரான நேரம். எதிரிகள் தொல்லை இனி இருக்காதுங்க. வியாபாரத்துல நல்ல லாபம் கொட்டும். தொழிலை இன்னும் விருத்தி பண்ணப் போறீங்க. குடும் பத்துல சுப காரியப் பேச்சு எழும். நீண்ட காலமாக இருந்து வந்த பிரச்னை முடிவுக்கு வரும்.



அக்கம் பக்கம்

ஐ.ஐ.டி. குடும்பம்!

இந்த வருடம் மும்பையைச் சேர்ந்த மாணவன் அனுஜ் கார்கரேவுக்கு ஐ.ஐ.டி.யில் அட்மிஷன் கிடைத்தவுடன் குடும்பமே குதூகலத்தில் மூழ்கியது. குடும்பப் பாரம்பரியத்தைக் காப்பாற்றி விட்டதாக அனுஜைக் கொண்டாடியது. காரணம் அனுஜின் அப்பா ஸ்ரீகிருஷ்ண கார்கரே, அம்மா அல்கா இருவருமே ஐ.ஐ.டி.யில் ஒன்றாகப் படித்தவர்கள். மூத்த மகன் சித்தார்த் இப்போது ஐ.ஐ.டி.யில் படிக்கிறான். வாவ்! ஐ.ஐ.டி. குடும்பம்! ***(எங்க ஊர்ல மூணு தலைமுறை மந்திரிங்க குடும்பம் இருக்குதுங்கோ!)***

சச்சின் டபுள் செஞ்சுரி

சச்சின் கிரிக்கெட் மைதானத்தில் அடிக்கும் செஞ்சுரிகள் பற்றி எல்லோருக்கும் தெரியும். ஆனால், அந்த மாஸ்டர் பிளாஸ்டர் அண்மையில் மும்பையில் அடித்த டபுள் செஞ்சுரி பற்றி உங்களுக்குத் தெரியுமா? சச்சின் 200 ஏழை மாணவர்களின் படிப்புச் செலவை ஏற்றுக் கொண்டிருக்கிறார். "இந்த விஷயத்தில் என் அப்பா தான் எனக்கு இன்ஸ்பிரேஷன். நான் சின்னவனாக இருந்தபோது, எங்கள் வீட்டுக்கு ஏழை மாணவன் ஒருவன் தினமும் நியூஸ் பேப்பர் போடுவான். அவனுக்கு காலேஜ் ஃபீஸ் கட்ட என் அப்பா பணம் கொடுத்து உதவுவார்" என்கிறார் சச்சின். ***(இதுக்கு இன்கம்டாக்ஸ் சலுகை உண்டுங்களா?)***

மன உளைச்சலுக்கு நஷ்ட ஈடு

மும்பைவாசியான பிரசாத் ஒரு கார் வாங்கினார். வாங்கின சில மாதங்களிலேயே காரின் செக்யூரிடி சிஸ்டம் ரிப்பேராகிவிட்டது. ரிப்பேரான செக்யூரிடி சிஸ்டத்தைச் சரி செய்து தருவதாக எடுத்துக் கொண்டுபோன கார் டீலர், அதைச் சரி செய்து கொடுக்க மூன்று மாதம் எடுத்துக் கொண்டார். அந்த மூன்று மாதமும், இரவில் தன் ஹோண்டா சிடி காரை யாராவது திருடிக் கொண்டு போய்விடுவார்களோ என்று பயந்து அடிக்கடி வந்து காரைப் பார்த்துவிட்டுப் போவார் பிரசாத். மனுஷருக்கு டென்ஷன் தாங்கவில்லை. நேரே நுகர்வோர் நீதி மன்றத்துக்குப் போய்விட்டார். வழக்கை விசாரித்த கோர்ட், பிரசாத்தின் மன உளைச்சலுக்கு நஷ்ட ஈடு, வக்கீல் செலவு, ரிப்பேர் செலவு என்று கார் டீலர் மொத்தம் இருபத்துமூன்று ஆயிரம் பிரசாத்துக்குத் தரவேண்டும் என்று தீர்ப்பு சொல்லி விட்டது. ***(காருக்கு ஒரு வாட்ச்மேன் போட்டிருந்தால், அந்தச் செலவையும் சேர்த்து வாங்கி இருக்கலாமே!)***

ஐரோப்பியர்களுக்கு மட்டும்

மும்பையில் 1871ல் கட்டப்பட்ட



வாட்சன் ஹோட்டல் மிகவும் பழைமை யானது. 'ஐரோப்பியர்களுக்கு மட்டும்' என்ற கொள்கையால் இந்த ஹோட்டலின் உள்ளே நுழைய ஜாம்செட்ஜி டாட்டாவுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. இதை அவமான மாக நினைத்த டாட்டா, அதற்கு அருகி லேயே கட்டிய பிரமாண்டமான ஒட்டல் தான் தாஜ் மகால் ஒட்டல். (இது கடந்த வருடம் தீவிரவாதத் தாக்குதலுக்குள்ளா னது தெரிந்ததே!) மும்பை மாநகராட்சி, 'வாட்சன் ஹோட்டல் கட்டிடம் மிகப் பழைமையாக இருப்பதால் இந்த வருடம் பருவ மழை சீசனுக்கு முன்னால் கட்டி டத்தை இடித்துவிடவேண்டும்' என்று நோட்டீஸ் அனுப்பி இருக்கிறது. ***(ஹோட்டல் இடிப்பு விழாவுக்கு ரத்தன் டாட்டாவைக் கூப்பிடுவாங் களா?)***



சச்சின் டபுள் செஞ்சுரி

சூப்பர் (டூப்பர்) நடிகர்

''சல்மான் கானுடன் நடிக்க விருப்பமா?'' இந்தக் கேள்வியை ஒரு நடைபாதை வியா பாரியை டிப் டாப் ஆசாமி ஒருவர் கேட்ட போது, அவருக்கு இன்ப அதிர்ச்சி. ஒரு நடைபாதை வியாபாரி ரோலில் நடிக்க வேண்டும் என்று சொல்லி ஆட்டோவில் அழைத்துக் கொண்டு போனார் மிஸ்டர் டிப்டாப். ஒரு ஹை டெக் சலூனுக்கு அழைத்துக் கொண்டு போய் ஸ்டைலாக முடிவெட்டச் சொன்னார். அதற்கு முன்னால் அவரது தங்க செயினை வாங்கிப் பத்திரப்படுத்திக் கொண்டார். முடி வெட்டி முடித்ததும், ஒரு ஷாப்பிங் மாலுக்கு அழைத்துச் சென்று புது உடை எடுத்துக் கொடுத்து, டிரையல் ரூமுக்குச் சென்று சரியாக இருக்கிறதா என்று அணிந்து பார்க்கச் சொன்னார். அப்போது பர்ஸ் மற்றும் செல்ஃபோன் போன்ற வற்றை வாங்கி வைத்துக் கொண்டார். புது உடை அணிந்து, டிரையல் ரூமிலிருந்து வெளியே வந்தால், அந்த டிப் டாப் ஆசாமியைக் காணோம்! ***(சல்மான் கானைவிட இந்த ஆசாமி சூப்பர் (டூப்பர்) நடிகர் போலும்!)***


- பரத் ராம்

ஒரு துப்பாக்கி... ரெண்டு புலிகள்..!

மரபின்மைந்தன் முத்தையா

போய்க் கொண்டிருக்கும் ஜீப்பில் சிவாஜி கையில் துப்பாக்கியுடன் அமர்ந்திருந்தார். பின்னிருக்கையில் கிருஷ்ணாரெட்டியும் மற்றவர்களும் இருந்தனர். தூரத்தில் நாய் போல் ஒரு விலங்கு ஓடுவது தெரிந்தது. நெருங்கி வரவர அது நாயல்ல, புலி என்றுணர்ந்த முத்துமாணிக்கம், ''கணேசா! சுடுங்க கணேசா!'' என்று அவசரப்படுத்தினார். ''நான் அடித்தால் குறி தவறக்கூடும்; நீங்கள் சுடுங்கள்'' என்றார் சிவாஜி. முத்துமாணிக்கம் வற்புறுத்தியதில் அரை மனத்துடன் சுட்டார். குண்டு பட்டதா இல்லையா என்று தெரியவில்லை. புதருக்குள் குதித்தது புலி.

இரவு கவிழத் தொடங்கியிருந்த நேரம் அடிபட்ட விலங்கை இருட்டில் தேடிப் போவது உசிதமல்ல என்பதால் மறுநாள் விடியற்காலை ஊருக்குள் போய் விசாரித்ததில், ''கிராமத்துக்குள் புலி இருக்கிறது'' என்று செய்தி கிடைத்தது. ஒரு குட்டைக்குப் பக்கத்தில் செத்துக் கிடந்தது புலி. பக்கத்தில் ஒரு மனிதன் காயங்களுடன் முனகிக்கொண்டு கிடந்தான். புலி அடிபட்டால் தண்ணீரைத் தேடி வருமாம். சேற்றில் நன்றாகப் புரண்டு ரத்தப்போக்கை அடைத்துக் கொள்ளும். குட்டை அருகிலுள்ள புதரில் படுத்துக் கிடந்த புலி நீர்நிலையை நோக்கி அதிகாலையில் வந்தபோது, அந்த ஆதிவாசி மேல் பாய்ந்து அடித்திருக்கிறது. பிறகு பக்கத்திலேயே விழுந்து செத்திருக்கிறது.



அடிபட்டவனை சிகிச்சைக்காக மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல முற்பட்டபோது, ஆதிவாசிகள் தாங்களே பச்சிலைகளைக் கொண்டு சிகிச்சை செய்வதாகச் சொல்லிவிட்டனர். அவர்களுக்குப் பணம் தந்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டனர் நண்பர்கள்.

அதே நாளில் தங்கள் முகாம் அருகே இரண்டு எருமைகளை வெவ்வேறு இடங்களில் கட்டி வைத்திருந்தார்கள். முகாம் அமைத்திருந்த இடத்தில் ஊற்றுநீர் ஓடி குட்டையாகத் தேங்கியிருந்தது. அதில் குளித்துவிட்டுப் புத்துணர்ச்சியுடன் வேட்டைக்குப் புறப்பட சிறிது தூரத்திலேயே குறுக்கிட்டது ஒரு காட்டுப் பன்றி. அதனைச் சுட்டு வீழ்த்தினார் சிவாஜி.

மறுநாள் காலையில் உறங்கிக் கொண்டிருந்த இவர்களின் காதுகளில், சுருதி சுத்தமாய் ஒலித்தது சுப்ரபாதம். மிருகங்களுக்கு மங்களம் பாடிய தங்களுக்கு, சுப்ரபாதம் பாடுவது யார் என்ற நினைப்போடு கண்விழித்துப் பார்த்தார்கள். எஸ்.வி.ரங்காராவ்! அவசரமாகப் புறப்பட்டு எருமை மாடுகள் கட்டப்பட்டிருந்த இடத்தில் சென்று பார்த்தால் புலி முதல் எருமையை அடித்துப் பாதி சாப்பிட்டிருந்தது. அடிபடாமல் தப்பித்த இன்னோர் எருமையை அவிழ்த்து வந்துவிட்டு, முதல் எருமை அடிபட்ட இடத்தில் மேலே இரண்டு மெச்சான்கள் அமைத்தனர். ஒரு மெச்சானுக்கும் மற்றொன்றுக்கும் போதிய இடைவெளி விட்டிருந்தார்கள். முதல் மெச்சானில் சிவாஜியும் லிங்கப்பூர் அரசரும் அமர்ந்திருந்தனர். அடுத்த மெச்சானில் முத்துமாணிக்கம்,



கிருஷ்ணா ரெட்டி. மாலை நான்கு மணியளவில் கலைப்பு வேட்டை துவங்கியது. சற்று நேரத்துக் கெல்லாமே சிவாஜி அமர்ந்திருந்த மெச்சானிலிருந்து துப்பாக்கி வெடித்த சத்தம் கேட்டது. சில நிமிடங்களிலேயே மீண்டும் துப்பாக்கி வெடிக்கும் சத்தம் கேட்டது. அதை அடுத்து சிவாஜியின் உற்சாகமான சிம்மக் குரல் கேட்டது. இரண்டு புலிகளைச் சுட்டு வீழ்த்தியிருந்தார்.




''சிவாஜியின் உற்சாகமான சிம்மக்குரல் கேட்டது! இரண்டு புலிகளைச் சுட்டு வீழ்த்தி இருந்தார்!''

சத்தி கிருஷ்ணசாமியின் நாடகக் குழு தமிழகமெங்கும் வீரபாண்டிய கட்டபொம்மன் நாடகத்தை நடத்தி வந்தது. திரைப்படத்தில் புகழ்பெற்ற நிலையிலும்கூட நாடகங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்த சிவாஜி, வீரபாண்டிய கட்டபொம்மன் நாடகத்தில் விருப்பத்துடன் பங்கேற்று வந்தார். ஆவேசமான வசனங்களை ஆக்ரோஷமான குரலில் அலைவீசும் உணர்ச்சி வேகத்தில் அடுக்கடுக்காய்ப் பேசிவிட்டு, அடுத்த காட்சிக்கு முந்தைய இடைவெளியில் தொண்டையெல்லாம் புண்ணாகி ரத்தத்தைத் துப்பும் அளவு அந்தப் பாத்திரத்தில் ஒன்றி நடிப்பார்.

கோவையில் இப்போதுள்ள சென்ட்ரல் திரையரங்க வளாகத்தில் வீரபாண்டிய கட்டபொம்மன் நாடகம் நடத்தப்பட்டது. அந்த நாடகத்துக்குத் தலைமைதாங்கியவர் முத்துமாணிக்கத்தின் பெரியப்பா வீ.கே. நல்லியப்பக் கவுண்டர். அந்த நாடகத்தில்தான் தம்முடைய பெரியப்பாவின் கையால் நாடக மேடையில் சிவாஜிக்கு யானைக்குட்டி ஒன்றைப் பரிசளிக்கச் செய்தார் முத்துமாணிக்கம். சங்க காலத்தில் அரசர்கள் புலவர்களுக்கு யானைகளைப் பரிசளித்ததாக இலக்கியங்கள் பேசுகின்றன. மகத்தான கலைஞன் ஒருவனுக்கு நட்பு முறையில் தந்த நிகரற்ற பரிசு இது. இன்றும் அந்த யானை, சாந்தி என்று பெயரிடப்பட்டு, தஞ்சாவூரிலுள்ள மாரியம்மன் திருக்கோயிலில் சிவாஜியின் காணிக்கையாக, இந்தப் பிரியமான நட்பை தன் பிளிறல் மொழியில் பேசிக்கொண்டே நிற்கிறது.

(வேட்டை தொடரும்)



துக்கடா நியூஸ்

புகழ்பெற்ற திருக்கொள்ளிக்காடு சனீஸ்வரன் கோயில் திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி அருகே அமைந்துள்ளது. வி.ஐ.பி.கள் அடிக்கடி விசிட் அடிப்பது வாடிக்கை. இங்கு வருகை தந்த சமீபத்திய வி.ஐ.பி. இலங்கை முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்கே!

- மா. மீனா சுந்தர், மன்னார்குடி

வாக்கு பலித்தது... வந்தாள் இனியா...!

விளமல் "அப்ப நான் ப்ளஸ் ஒன் ஸ்டுடண்ட். வாராவாரம் கல்கி வாசிக்க ஆரம்பிச்ச புதுசு. ப்ளஸ் டு முடிக்கிறப்ப வட்டமேஜை பகுதிக்கு வாசகர் கடிதம் எழுதி அனுப்பிச்சேன். 'பவித்ரமாணிக்கம் முருகேசன்' என்கிற பேர்ல அப்பப்ப பிரசுரம் ஆகும். திருவாரூர் திரு.வி.க. அரசு கலைக்கல்லூரியில் பி.ஏ. வரலாறு முடிச்சேன். அதுக்கு அப்புறம் தனியார்ல வேலைக்குப் போயிட்டேன். அன்னையிலேர்ந்து என் சம்பளத்துல காசு கொடுத்து வாங்கற வாரப் பத்திரிகையில 'கல்கி'க்குதான் முதலிடம்! 1992லேர்ந்து வாசகர் கடிதம், கேள்வி பதில் பகுதிகளுக்கு தொடர்ந்து எழுதி வர்றேன்!" என்கிறார் திருவாரூர் டி. முருகேசன்.

பதின்மூன்று வருடங்களாக தனியார் நிறுவனம் ஒன்றில் மருந்து விற்பனைப் பிரதிநிதியாக வேலை பார்த்து வருகிறார் முருகேசன். அவரது மனைவி மைதிலி. 2002ல் திருமணம். இரண்டு வயதில் பெண்.

"ஒரு அறையில் பெரிய அலமாரி நிறைய கல்கி வார இதழ்களா அடுக்கி வெச்சிருந்தார் என் கணவர். என்னன்னு கேட்டேன். 'அதுல ஏதாவது ஒரு புக்கை எடுத்துப் படி. அப்புறம் நீயே தொடர்ந்து படிக்க ஆரம்பிச்சுடுவே'ன்னு சொன்னாரு.



டி.முருகேசன், இனியா, மைதிலி

இப்படித்தான் தொடங்கினது என்னோட கல்கி வாசிப்பு.

கல்யாணம் ஆகி அஞ்சு வருஷம் ஆச்சு. எங்களுக்குக் குழந்தை இல்லை! போகாத கோயில் இல்ல; பார்க்காத மருத்துவம் இல்ல. அப்ப எல்லாம் கல்கியில வார ராசிபலன் தொடர்ந்து படிச்சுட்டு வந்தேன். எனக்கு அதுல நம்பிக்கை உண்டு. இப்போ தஞ்சை பரத்வாஜ் எழுதற மாதிரி,



அப்போ அக்னி சர்மா எழுதிக்கிட்டிருந்தார். அவர் எழுதின வாக்கு, என் வாழ்க்கையில அப்படியே பலிச்சது" என்றவர் அந்த நினைவுக்குள் மூழ்கினார்.

"என்னோடது துலாம் ராசி. துலாம் ராசிக்காரர்களுக்கு, இந்த வாரம் புத்திர பாக்கியம் கிட்டும்னு எழுதியிருந்தார். அந்த மாசம்தான் நான் 'கன்சீவ்' ஆனேன். டாக்டரம்மா உறுதி சொன்னப்புறம், அந்த வார கல்கியை என் கணவர்ட்ட காமிச்சேன். எங்க ரெண்டு பேருக்கும் ஏக சந்தோஷம். இப்ப ரெண்டு வயசுல இனியா, இந்த வீட்ல துள்ளி விளையாடிட்டு இருக்கா!" எனச் சொல்லி மகிழ்கிறார் மைதிலி முருகேசன்.


சடங்கன்பாடி கேள்விப்பட்டிருக்கீங்களா... அது வேற ஒண்ணுமில்லைங்க. தரங்கம்பாடியோட முன்னாள் பெயர். டைஃபாய்டு காய்ச்சலுக்குப் பிறகு மருந்து மாத்திரைகளால் தேறிவரும் குழந்தை போல இருக்கிறது, சுனாமிக்குப் பிறகான தரங்கம்பாடி. 17ம் நூற்றாண்டில் கீழைக் கடற்கரையில் டச்சுக்காரர்களின் முக்கிய வர்த்தகத்தளம். இன்று அவர்கள் இருந்துவிட்டுப் போன எச்சமாய் டேனிஷ் கோட்டையும், மிடுக்காக சில கட்டடங்களும் இருக்கின்றன; அதுவும் நிறமிழந்து. ''எனக்கு வோட்டுப் போட்டீங்கன்னா தரங்கம்பாடியை துபாய் ஆக்கிக்காட்டுறேன்னு போன எலெக்ஷன்ல மணிசங்கர் அய்யர் சொன்னார். அவர் சொன்னபடி ஆக்கியிருந்தார்னா ஒருவேளை இந்த எலெக்ஷன்ல ஜெயிச்சிருப்பார்'' - வாழைப்பழத்தில் ஊசியேற்றுகிறார் அப்துல் ஹமீது. ''இதையெல்லாம் மீறி இங்க பார்க்கறதுக்கும், ரசிக்கறதுக்கும், தெரிஞ்சுக்கறதுக்கும் சில விஷயங்கள் இருக்கு ஸார்'' - ஊர்ப் பாசம் பொங்கப் பேசியவரிடமே பொறுப்பை ஒப்படைத்தோம்... ''அப்ப உங்க ஊரை நீங்களே சுத்திக்காமிங்க...'' - அப்துல் ஹமீது நம்மைக் கொண்டுபோய் முதலில் நிறுத்திய இடம் பகிங்காம் கால்வாய்.

1. பகிங்காம் கால்வாய்

''சென்னையில மட்டுமில்லைங்க தரங்கம்பாடியிலயும் இருக்கு பகிங்காம் கால்வாய். நான் சின்னப் பிள்ளையா இருக்கறப்ப, இதுல படகுப் போக்கு வரத்து இருந்துச்சு. இப்ப சில மிஸ் லிங்க் இருக்கு. அதைச் சரி பண்ணினா இங்கேயிருந்து விசாகப்பட்டினம் வரைக்கும் போகலாம். அந்தக் காலத்துல விசாகப் பட்டினத்துக்கு இந்தக் கால்வாய் மூலமா தானே வெள்ளைக்காரன் உப்பு ஏத்திக்



கிட்டுப் போனான். இப்ப நீங்களே பாருங்க. ஆழமெல்லாம் தூர்ந்துபோய் சாக்கடை ஓடிக்கிட்டு இருக்கு. இதைவிடப் பெரிய கொடுமை, 'இது பகிங்காம் கால்வாய்தான்'ங்கறது ஊர்க்காரங்க பாதிப் பேருக்குத் தெரியாது. இதை மட்டும் சரிபண்ணினாலே எங்க ஊர் துபாய்க்குப் பக்கத்துலயாவது வந்துடும் ஸார்'' உம் போட்டுக்கொண்டே கால்வாயின் கிழக்குப் பக்கமுள்ள கோட்டைத் தெருவுக்கு வந்தோம். ஹமீதின் பேச்சு இப்போது தெருப் பக்கம் திரும்பியது.




* அப்துல் ஹமீது

2. நேர்க்கோட்டு வீதிகள்

''தெரு அழகுன்னா திருவிடைமருதூர் தான்னு சொல்வாங்க. அது தரங்கம்பாடிக்கும் பொருந்தும். இங்க எந்தத் தெருமுனையில நின்னு பார்த்தாலும் அந்தத் தெருவோட கடைசி முனை தெரியும். இது டச்சுக்காரங்க விட்டுப்போன ஒழுங்கு முறை. அதை இன்னைக்கு வரைக்கும் ஃபாலோ பண்ணிக்கிட்டிருக்கோம்.''- டேனிஷ்கோட்டை என்ட்ரன்ஸில் நம்மை நிறுத்திவிட்டு, ''இங்கேர்ந்து பாருங்க'' என்று கிழக்குப் பக்கமாக அவர் காட்டியபோது, தெரு முடியற இடத்துல கடல் ஆர்ப்பரிக்கறது தெரியுது. தூரம் கிட்டத்தட்ட ஒரு கிலோமீட்டர் இருக்கும். ''எனக்குத் தெரிஞ்சு நாலு தெருவைக் கடல் முழுங்கி இருக்கு. அதுல முக்கியமானது ஆரியநாட்டுத் தெரு.

“முதன்முதலில் மதிய உணவுத் திட்டத்தை நடைமுறைப் படுத்தியது தரங்கம்பாடியில்தான்; நடைமுறைப் படுத்தியவர் சீகன் பால்..!”







2

தட்டான் தெரு,
சலங்கைக்காரன் தெரு.
அதோ கடல்ல கட்டுமரம் போகுது பாருங்க. அந்த இடத்துல மணல் வீடு கட்டி விளையாண்டிருக்கேன். கரை யோரமா இருக்கே கல்லு... அதுகூட சுனாமிக்குப் பிறகு போட்டதுதாங்க''- என்றவரிடம் தெருவில் இருந்த சிலை யைச் சுட்டிக்காட்டி, ''இது'' என்று நாம் இழுக்க, அப்துல் ஹமீது முகம் பிரகாச மாக, ''சீகன்பால் ஸார்'' என்றார்.

3. சீகன்பால் சிலை

''இந்தியாவிலேயே முதன்முதலா (1718) அச்சுக்கூடத்தை நிறுவினதே இவர்தானே. கிறிஸ்தவ ப்ராட்டஸ்டண்ட் பாதிரியார். ஜெர்மன்காரர். தரங்கம்பாடியிலேர்ந்து அரை கிலோமீட்டர் தூரத்துல இருக்கற சித்தாதிரிப்பேட்டையில அச்சுக்கூடத்தை ஆரம்பிச்சிருக்கார். உப்புக் காத்து பட்டு அத்தனை மெஷினும் இப்ப துருபிடிச்சுக் கிடக்காம். பைபிளை முதன்முதலா தமிழ்ல அச்சிட்டதே இவர்தானே. இன் னைக்கு எல்லாத்தையும் புத்தகமா நாம பார்க்கறோம்னா அது இவர் புண்ணியத் தாலதான். 'முதன்முதலாக' என்று இருபத்து நான்கு 'முதன்முதல்'கள் இவ ரோட சம்பந்தப்பட்டிருக்கு. அதுல சில... பைபிளை முதன்முதலில் தமிழில் மொழிபெயர்த்தது; இந்தியாவிலேயே முதல் காகித ஆலையை நிறுவியது; முதன்முதலில் மதிய உணவுத் திட் டத்தை பள்ளியில் நடைமுறைப் படுத்தியது; இந்தியா வந்த முதல் கிறிஸ்தவ ப்ராட்டஸ்டண்டு பாதிரியார்...'' என்றவாறு நம்மை டேனிஷ்கோட்டைக்குக் கூட்டிப்போனார்.

4. டேனிஷ்கோட்டை

புயலடித்துக் கரை ஒதுங்கிய அந்தக் காலத்துக் கப்பலின் மேல்தளம் போல இருக்கிறது டேனிஷ் கோட்டை. ''இதை டென்மார்க் தளபதி 'ஓவ் கிட்டி'தான் கட்டி யிருக்கார். 1620ல தஞ்சை மன்னர் ரகுநாத நாயக்கர் அனுமதிகொடுக்க, கட்டிமுடிக்க கிட்டத்தட்ட ரெண்டு வருஷம் ஆச்சாம். வணிகத்துக்குன்னே கட்டப்பட்ட முதல் கோட்டை இதுதான். பின்னாடி இதைக் குடியிருப்புப் பகுதியாகவும், சிறைச்சாலையாவும் மாத்தியிருக் காங்க. மேல்தளம் குடியிருப்புப் பகுதி; கீழ்த்தளம், சிறைச் சாலை. இங்கேயிருந்து தஞ்சாவூர் அரண்மனைக்குச்






சுரங்கப்பாதை இருந்ததா சொல்றாங்க. வணிகம் நடந்ததற்குச் சான்றா அந்தக் காலத்து நாணயங்கள், போர்க்கருவிகள், கிட்டி சுருட்டு குடிக்கப் பயன்படுத்திய தாமிரக்குழாய் எல்லாத்தையும் கோட்டை மியூஸியத்துல பாதுகாத்து வெச்சுருக்காங்க. காலையில பத்துமணியிலேர்ந்து சாயங்காலம் அஞ்சு மணி வரைக்கும் கோட்டை திறந்திருக்கும். வெள்ளிக்கிழமை லீவு'' என்று சொல்லவும், கோயில் மணியோசை காற்றில் கலந்துவரவும் சரியாக இருந்தது. ''அதென்ன மணி ஓசை?'' நாம் கேட்க, ''மாசில்லாநாதா...'' என்று உச்சரித்தார் ஹமீது!

"தரங்கம்பாடிக்குப் பக்கத்தில் சித்தாதிரிப்பேட்டையில்தான் இந்தியாவிலேயே முதன் முதலாக அச்சுக்கூடம் அமைக்கப்பட்டது!"

5. மாசில்லாநாதர் மகிமை

கோட்டைக்கு வடக்கே அலைகளின் தாலாட்டில் வீற்றிருக்கிறார் மாசில்லாநாதர். ''இப்ப நீங்க பார்க்கறது கோயிலோட வெளித் தோற்றம்தாங்க. கடலுக்குள்ள கிட்டத்தட்ட ரெண்டு கிலோ மீட்டர் தூரம் வரைக்கும் இருந்துச்சு இந்தக் கோயில். லிங்கம் மட்டும் 15 அடி. சித்திரை மாசம் திருவிழா நடக்கும். கோயிலுக்குப் போற வழியில ரெண்டு பக்கமும் ஈச்சமரம் இருந்துச்சு. நாங்க முஸ்லிம்னாலும் வருஷா வருஷம் திருவிழாவுக்கு வந்துடுவோம். இப்ப நாங்க ஓடி விளையாண்ட இடமெல்லாம் கடலுக்குள்ள இருக்கு. 2004ல வந்த சுனாமில இந்தக் கோயில் நிலைமை இன்னும் மோசமாயிடுச்சு. நான் ஆரம்பத்துல சொன்ன ஆரியநாட்டுத் தெரு இந்தக் கோயிலுக்கு வடக்குப் பக்கமா இருந்துச்சு. ரொம்பவும் புராதனமான இந்தக் கோயிலை இந்து அறநிலையத்துறை மராமத்துப் பணிகள் செஞ்சு பாதுகாக்கணும்ங்க...'' - இத்தனை நேரம் கைடு போல ஊரைச் சுற்றிக் காட்டியவரின் கண்களில் குழந்தைப் பருவம் எட்டிப் பார்த்து விக்கித்து நின்றது.

வாசகர் யோசனை: **ஜானகிராமன், வேதாரண்யம்**



* டேனிஷ் மன்னர்

பிரம்பு கிராமம்!



சீர்காழி அருகே தைக்கால் கிராமம். பிரம்புப் பொருட்கள் உற்பத்தியில் பின்னி எடுக்கிறது. கடந்த இருநூறு வருடங்களாக பாய் பின்னுதலும், பிரம்பு முடைதலும் இங்கு குடிசைத் தொழில். பாய் உற்பத்தியைக் காட்டிலும், பிரம்புப் பொருட்கள் உற்பத்தியில் முன்னிலை வகிக்கிறது. இங்கு உற்பத்தியாகும் பிரம்புப் பொருட்கள் தமிழ்நாட்டின் நகரங்களுக்கு மட்டுமே சப்ளை ஆகின்றன.


''**எ**ங்களால் வேறு மாநிலங்களுக்கு அனுப்ப முடிவதில்லை. காரணம், வரி பிரச்னை. இதனைக் கேரளாக்காரர்கள் வசதியாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். சுற்றுலா வருபவர்கள் சொந்த உபயோகத்துக்கென வாங்கிச் சென்று, இரு மடங்கு விலை வைத்து விற்று விடுகிறார்கள். ரூபாய் ஐந்தாயிரத்துக்கு இங்கிருந்து வாங்கிச் செல்லும் பிரம்பு சோபா செட், அங்கு பத்தாயிரத்துக்கு விலை போகிறது!'' எனச் சொல்லி அதிரவைக்கிறார் எம்.எஸ்.ரகமத்துல்லா.

மூங்கில் இனத்தில் ரைடன் பிரம்பு முதல் தரம். மலேசியாவிலிருந்தும், அஸ்ஸாம் மாநிலத்திலிருந்தும் மூங்கில்கள் சென்னைக்கு வருகின்றன. அங்கிருந்து நான்கு மாநிலங்களுக்குப் போகிறது மூங்கில். தைக்கால் கிராம மூங்கில் உற்பத்தியாளர்களுக்கும், சென்னையிலிருந்து வந்து சேர்கிறது.

சுமார் முன்னூறு குடும்பங்கள். ஆயிரத்தைந்நூறு பேருக்கு வேலை வாய்ப்பு என பிரம்பினைப் போலவே நிமிர்ந்து நிற்கிறது தைக்கால் கிராமம். சோபா, நாற்

காலி, ஈஸி சேர், கட்டில், ஷெல்ஃப், டீப்பாய், டீ.வி. ஸ்டாண்ட், குழந்தைகள் தொட்டில், ஊஞ்சல்... என நீள்கிறது. ஊஞ்சலில் மட்டும் ஆறு வகை!

பொதுவாக மூங்கில் சோபா செட், அதிக விலையாக இருக்குமோ என்கிற எண்ணம், நடுத்தரக் குடும்பங்களிடம் உள்ளது. அப்படி ஏதுமில்லை. மூன்று பேர் அமரும் சோபா, இரண்டு சேர், ஒரு டீப்பாய் உள்ளடக்கியது ஒரு சோபா செட். நடுத்தரக் குடும்பத்தின் இடவசதி குறைவான சிறிய வீடுகளில் இவற்றைப் பயன்படுத்துவது சற்று சிரமம். அவ்வளவுதான்.




* சித்திக்



ரகமத்துல்லா

“தமிழ்நாட்டுல ரூபாய் 5,000க்கு வாங்கிட்டுப் போய் கேரளாவில் ரூபாய் 10,000க்கு விக்கறாங்க!”

“இதனையே ஒரு வேலையாகச் செய்பவர், தினசரி குறைந்தபட்சம் இருநூறு ரூபாயும் அதிகபட்சம் முன்னூறு ரூபாயும் கூலியாகப் பெறலாம். இதர கூலி வேலைகளுடன் ஒப்பிடுகையில் இது ஒன்றும் குறைந்த வருவாய் அல்ல. சிறிய அளவில் குடிசைத் தொழிலாகச் செய்ய விரும்புபவர்கள் ஐம்பதாயிரம் ரூபாய் முதலீடு செய்தால் போதும். நானும், இன்னொருவரும் கூட்டாக ஐந்து லட்ச ரூபாய் முதலீட்டில் இதனைப் பெரிய அளவில் செய்து வருகிறோம். முதல் போடுபவர்களையும் மோசம் செய்து விடாது. தொழிலாளர்களையும் துவளச் செய்யாது. தைக்கால் கிராமத்தின் பொருளாதாரத் தன்னிறைவுக்கும், வாழ்க்கைத்தர மேம்பாட்டுக்கும் பிரம்புப் பொருட்கள் உற்பத்தித் தொழில் உந்துசக்தியாக விளங்குகிறது!” எனக் கூறுகிறார் பிரம்புப் பொருட்கள் உற்பத்தியாளர் எம்.எஸ். ரகமத்துல்லா.



“பிரம்புப் பொருள் உற்பத்தியில பல பிரிவுல வேலை இருக்கு. ஒவ்வொரு எடத்துலயும் பீஸ் வொர்க் மாதிரிதான். இந்த வேலைக்கு சீசன் ஏதுமில்லை. வருஷத்துல எல்லா நாட்கள்லயும் வேலை இருக்கும். பொதுவா பிரம்புப் பொருட்கள்ல வருஷத்துக்கு ஒரு தடவை வார்னிஷ் அடிச்சா போதும். அம்பது வருஷத்துக்கு மேல நம்ம கூடவே இருக்கும். அத்தனை உறுதியானது; பார்க்க அழகானது. எங்க வாழ்க்கையைப் போல!” என்கிறார் பிரம்பு நாற்காலி உற்பத்தித் தொழிலாளி சித்திக்.

வாசகர் யோசனை:
ஆர்.ராஜதுரை, சீர்காழி



கொன்ற முகங்களும் கொல்லாத நினைவுகளும்


சைவ அசைவ பேதமில்லை
முகம் கொல்லுவதில்
மனிதரிடத்து

பகை மறந்து
வலியப் பேசுபவரை
முகம் திருப்பிக் கொல்லுதல்
கத்தியால் குத்துவதைக் காட்டிலும்
ரணமிக்கது.

நடு வழி நிறுத்தி
நலம் விசாரிப்பவரின்
முகம் மறந்திருத்தல்
இன்னும்...

துரோகம் செய்த நட்பு
துறந்த காதல்
வெறுத்த சுற்றம் என்னும்
முகங்களை
மறக்காதிருப்பதும் நாம்தான்.

நக்கீரன்



"இன்னைக்கும் தமிழகத்துக்குப் படியளக்கற மாவட்டம்னா அது ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டம்தான். எந்த வளத்துக்கும் இங்கே குறைச்சல் இல்லை. நிலவளம், அதைச் செழிப்பாக்குற நீர்வளம், வளப்படுத்தி அது சென்று சேரும் கடல்வளம்.... போதாததற்கு இயற்கை எரிவாயு திருவாரூர் நாகை மாவட்டங்கள்ல நாலு இடங்கள்ல கிடைக்குது. அதுவும் நரிமணத்தில் பெட்ரோலும் எரிவாயுவும். எல்லாம் இருந்தும் பொருளாதாரத்துல மத்த மாவட்டங்களை விட பின் தங்கி இருக்கே ஏன்? யாரும் யோசிக்கறது கிடையாது. குறிப்பா நாங்க தேர்ந்தெடுத்து சட்டமன்றத்துக்கும் நாடாளுமன்றத்துக்கும் அனுப்பி வைக்கறோமே மக்கள் பிரதிநிதிகள், அவங்க சுத்தமா கண்டுக்கறது கிடையாது. அவங்க கணக்கே வேறங்க. இதை என்னை மட்டுமில்லை. யாரைக் கேட்டாலும் சொல்வாங்க" - சுடச்சுட வந்துவிழுகின்றன வார்த்தைகள் திருவாரூர் நாகை மாவட்ட வர்த்தக சங்கத் தலைவர் சிவசுந்தரத்திடமிருந்து...

என்ன பண்ணனும்?

"தூத்துக்குடிக்கு இணையா நாகை துறைமுகத்தை ஆல்ட்டரேஷன் பண்ணனுங்க. வேதாரண்யத்துல விளையற உப்பை எங்களால தூத்துக்குடிக்குக் கொண்டு போக முடியாது. அதுக்கு ஆகற செலவும் அதிகம். நாகை கடல் நல்ல ஆழமானது. ஏற்கனவே கப்பல்கள் வந்து போய்க்கிட்டு இருந்ததுதானே. மீன் பிடி துறைமுகமா இருக்கற நாகையை வர்த்தகத் துறைமுக மாத்தினா எங்க பகுதியில வர்த்தகம் சூடுபிடிக்கும். அது சார்ந்த தொழில்களும் வளர்றதுக்கு வாய்ப்பு அதிகமா இருக்கும்."

சிவசுந்தரம்



என்ன வேண்டும்?



"அரிசி மாவுப்பொருட்கள் உற்பத்தி சார்ந்த தொழிற்சாலைகள் வந்தால், மண்ணுக்கேத்த விவசாயம் மலரும்!"

சாலை வழியா கொண்டு போகலாமே?


''இப்ப அப்படிதான் லார் கொண்டு போய்க்கிட்டு இருக்கோம். அங்கேயும் ரோடு சரியில்லையே. உப்பு உற்பத்தியில தமிழகத்திலே வேதாரண்யம் ரெண்டாவது இடத்துல இருக்கு. ஆனா, சாலை வசதிகள்ல ரொம்ப பின்தங்கித்தானே இருக்கு. நாகை வேதாரண்ய சாலை தேசிய நெடுஞ் சாலையாகூட இல் லையே? அப்படி மாத்தினா ஓரளவு சமாளிக்கலாம்.''

ரயில்பாதை என்னாச்சு?

''நாங்களும் அதையேதான் கேட்டுக் கிட்டு இருக்கோம். ஏற்கெனவே இருந்த மீட்டர் கேஜ் வழியாதான் வேதாரண்யம் அகஸ்தியம்பள்ளியிலேர்ந்து உப்பு மற்ற ஊர்களுக்குப் போனுச்சு. இப்ப அகலப் பாதையா மாத்துறோம்னு அதையும் பிரிச்சுப் போட்டாங்க. உள்ளதும் போச்சுடா நொள்ளக் கண்ணானு உட்கார்ந் திருக்கோம். வேளாங்கண்ணிக்கு வர்ற அகல ரயில் பாதையை, கோடி யக்கரை வரைக்கும் கொண்டுவரணும். திருவாரூர்ல இருக் கற அகலரயில் பாதையை திருத் துறைப்பூண்டி, வேதாரண்யம் வழியாக அகஸ்தியம்பள்ளி.. கோடியக்கரைவரை கொண்டு வந்தா சுற்றுலாவும் செழிக் குமே? முன்னாடி பூம்புகார்லேர்ந்து கல்லணைக்கு பஸ் வசதி இருந்துச்சாம். அது நவக்கிரக ஸ்தலங்கள் வழியா போகுமாம். கலாசார பேருந்துன்னு அறிவிச்சு அதை மறுபடியும் இயக் கணும்!''

"நாகை வேதாரண்யத்துக்கு இடையே உள்ள சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்ற வேண்டும்!"





நெற்களஞ்சியம் நல்லா இருக்கா?

''விவசாயம் பண்றதுக்கு இப்ப ஆள் கிடைக்க மாட்டேங்கறாங்க. விவசாயி யோட பிள்ளைங்களெல்லாம் இப்ப படிக்க ஆரம்பிச்சாச்சு. விவசாயம் கேட்பாரற்றுக் கிடக்கு. நாத்து நடுறதிலேர்ந்து, அறுவடை வரைக்கும் மெஷின் வந்திருச்சு. எவ்வளவு பேருக்கு இந்த வசதியெல்லாம் கிடைக்குது. போதாததற்கு காவிரிப் பிரச்னை வேற எங்க வயித்துல கிலி உண்டாக் குது. புயல் மழையால அதிகமா பாதிக்கப்படறது எங்க கடைமடை பகுதி



தாங்க. எங்க பகுதியில எலிக்கறி கிடைக்காம இருந்திருந்தா, பாதி விவசாயிங்க செத்திருப்பாங்க. திருவாரூர் மாவட்டங்கள்ல அதிகமான விவசாயிகள் பஞ்சம் பொழைக்க திருப்பூரைத்தான் நம்பி இருக்காங்க. நெல்லுக்கு அரசாங்கம் அறிவிச்சுருக்கற குவிண்டாலுக்கு ரூ1200யை ரூ1500-ஆ மாத்தணும். அரிசி, மாவுப்பொருட்கள் உற்பத்தி சார்ந்த தொழிற்சாலைகள் வந்தா மண்ணுக்கேத்த விவசாயம் வளரும்.''

"தூத்துக்குடிக்கு இணையாக நாகை துறைமுகத்தை மாற்ற வேண்டும்!"

டூரிஸ்ட் ஸ்பாட் அதிகமா இருக்கே?

''எங்க மாவட்டங்கள்ல இருக்கற அளவுக்கு இந்தியாவுல வேறெங்கேயும் கோயில்கள் கிடையாது. அதுவும் உலக அளவில புகழ்பெற்ற கோயில்களே இங்கதான் இருக்கு. அதை ஒழுங்கா எக்ஸ்போஸ் பண்ணிருக்காங்களானு பார்த்தா... கிடையாது. அதேபோல தரங்கம்பாடி, பூம்புகார், முத்துப்பேட்டை... எல்லாமே முக்கியமான சுற்றுலாத்தலங்கள். கவனிப்பு இல்லாம கிடக்கு. பூம்புகார் கலைக்கோயிலை மீண்டும் புதுப்பிக்கணும் ஸார். அது எவ்வளவு பழைமையான ஊர். சுற்றுலாப் பயணிகள் வந்து தங்கிப்போக விடுதிகள் கட்டிக்கொடுத்திருந்தாங்க. அது சுனாமில பழுதாயிருச்சு. அப்புறம் பழுதானது பழுதானதுதான்.''



ஓ.என்.ஜி.சி. ஒத்துவருமா?

''ஆமாங்க. திருவாரூர், நாகை மாவட்டங்கள் நாலு இடத்துல இயற்கை எரிவாயு எடுக்கறாங்க. ஆனா, அது எங்க போகுது, எவ்வளவு எடுக்கறாங்க. இன்னும் எத்தனை காலத்துக்கு எடுப்பாங்க எதுவுமே தெரிய மாட்டேங்குது. இதெல்லாம் பத்தி அரசாங்கம் வாயே திறக்கமாட்டேங்கறாங்க. அதுவும் நரிமணத்துல பெட்ரோலுக்கான கச்சா எண்ணெய் எடுக்கறாங்க. எங்க மாவட்டத்தைச் சேர்ந்தவங்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்குமா...? எதுவுமே தெரியல ஸார்.''

வாசகர் யோசனை : **ஜானகிராமன்**
வேதாரண்யம்

தப்பிக்குமா உப்புத் தொழில்?

வேதாரண்யம்


உப்பு உற்பத்தியில் தமிழ்நாட்டில் இரண்டாம் இடம் வகிப்பது, வேதாரண்யம். இங்கு சுமார் பத்தாயிரம் ஏக்கரில் உப்பளங்கள் அமைத்து, உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. ஏறக்குறைய கடந்த மூன்றாண்டுகளில் நாற்பது சதவிகிதம் உப்பு உற்பத்தி குறைந்துள்ளது. அதனால் உப்பள உரிமையாளர்களும், உப்பளத் தொழிலாளர்களும் வேதனையில் மூழ்கியுள்ளனர்.

"ஆறு மாசம்தாங்க எங்க பொழைப்பு. ஆரம்பத்துல நம்மூர்க்காரங்க ரொம்ப பேரு இந்த வேலையில ஈடுபட்டிருந்தாங்க. இப்ப நெலைமை மாறிடுச்சு. திருப்பூர் பனியன் கம்பெனிகளுக்கும், கேரளாவுல கட்டட வேலைகளுக்கும் உள்ளூர்க்காரங்க போய்ட்டாங்க. அதனால பீகார்லேர்ந்து ஆளுங்க வந்து வேலை செய்றாங்க. எங்களுக்குக் குடிநீரும், குளிக்க - சமைக்க நல்ல தண்ணியும் உப்பள உரிமையாளர்கள் அவங்க செலவுல கொண்டாந்து தருவாங்க. இங்ஙன ஒரு சொட்டு தண்ணி வாய்ல வைக்க விளங்காது. அதனால்தானோ என்னவோ எங்க வாழ்க்கையும் விளங்க மாட்டேங்குது!" என செண்ட்டிமெண்டாகப் பேசுகிறார் உப்பளத் தொழிலாளி கிருத்திகா.

உப்பளங்களுக்கு வரும் தண்ணீரில் நேரடிக் கடல் நீர் இருபது சதவிகிதம் மட்டுமே. கடலோரங்களில் ஆழ்குழாய் அமைக்கப்பட்டு அதன் மூலமாக உப்பளங்களுக்கு வந்து சேரும் நீர் எண்பது சதவிகிதம். நீர் கொண்டு வந்து சேர்ப்பதற்கென, மின்சாரம் அவசியம் தேவைப்படுகிறது. "உப்பு உற்பத்திக்கு 'சம்மர் அக்ரிகல்ச்சரல்' என்கிற பெயரும் உண்டு. இது ஒரு வகையான கோடை விவசாயமே. ஆனால், எங்களின் பயன்பாட்டுக்கென செலவாகும் மின்சாரத்துக்கு, அரசாங்கம், தொழிற்சாலை மின்கட்டணமே வசூலிக்கிறது. இந்தியாவின் மிகப் பெரிய உப்பு உற்பத்தி கேந்திரமான குஜராத் மாநிலத்தில், உப்பு உற்பத்தியாளர்களிடம் ஐம்பது சதவிகித மின்கட்டணமே வசூலிக்கப்படுகிறது. அதுபோன்ற சலுகை அளவிலான மின்கட்டணம், தமிழக உப்பு உற்பத்தியாளர்களிடம் வசூலிக்கப்பட

"உப்பளத் தொழிலாளர்களுக்கு அரசு ஊதியச் சலுகையும், குடி தண்ணீர் சப்ளையும் ஏற்பாடு செய்து தரவேண்டும்!"





அ. வேதரெத்தினம்.

வேண்டும்!'' எனக் கோருகிறார் சுதந்திரப் போராட்ட தியாகி வேதாரண்யம் சர்தார் வேதரத்தினம் அவர்களின் பேரன் அ. வேதரெத்தினம்.

''இந்தக் 'கோடை விவசாய'த்துக்கு மழைதான் பொது எதிரி. கோடையில மழை பெய்ஞ்சாலும் சரி, கோடை தவிர மத்த பருவங்கள்ல மழை பெய்ஞ்சாலும் சரி உப்பளங்கள் 'குப்'புனு ரொம்பிடும். மழை பெய்ஞ்சு ஓய்ஞ்சு அதை சரிபண்ணி வடிகட்டுங்காட்டியும் போதும் போதும்னு ஆய்டும். ஏன்டா இந்த தொழில எடுத்து கிட்டோம்னு போயிரும். அவ்வளவு சன்னையா சலிப்பு உண்டாகிடும். அதுக்குனு உப்பை உற்பத்தி பண்ணாம இருக்க முடியுமா?

விவசாயத்தைக் காட்டிலும் உப்பு உற்பத்திக்கு அதிக ஆட்களும் முதலீடும் தேவை. நிலத்துலேருந்து தொண்ணூறு அடிக்குக் கீழே ஆழ்குழாய் எறக்கி, மின் மோட்டார் மூலமாக உப்பளங்களுக்குத் தண்ணீர் கொண்டு வந்து



"உப்பு உற்பத்தியாளர்களுக்கு மின் கட்டணச்சலுகை வேண்டும்: உப்பளங்களுக்கு இடையே அரசாங்கம் சாலைகள் அமைத்துத் தரவேண்டும்!"



சேர்க்கிறோம். உப்பளங்களுக்கு இடையேயுள்ள சாலைகளை அந்தந்த உப்பள உரிமையாளர்களே தங்கள் சொந்தச் செலவுல போட்டுக்கறாங்க. அரசாங்கம் எதுவும் கண்டுக்கறது இல்லே. மாநில அரசும் மத்திய அரசும் உப்பு உற்பத்திக்கென எவ்விதச் சலுகையும் தருவது கிடையாது. காரணம், அரசாங்கம் உப்பு உற்பத்தியை ஒரு தொழிலாகவே எடுத்துக்கொள்ளவில்லை.


உப்பு உற்பத்தியாளர்களுக்கு மின் கட்டணச் சலுகை தர வேண்டும். உப்பளங்களுக்கிடையே அரசே சிறு சிறு சாலைகள் போட்டுத் தரணும். இந்திரா காந்தி பீரியடுல குஜராத் உப்பை, தென் மாநிலங்களுக்குக் கொண்டு போகக் கூடாதுனு தடைவிதிச்சாங்க. அப்ப தமிழ்நாட்ல உப்பு உற்பத்தி ஏறுமுகத்துல இருந்தது. 2001ல் அந்தத் தடையை நீக்கியது மத்திய அரசு. அதுலேருந்து தமிழ்நாட்டு உப்பு உற்பத்தி இறங்குமுகமா ஆகிடுச்சு.

உப்பள உரிமையாளர்கள் மட்டுமில்ல, தொழிலாளர்களும் கடுமையா பாதிக்கப்படுறாங்க. ஆம்பளைங்களுக்கு இருநூறு ரூபா சம்பளம். பொம்பளைங்களுக்கு நூறு ரூபா சம்பளம். கணக்கு பார்த்தா ஆறு மாசம் தான் வேலை. மீனவர்களுக்கு மூன்று மாத ஊதியச் சலுகை தர்ற மாதிரி, உப்பளத் தொழிலாளர்களுக்கும் அரசு ஊதியச் சலுகை தரணும். அப்பத்தான் தப்பிக்கும் இந்த உப்புத் தொழில்!'' எனக் குறிப்பிடுகிறார் வேதாரண்யம் உப்பள உரிமையாளர்களில் ஒருவரான பன்னீர் செல்வம்.

வாசகர் யோசனை:
ஆர்.சக்திமதி, வேதாரண்யம்

காதலின் வண்ணங்கள்









ஓவியர் மோகன் கனகசபை, மருத்துவத்தைத் தொழிலாகக் கொண்டவர். நாகை வசிப்பிடம். கண்ணன் மீது தீராத காதல் கொண்ட இவரது தூரிகை, கண்ணன் ராதையின் காதலையே தனக்கான களமாகவும் வண்ணமாகவும் கொண்டு இயங்குகின்றது. டாக்டர் ஆர்.திருநாவுக்கரசு, ரங்கபாஷ்யம் இருவருடனும் இணைந்து இவர் நடத்தி வரும் 'மூர்ராட்ஸ்' என்ற ஓவிய இயக்கம், கலை விமர்சகர்களின் பாராட்டையும் பெற்றது!



வாசகர் யோசனை:
வெற்றிப்பேரொளி,
திருக்குவளை

திருமறைக்காடு



வேதங்கள் வழிபட்ட கோயில்!

நான்கு வேதங்களும் மனித உருவெடுத்து இத்தலத்து இறைவனை வழிபட்டதாக ஐதிகம். வேதாரண்யேசுவரர் இறைவன். வேத நாயகி இறைவி. வேதாரண்யத்துக்கு அருகில் நாலுவேதபதி கிராமம். மனித உருவெடுத்த நான்கு வேதங்களும் அங்கு தங்கி, புஷ்பவனம் என்கிற ஊரில் மலர்கள் பறித்து வந்து இறைவன் - இறைவியை வழிபட்டு வந்துள்ளன. தாங்கள் வழிபாடு செய்த பிரதான வாசிலை அடைத்து விட்டன. பொதுமக்கள் பக்கத்தில் உள்ள திட்டிவாயில் வழியாகவே வந்து வழி பட்டுள்ளனர். நான்கு வேதங்களும் இக்கோயிலைச் சுற்றிலும் மரம் செடிகளாக இருந்து வந்து, இறைவனை தற்போதும் ஆர்வமாக வழிபட்டு வருவதாக நம்பிக்கை.



பக்தர்கள் திட்டி வாசல் வழியாக வந்து போவது அசௌகர்யம். திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் இங்கு எழுந்தருளியபோது, தமிழ்மறை பாடி - கதவினைத் திறக்கச் செய்தார் திருநாவுக்கரசர். மீண்டும் தமிழ்ப் பதிகம் பாடி கதவு அடைபடச் செய்தார்.




வேதநாயகி - வேதாரண்யேசுவரரே பார்வதி-பரமசிவன். இறைவன்-இறைவியின் மணக்கோலம் தரிசிக்க நேர்ந்தவர்கள் பாக்கியசாலிகள். கருவறையில் சிவலிங்கத் திருமேனிக்குப் பின்னர் இறைவனும் இறைவியும் திருமணக் கோலத்தில் புடைப்புச் சிற்பங்களாக எழுந்தருளி உள்ளனர். ஒவ்வோர் ஆண்டும் சித்திரை மாதத்தில் பார்வதி-பரமேசுவரன் திருக்கல்யாணம் நிகழ்த்தப்படுகிறது.

இத்திருத்தலத்து வேதநாயகிக்கு 'யாழைப் பழித்த மொழியாள்' என்கிற செல்லப் பெயரும் உண்டு. சரசுவதியின் வீணை நாதத்தைவிட மிகவும் இனிமையாக இருந்ததாம் வேத நாயகியின் குரல். பார்த்தாள் சரசுவதி! வீணையைத் துறந்துவிட்டு கைகளில் ஓலைச் சுவடிகளுடன் தவக்கோலத்தில் இருக்கிறாள் தனி சன்னிதியில்.

நூறாண்டுகளுக்கு முன்பாகவே, இத்திருக்கோயிலில் சுமார் நூற்றைம் பதுக்கும் மேற்பட்ட கல்வெட்டுக்கள் படி எடுக்கப்பட்டுள்ளன. வேதாரண்யம் விளக்கழகு என்பார்கள். மாலை நேர வழிபாடாக, வரிசையாக சரவிளக்குகள் ஏற்றி வைத்து வழிபடுவது, கண்கொள்ளாக் காட்சி. வேதங்களே வந்து வழிபடும் கோயிலுக்கு, மனிதர்களாகிய நாமும் சென்று வழிபட்டு வரலாமே!

வாசகர் யோசனை:

டி.வி.ராமமூர்த்தி, சென்னை



பூங்குழலி

அந்தி நேரம் அமைதி பெற்று விளங்கியது. கோடிக்கரையின் ஓரத்தில் கடல் அலைகள் அடங்கி ஓய்ந்திருந்தன. கட்டு மரங்களும் படகுகளும் கரையை நெருங்கிக் கொண்டிருந்தன. கடலில் இரை தேடச் சென்ற பறவைகள் திரும்பி வந்து கொண்டிருந்தன. கரையில் சிறிது தூரம் வெண் மணல் பரந்திருந்தது. அதற்கு அப்பால் வெகு தூரத்துக்கு வெகு தூரம் காடு படர்ந்திருந்தது. காட்டு மரங்களில் கிளைகள் ஆடவில்லை; இலைகள் அசையவில்லை. நாலாபக்கமும் நிசப்தம் நிலவியது. செங்கதிர்த்தேவன் கடலும் வானும் கலக்கும் இடத்தை நோக்கி விரைந்து இறங்கிக்கொண்டிருந்தான். மேகத்திரள்கள் சில சூரியனுடைய செங்கதிர்களை மறைக்கப் பார்த்துத் தாங்களும் ஒளி பெற்றுத் திகழ்ந்தன.



பூங்குழலி பாடலைக் கேட்பதற்காகவே, கடலும் அலை அடங்கி ஓய்ந்திருக்கிறது போலும்!

கரை ஓரத்தில் கடலில் ஒரு சிறிய படகு மிதந்தது. கடலின் மெல்லிய அலைப் பூங்கரங்கள் அந்தப் படகைக் குழந்தையின் மணித் தொட்டிலை ஆட்டுவது போல மெல்ல மெல்ல அசைத்தன. அந்தப் படகில் ஓர் இளம்பெண் இருந்தாள். அவளைப் பார்த்ததும் சேந்தன் அமுதன் தன் மாமன் மகளைக் குறித்து வர்ணனை செய்தது நமக்கு நினைவு வருகிறது. ஆம்; அவள் பூங்குழலியாகத்தான் இருக்க வேண்டும். பெயருக்குத் தகுந்தாற்போல் இவள் கூந்தலில் ஒரு தாழம்பூவின் இதழ் அழகு பெற்றுத் திகழ்ந்தது. நீண்ட கரிய கூந்தல் சுருண்டு சுருண்டு விழுந்து அவளுடைய கடைந்தெடுத்த தோள்களை அலங்கரித்தன. கடல் அலைகள் கரையில் ஒதுக்கும் சங்குகள், சிப்பிகள் முதலியவற்றை ஆரமாக்கி அவள் அணிந்து கொண்டிருந்தாள். ஆனால், இவையெல்லாம் அவளுடைய மேனியில்




வண்ணத் தூரிகை

பட்டதனால் தாங்களும் அழகு பெற்றனவேயன்றி, அவளை அலங்கரித்ததாகச் சொல்ல முடியாது. அழகே ஒரு வடிவம் தாங்கி வந்தால், அதற்கு எந்த ஆபரணத்தைக் கொண்டு அழகு செய்ய முடியும்?

பூங்குழலி படகில் ஒய்யாரமாகச் சாய்ந்துகொண்டு பாடினாள். அவளுடைய கானத்தைக் கேட்பதற்காகவே கடலும் அலை அடங்கி ஓய்ந்திருந்தது போலும்! அதற்காகவே காற்றும் வீசி அடிக்காமல் மெல்ல மெல்லத் தவழ்ந்து வந்தது போலும்! தூரத்தில் தெரிந்த காட்டு மரங்களும் இலை அசையாமல் நின்று அவளுடைய கானத்தைக் கவனமாகக் கேட்டன போலும்! வானமும் பூமியும் அந்தக் கானத்தைக் கேட்டு மதிமயங்கி அசைவற்று நின்றன போலும்! கதிரவன் கூட அந்த கானத்தை முன்னிட்டே மூலைக் கடலை அடைந்ததும் முழுகி மறையாமல் தயங்கி நிற்கிறான் போலும்!

அமரர் கல்கி



திருமகள் தோன்றிய திருக்குளம்!



அற்புதமான விளையாடல்களால் அனைவரையும் வசீகரித்த ஸ்ரீ கிருஷ்ணனின் திருக்கோலமும் அருமையானது. கையில் மத்து ஏந்திய 'உடுப்பி'; இடுப்பில் கரங்களை ஊன்றிய 'பண்டரிபுரம்'; பாம்பின் தலைமேல் நர்த்தனமாடும் 'ஊத்துக்காடு'; கையில் தாமரையைத் தரித்த 'குருவாயூர்'... இந்த வரிசையில், பசுவின் மேல் சற்றே சாய்ந்த நிலையில், ஒரு காதில் ஓலையும் மறு காதில் குண்டலமும் துலங்க, வலக்கரத்தில் சாட்டை ஏந்திய ராஜகோபாலனின் வடிவமும் அற்புதமானது. இந்தக் கோலத்தில் கண்ணனை நாம் தரிசிக்கின்ற தலம் மன்னார்குடி என்னும் ராஜமன்னார்குடி.



கோபிலர், கோப்பிரளயர் என்று பெயர் கொண்ட இரு ரிஷிகளுக்கு பகவான் தன்னுடைய கிருஷ்ணாவதார லீலைகளைக் காட்சியாக்கினான். அவற்றில் ஒன்றுதான், இந்த ராஜகோபாலன் திருக்கோலம்! முனிவர்கள் விரும்பியபடியே இங்கே திருக்கோயிலும் கொண்டான் என்கிறது தலபுராணம்!




சுமார் 1000 ஆண்டுகளுக்கு முந்தைய திருக்கோயில் என்பதை முதலாம் குலோத்துங்கன் காலத்துக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. ஏழு பிராகாரங்கள், ஏழு மண்டபங்கள், பதினாறு கோபுரங்கள், பதினெட்டு விமானங்கள், இருபத்து நான்கு சன்னிதிகள்... என்று பரந்து விரிந்த

திருக்கோயில்!

பிருகு முனிவரின் தவத்தை ஏற்று, அவரது மகளாக வளர்ந்த மஹாலக்ஷ்மி இங்கே ராஜகோபாலனை மணந்தாள். திருமகள் தோன்றிய திருக்குளம், இன்றும் திருப்பாற்கடல் என்ற பெயருடன் விளங்குகிறது.

மூலஸ்தானத்தில் தாமரையில் அமர்ந்தவளாக, செங்கமலத்தாயார் என்ற பெயருடன் காட்சியளிக்கிறார் தாயார். ஹேமாப்ஜ நாயகி என்று வடமொழியில் சொல்கிறார்கள்.



பரவாசுதேவப் பெருமாள் என்ற பெயருடன் நின்ற கோலத்தில் சங்கு சக்கரம் கதை தரித்து, அபயம் காட்டி நிற்கும் மூலவர், தங்கக் கவசம் அணிந்து கண்ணையும், கருத்தையும் ஈர்க்கிறார். என்றாலும், இங்கே கோலாகலம் எல்லாம் லீலா விநோதனான ஸ்ரீ வித்யா ராஜகோபாலனுக்குத்தான்.

செண்டலங்காரனாகக் காட்சி தரும் ஸ்ரீ ராஜகோபாலனின் நின்ற திருக்கோலம் (மூன்று வளைவுகள் கொண்ட) திரிபங்கமாய் அமைந்த அழகு, பார்த்தால் மட்டுமே அனுபவிக்கக் கூடியது. ஹரித்திரா நதி உட்பட பத்து புனித தீர்த்தங்களைக் கொண்ட இந்தத் திருக்கோயில், குழந்தைப் பேற்றுக்கான அருள் பாலிக்கும் விசேஷத் திருத்தலம் என்பதும் குறிப்பிடத் தக்கது. இங்குள்ள சந்தான கிருஷ்ணன் விக்ரகத்தை தங்கள் மடியில் எழுந்தருளச் செய்து, பூஜித்து, அதனால் புத்திர பாக்கியம் அடைகிறார்கள் என்பதை நேரில் காண முடிகிறது.

மாதம்தோறும் திருவிழா காண்கின்ற இத்திருக்கோயில், பக்தர்கள் தரிசனத்துக்காக காலை ஐந்து மணிக்கே நடை திறக்கப்படுகிறது.



இந்த ஆலயத்தில் காணப்படும் குறிப்பிடத்தக்க இன்னோர் அம்சம், தாயார் திருவீதி உலா மேற்கொள்வதில்லை. நாச்சியார் பிராகாரம் எனப்படும் ஐந்தாவது பிராகாரத்தில் மட்டுமே தேருலா காண்கிறாள். வேறெங்குமே இப்படியொரு தேருலா மரபில்லை என்பது விசேஷமானது.

குலோத்துங்க சோழ விண்ணகரம், வந்துவராபதி என்றெல்லாம் பெயர்

கொண்ட இந்த மன்னார்குடி திருக்கோயிலில், இந்த ஆலயத் திருப்பணி செய்த நாயக்க வம்ச மன்னர் களின் சிலாரூபங்களைக் காண முடிகிறது. கோயிலுக்கு எதிரில் 54 அடி உயரத்தில் உள்ள கெருட ஸ்தம்பம் ஒற்றைக் கல்லினால் ஆனது. அதன் உச்சியில் கருடனுக்கு சிறிய ஆலயமும் அமைந்திருக்கிறது.

'மறையோர் மிகுந்தது மன்னார்குடி' என்ற வழக்குமொழிக்கு ஏற்ப, ஜெர்மன் அறிஞர் மாக்ஸ் முல்லர் காண விரும்பிய ராஜு சாஸ்திரிகள் வசித்ததும் இந்த ராஜ மன்னார்குடிதான். இந்த ஆலயத்தின் பெருமாள் மற்றும் தாயார் தேர்களை தேசிய மேல்நிலைப்பள்ளி மாணவர்கள்தான் வடம் பிடித்து இழுக்கிறார்கள் என்பதும் ஆச்சரியமான விஷயம்!



கோயிலுக்கு எதிரில் 54 அடி உயரத்தில் உள்ள கருடஸ்தம்பம் ஒற்றைக் கல்லினால் ஆனது!

அவதார காலம் முடிந்த பின்பும், தன் அவதார லீலைகளை முனிவர்களுக்கு வெளிப்படுத்திய பகவான், ராஜகோபாலனாகக் காட்சியளிக்கும் அபூர்வம் இங்குதான்! அதனால்தான் நம்மாழ்வார் சொல்கிறார்:

''...மன்னப்படு மறை வாணனை வண்துவராபதி மன்னனை ஏத்துமின்...''

இதைவிட சுவாரஸ்யமாக வேறொன்றைச் சொல்லலாம்! 'மன்னார்குடி மதிலழகு' என்று வழக்கில் சொல்வார்கள். ஆனால், மூலஸ்தானத்தில் எழுந்தருளியுள்ள பரவாசுதேவனின் உயரமும், ஆலயத்தின் வெளி மதிலின் உயரமும் சமமாக ஒரே அளவில் இருக்கும். மதில் அளவு என்பதே மதிலழகாகி விட்டது என்றார் ஒருவர்! இதுவும் ஆச்சர்யம்தான்!

வாசகர் யோசனை : **சரஸ்வதி ராஜேந்திரன், மன்னார்குடி**

துக்கடா நியூஸ்

நூலகத் தந்தை எஸ்.ஆர்.ரங்கநாதன் பிறந்த ஊர், சீர்காழி. ஆனால், அங்குள்ள நூலகத்துக்கு அவர் பெயர் இல்லை. மேலும், நாகை மாவட்டத்திலுள்ள பெரும்பாலான நூலகங்களுக்கு சொந்தக் கட்டடம் இருக்க, சீர்காழியில் வாடகைக் கட்டடத்தில்தான் நூலகம் இயங்குகிறது.

- ஆர். ராஜதுரை, சீர்காழி

கூத்தனூர்



அர்ச்சனை தட்டில் பேனா!

கோயில் வாசலில், 'சுவாமிக்கு நெய் விளக்கு வாங்கிட்டுப் போங்க. கற்பூரம் - தேங்காய் - பழம் வாங்கிட்டுப் போங்க'ன்னு சொல்லித்தான் பார்த்திருக்கிறோம். இங்கு, 'பேனா வாங்கிட்டுப் போங்க சார்' எனக் குரல் கேட்கிறது. அர்ச்சனைப் பொருட்கள் கடைகளில் விதம் விதமான பேனாக்கள். குறிப்பாக மாணவ, மாணவிகள் பேனா உள்ளடக்கிய அர்ச்சனைத் தட்டுடன் சுவாமி கும்பிடச் செல்கின்றனர். மகா சரஸ்வதி கோயில் அர்ச்சனைத் தட்டில் பேனா அவசியம் இடம்பிடித்துள்ளது! எங்கே? திருவாரூர் மாவட்டம் பூந்தோட்டம் அருகே கூத்தனூரில்தான்.

இந்தியாவிலேயே சரஸ்வதிக்கென தனிக்கோயில் அமைந்திருப்பது தமிழ்நாட்டில்தான். வட இந்தியாவில் அன்னை காளியாகவும், மத்திய இந்தியாவில் மகாலட்சுமியாகவும், தென்னிந்தியாவில் மகா சரஸ்வதியாகவும் கோயில் கொண்டிருக்கிறாள்.



மாமன்னன் இரண்டாம் இராஜராஜன், தன் காலத்தில் அவைப்புலவராக விளங்கிய ஒட்டக்கூத்தருக்கு இவ்வூரைப் பரிசாக வழங்கினான். அதனால் கூத்தனூர் என்றாகிவிட்டது.

ஞானசரஸ்வதியின் திருக்கோலம் காணக் கண்கள் ஆயிரம் வேண்டும். சரஸ்வதியின் வடிவத்தை தேவிமகாத்மியம் இவ்விதம் வர்ணிக்கிறது: ''அமைதியே உருவாகி, வெள்ளுடை தரித்து, வெண் தாமரை மலர் மீது பத்மாசனத்தில் அமர்ந்திருக்கும் அன்னை, இடக்கீழ்க் கையில் புத்தகமும், வலக்கீழ்க் கையில் சின் முத்திரையும், வலமேல் கையில் அட்சர மாலையும், இடமேல் கையில் அமிர்த கலசமும் தாங்கி ஜடாமுடியுடன் துடியிடையும், கருணை புரியும் இரு விழிகளும், ஞானம் என்கிற மூன்றாவது திருவிழியும், புன்னகை தவழும் திருவாயுமாய் கிழக்கு முகமாக வீற்றிருந்து அருளாட்சி புரிந்து வருகிறாள்.''

சரஸ்வதி பூஜை தினத்தன்று இங்கு திருவிழா! கல்வி பயில்பவர்கள், தொழிலதிபர்கள் என வரிசைகட்டி வந்து வழிபாடு செய்கின்றனர். இசைக் கலைஞர்கள், நாட்டியக் கலைஞர்கள் தங்கள் வித்தைகளில் மென்மேலும் சிறந்திட, பிரார்த்தனை செய்து கொள்கின்றனர்.

வாசகர் யோசனை : **கோகுல கிருஷ்ணன்**



அந்த நாள் ஞாபகம்...

''இங்கே ஓர் 'உருப்படாத உருப்படி'க்குத் திருமணம் நடக்கிறது. அதை மற்றோர் 'உருப்படாத உருப்படி' வரவேற்று வாழ்த்திப் பேச வந்திருக்கிறது'' என்று 1953ல் நடந்த அந்தத் திருமண நிகழ்வில் அவர் 'வாழ்த்தி'ப் பேச, வந்திருந்த அனைவருக்கும் அதிர்ச்சி.



✱ தென்னன்

ஆனால், மாப்பிள்ளைக்கும் வாழ்த்திப் பேசிய வருக்கும் மனசுக்குள் நினைவுகள் மகிழ்ச்சி யோடு ரீவைண்ட் ஆக ஆரம்பித்தன. திருவாரூர் தெருக்களில் அந்த இருவரும் செல்லும்போது எதிர்ப்படுகிற எல்லாரும், ''உருப்படாத உருப்படிகள் போகுது பார்'' என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைத் தான் அவர் சொல்லியிருக்கிறார் என்று பிறகு எல்லோருக்கும் புரிய ஆரம்பிக்க, அனைவர் முகத்திலும் மகிழ்ச்சி! அது சரி... வாழ்த்தியவர் யார்... வாழ்த்தப்பட்டவர் யார்? முன்னவர் இன்றைய தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி; பின்னவர் அவரது நெருங்கிய நண்பரும் திருவாரூர் நகராட்சியின் தற் போதைய தலைவருமான தென்னன். கலைஞருடன் தாம் சம்பந்தப்பட்ட சில நிகழ்வுகளை தென்னன் நம்மோடு பகிர்ந்து கொள்கிறார்...

மிட்டாய் மீட்டிங்!

கலைஞரும், நானும் இன்னும் சில நண்பர்களும் சேர்ந்துதான் திருவாரூர்ல சிறுவர் சீர்திருத்தச் சங்கத்தை ஆரம்பிச்சோம். அப்ப இசைவேளாளர் குடும்பங்கள்ல ராத்திரி நேரத்துல பஜனை நடக்கும். பஜனை முடிஞ் சதும் எல்லாருக்கும் சுண்டல் தருவாங்க. அதுக்காகவே பசங்க கூட்டம் அலை மோதும். அங்க போற பசங்களை எங்க கூட்டத்துக்கு வரவழைக்கறதுக்காக கலைஞர் ஒரு ஐடியா பண்ணினார். சிறுவர் சங்கக் கூட்டங்கள்ல கலந் துக்கறவங்களுக்கு கூட்டத்தோட முடிவுல மிட்டாய் வழங்கப் படும்னு பிட் நோட்டீஸ் அடிச்சு விநியோகிச்சோம். கூட்டத்துல கலைஞர்தான் பேசுவார். அப்ப சுதந்திரப் போராட்டம் வீறு கொண்டு எழுந்த நேரம். எல்லா

கலைஞர், ''தம்பி தங்கைகளை அழைச்சுட்டு வந்தா ரெண்டு மிட்டாய்'' என்று அறிவிச்சார்!



குழந்தைகளும் 'காந்திஜிக்கு ஜே'னு கோஷம் போடுவாங்க. ''அப்படிச் சொல்லாதீங்க. 'காந்தி மகான் வாழ்க'ன்னு தமிழ்ல கோஷம் போடுங்க''ன்னு சொல்வார். பெரியார், அண்ணா கருத்துகளையும் பேசுவார். முதல் வாரம் கொஞ்சம் கூட்டம் கூடிச்சு. ரெண்டாவது வாரம், 'தம்பி தங்கைகளை அழைச்சுட்டு வந்தா அவங்களுக்கு ரெண்டு மிட்டாய்'னு அறிவிச்சார். அப்புறம் கூட்டத்தைப் பத்திக் கேட்கவா வேணும். அந்தச் சின்ன வயசுலேயே மத்தவங்களைக் கவர்ற அளவுக்கு வியூகம் வகுக்கத் தெரிந்தவர் கலைஞர்.

காளைமாட்டுக் கலகம்!

1952 தமிழக சட்டமன்ற எலெக்ஷன். அப்ப தி.மு.க. தேர்தல்ல போட்டியிடலை. ஆனால், 'திராவிட நாடு' கோரிக்கையை ஆதரிக்கறதா ஒப்பந்தப் பத்திரம் எழுதிக் கொடுக்கறவங்களுக்குப் பிரசாரம் பண்ணலாம்னு முடிவு எடுத்திருந்தாங்க. அப்படி எழுதிக் கொடுத்த சுயேச்சை வேட்பாளர் முத்தையா முதலியாரை ஆதரிச்சு, திருவாரூருக்குப் பக்கத்துல இருக்கற ஆச்சாப்புரம் பொதுக்கூட்டத்துல கலைஞர் பேசுறார். அப்போ காங்கிரஸ், காளை மாட்டுச் சின்னத்துல போட்டியிடுது. கூட்டத்துல கலைஞர் பேசிக்கிட்டு இருக்கும்போதே காங்கிரஸ்காரங்க காளை மாட்டோட புகுந்து, 'காளை மாட்டுக்கு வோட்டுப் போடுங்க'னு கலாட்டா பண்ணினாங்க. அவங்க விட்டெறிஞ்ச கல் ஒண்ணு கலைஞர் பக்கத்துல வந்து விழுது. அந்தக் கல்லை கையில் எடுத்த அவர், மைக்கைப் பிடிச்சு, 'நான் வரும்போதே என் அம்மாகிட்ட வாய்க்கரிசி வாங்கிட்டுதான் வந்திருக்கேன். அதனால எனக்குப் பயமில்லை'ன்னு பேச ஆரம்பிக்கறார். கலைஞ்சு போன கூட்டமெல்லாம் ஒண்ணு சேருது. கடைசியில கலைஞரை அந்த ஊர் மக்கள், ஊர் எல்லை வரை வந்து பத்திரமாக அனுப்பி வைத்தனர். இப்படி ஏராளமான நெருக்கடிகள்லயும் நீந்திவந்தவர் கலைஞர்!

''வருந்தாதே... வருத்தப்படுகிறேன்!''


முக்கரும்பு!

1957ல தி.மு.க. சார்பா குளித்தலை தொகுதியில கலைஞர் போட்டியிடறார். அந்த ஊர்ல இருக்கற ஒரே கட்சி, காங்கிரஸ்தான். எங்களால அங்க கூட்டம் போட முடியலை. கொடியேத்த முடியலை. கவுண்டர்கள் அதிகமா இருக்கற ஏரியா அது. காங்கிரஸ் மேல அதிருப்தில இருந்தவங்க ஒண்ணு சேர்ந்து பழனியப்பக் கவுண்டரை சுயேச்சையா நிறுத்தினாங்க. இதைக் கேள்விப்பட்ட காமராஜர், அவர்கிட்ட பேசி வாபஸ் வாங்க வெச்சுட்டார். இதையே கலைஞர் பிரசாரமா பண்ண ஆரம்பிச்சார். அதிருப்தி மக்களெல்லாம் ஒண்ணு சேர்ந்து, கலைஞர்கிட்ட வந்து, 'நீங்க கொடியேத்திக் கூட்டம் போடுங்க. நாங்க ஆதரவு தர்றோம்'னு சொன்னாங்க. அதுவரைக்கும் தி.மு.க. கொடியே பறக்காத

அந்த ஊர்ல முதன்முதலா கலைஞர்தான் கொடியேத்தி வைக்கறார். குளித்தலை தொகுதியை மூணு பிர்க்காவா பிரிச்சிருந்தாங்க. 'வெள்ளியணை பிர்க்காவுல தி.மு.க.வுக்கு அவ்வளவா ஆதரவு கிடையாது. அதனால அது நுனிக்கரும்பு. மாயனூர் பிர்க்காவுல பரவலான ஆதரவு இருந்துச்சு. அதனால அது நடுக்கரும்பு. குளித்தலை பிர்க்காவுல நல்ல ஆதரவு. அதனால அது அடிக்கரும்பு'ன்னு கலைஞர் சொல்வார். அடிக்கரும்புல அதிக வோட்டு வாங்கி அமோகமா வெற்றி பெற்றார்.

தோல்வியோடு ஒரு பொதுக்கூட்டம்!

தேர்தல் வியூகங்களை வகுக்கறதுல பெருந்தலைவர் காமராஜர் பெரும் கில்லாடி.



"இதான்யா கருணாநிதிக்கும் மத்தவங்களுக்கும் உள்ள வித்தியாசம்" என்றார் அண்ணா!

கலைஞருடன் அண்ணா நினைவிடத்தில் தென்னன் (வட்டத்தில்)

1958 தூத்துக்குடியில இடைத்தேர்தல். கலைஞர், நான், மதுரை முத்து, மதியழகன்... தேர்தல் வேலை செய்றோம். மதுரை முத்து, 'கலைஞர், வெளியில பேசுற பேச்சு, தொகுதி நிலவரம் எல்லாத்தையும் பார்த்தா நாமதான் ஜெயிப்போம். ரிசல்ட் வந்ததும் மதுரையில ஒரு பொதுக்கூட்டம் போடுவோம்'னு சொன்னார். ஆனால், காமராஜர் தொகுதிக்கு வந்து பிரசாரம் பண்ண ஆரம்பிச்சதும் நிலைமை காங்கிரஸுக்குச் சாதகமாக ஆரம்பிச்சு, ஜெயிச்சுட்டாங்க. அப்ப மதுரை முத்து, 'நிலைமை சரியில்லை. கூட்டத்தை கேன்சல் பண்ணிடறேன் கலைஞர்'னு சொன்னதும், 'இல்லை, இப்பதான் மக்கள்கிட்ட போகணும். கூட்டம் நடக்குது; நான் அதுல பேசுறேன்'னு பிடிவாதமா சொல்லிட்டார். தோல்விச் செய்தி அண்ணாவுக்குத் தெரிஞ்சதும், 'கருணாநிதி எங்கே?'ன்னு கேட்டார். 'மதுரையில பேசுறதுக்காகப் போயிருக்கார்'னு சொன்னதும், 'இதுதான்யா கருணாநிதிக்கும் மத்தவங்களுக்கும் உள்ள வித்தியாசம்' என்றார்.

வருந்தாதே... வருத்தப்படுகிறேன்!

எனக்கு கலைஞர் எழுதுற கடிதத்துல, 'உன் அன்புள்ள கருணாநிதி'ன்னுதான் முடிப்பார். சமீபத்துல கட்சி விஷயமா அவரைப் பார்க்கறதுக்காக, சென்னைக்குப் போயிருந்தேன். பேசிக்கிட்டிருக்கும்போது, 'சரி அப்புறம் பேசுவோம்'னு சொன்னார். நான் விடாம பேசிக்கிட்டிருந்தேன். 'இன்னைக்கு பேராசிரியருக்குப் பிறந்தநாள், அவரை வாழ்த்தப் போகணும்னு உனக்குத் தெரியாதா... ஏன் இப்படி தொந்தரவு பண்றே?' என்று கோபப்பட்டார். 'சரிங்க... கார்ல பேசிக்கிட்டுப் போவோமே'ன்னு சொன்னேன். அவருக்கு வந்ததே கோபம்! 'முதல்ல வெளியே போ... என் முன்னாடி நிக்காதே'ன்னு கத்த ஆரம்பிச்சுட்டார். நானும் அமைதியா ஊருக்கு வந்துட்டேன். பின்னாடியே கலைஞர்கிட்டேயிருந்து ஒரு கடிதம். 'உன்னிடம் கோபப்படாமல் வேறு யாரிடம் கோபப்படப் போகிறேன். எதையும் நினைத்து வருந்தாதே... நான் நடந்துகொண்ட முறைக்காக வருத்தப்படுகிறேன்' என்று எழுதியிருந்தார். அந்தக் கடிதத்தில் எனக்கு முதல்வர் கலைஞர் தெரியவில்லை; நண்பர் கருணாநிதிதான் தெரிந்தார்.

- சொல்லும்போதே கண்கள் பனித்திருந்தன. அதில் நட்பு ததும்பித் திரண்டிருந்தது!

ஸ்ரீவாஞ்சியம்



சிவனுக்கு எமன் வாகனம்!

''திருவாஞ்சியம் பற்றிப் பாடுவோர்க்கு பாவமில்லையே!' என்பது அப்பர் வாக்கு. அது வெறும் லோயர் வாக்கு அல்ல!'' - சொற்பொழிவுகளில் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் கமெண்ட் இது. 'திருவாஞ்சியத்து இறைவனை வழிபடுபவர்களுக்கு நோய்கள் வராது. துன்பம் வராது. அவ்வளவு ஏன்? எம பயமும் வராது!' என்றெல்லாம் சிறப்பித்துப் பாடுகிறார் சுந்தரர்.

ஸ்ரீ வாஞ்சியம், திருவாரூர் மாவட்டம், கும்பகோணம்



❖ தீர்த்தக்குளம்

- நன்னிலம் சாலையில் அச்சுதமங்கலம் என்கிற ஊருக்கு அருகே அமைந்துள்ளது. அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகியோரால் பாடல் பெற்ற திருத்தலம். ஸ்ரீ மங்களாம்பிகை சமேதர ஸ்ரீ வாஞ்சிநாதர் இங்கு கோயில் கொண்டுள்ளார்.

வாஞ்சிநாதர் உடனான மங்களாம்பிகைக்கு 'வாழவந்த நாயகி' என்கிற சிறப்புப் பெயரும் உண்டு. கோயிலின் உள்ளே வடபுறம் 'குப்த கங்கை' எனும் தீர்த்தக் குளம். இதில் நீராடினால் காசி சென்று கங்கையில் நீராடிய பலன் கிடைக்கிறது என்பதாக ஐதிகம்.

கார்த்திகை மாதம் ஞாயிற்றுக்கிழமைகளில் சிவ அம்சமாக விளங்கும் முருகப் பெருமான் இத்திருக்குளத்துக்கு எழுந்தருளி தீர்த்தவாரி கொள்கிறார். பக்தர்கள் அது சமயம் திருக்குளத்தில் நீராடுவது சிறப்புடையது. இக்கோயிலின் நுழைவுவாயில் கோபுரத்தையடுத்து இடதுபுறம், எமனுக்கு தனிச் சன்னிதி அமைந்துள்ளது. மாசி மாதத்தில் இறைவன் எமன் வாகனத்தில் வீதியுலா வருகிறார். ஆகவே, யம பயம் போக்கும் திருத்தலம் ஸ்ரீவாஞ்சியம்.

வாசகர் யோசனை:
கோகுலகிருஷ்ணன்

'ஸார், நான் சென்னையிலேர்ந்து சுதாகர் பேசுறேன். எனக்குச் சொந்த ஊர் சீர்காழி. எங்க வீடுகூட சட்டநாதர் கோயிலுக்குப் பின்புறமாதான் இருக்கு. வந்த இடத்துல பர்ஸை மிஸ் பண்ணிட்டேன். இப்ப ஊருக்கு வர்றதுக்கே கையில காசு இல்லை. நீங்க வருவீங்கன்னு எங்க வீட்டுக்கு ஃபோன் பண்ணிச் சொல்லிட்டேன். பணம் வாங்கி ஏதாவது ஒரு பஸ்ல டிக்கெட் புக் பண்ணிடுங்க ஸார்.'

-அடுத்த ஒரு மணிநேரத்தில் எல்லாம் சுபம். சுதாகரும் வெறும் பாக்கெட்டோடு வீடு வந்து சேர்ந்து விடுகிறார். இப்படி ஒரு நாளைக்கு இருபது அழைப்பாவது வந்துவிடும் அந்த ஸாருக்கு. அவரும் இதனை ஒரு தொழிலாகவே செய்துவருகிறார். யார் அந்த ஸார்? வேற யாரு 'ஹைடெக் கணேசன்'தான். சொந்த ஊர் சீர்காழி. படிப்பு எஸ்.எஸ்.எல்.சி. வருமானம் எட்டாயிரத்திலிருந்து பத்தாயிரம்வரை. அவரோடு ஒரு வார்த்தை ஒரு பதில்...



ஹைடெக்

அதென்னங்க 'ஹைடெக்'? 'ஹைடெக்' என்கிற பேர்ல பிரிண்டிங் பிரஸ் வெச்சிருந்தேன். ★ **வெச்சிருந்தேன்னா?** இப்ப இல்லை. ★ **ஏன்?** தொழில் போட்டியால தொடர்ந்து நடத்த முடியலை. ★ **பிறகு?** சும்மாதான் இருந்தேன். ஆனா, தொடர்ந்து இருக்கமுடியலை. ★ **சரி?** தெருவுல இருக்கறவங்களுக்கு சின்னச்சின்ன உதவிகள் செஞ்சேன். அதுல கொஞ்சம் காசு கிடைச்சது.

★ **சின்னச்சின்ன உதவிகள்னா?** கரண்ட் பில் கட்டறது, மண்ணெண்ணெய், பெட்ரோல் வாங்கி வந்து தர்றது.

★ **எவ்ளோ?** கம்மிதான். ஆனா, அப்ப என் தேவைகளும் ரொம்பக் கம்மி!

★ **இப்பவும் செய்யறீங்களா?** எப்பவும் செய்வேன் ஸார்.

★ **வேறென்ன செய்யறீங்க?** ஜாப் அப்ளிகேஷன் விக்கறது. ஸ்டாம்ப் பேப்பர்ஸ் விக்கறதுக்காக லைசென்ஸுக்குக்கூட அப்ளை பண்ணிருக்கேன்.

★ **டிக்கெட் புக் பண்ணுறது?** நாலு

துக்கடா நியூஸ்

இந்திய அளவில் நாடி ஜோதிடத்துக்குப் பெயர் பெற்ற ஊர் வைத்தீஸ்வரன்கோயில். நாகை மாவட்டத்திலுள்ள இந்த ஊர், அமரர் கல்கி பிறந்த 'புத்தமங்கலம்' செல்லும் வழியில் உள்ளது!

- விஜயன், திருவெண்காடு



வருஷமா!

★ **முதல் கஸ்டமர்?** வள்ளுவக்குடி சிவராமன். ஈ.பி.ல வேலை பார்க்கறார். ★ **மறக்கமுடியாத அனுபவம்?** நிறைய பேர் ஏமாத்திருக்காங்க ஸார்.

★ **குடும்பம்?** ஒரு பொண்ணு; ஒரே ஒரு மனைவி. ஆசிரியை!

★ **அவங்க உதவுறாங்களா?** நான் அவங்களைத் தொந்தரவு பண்றது இல்லை!

★ **எதிர்காலத் திட்டம்?** கம்ப்யூட்டர் சென்டர் ஆரம்பிக்கணும்.

★ **அவ்வளவுதானா?**



● கணேசன்

கணேசன்!

ஆரம்பிச்சுப் பாருங்க... தெரியும்.

வாசகர் யோசனை :

ஆர்.ராஜதுரை,
சீர்காழி

சீர்காழி

சம்பாபதி, காகந்தி, பலர் புகழ் மூதூர், மண்ணகத்து வான்பதி, சபேரியஸ்...இவையெல்லாம் என்னவென்று கேட்கிறீர்களா... காவிரிபூம்பட்டினம் என்றழைக்கப்படும் பூம்புகாரின் மற்ற பெயர்கள். சமீபத்தில் இங்கு நடந்த கடல் ஆராய்ச்சியின்போது, கி.பி.இரண்டாம் நூற்றாண்டுக்கு முன்பே இவ்வூர் புகழ்பெற்று விளங்கியதற்கான சான்றுகள் கிடைத்திருக்கின்றன.

- வீர.செல்வம், பூம்புகார்



''குழந்தை மனசு கொண்ட நம்ம தலைவரை எதுக்காக கட்சியை விட்டு நீக்கிட்டாங்க?''

''மகளிர் அணித் தலைவியோட இடுப்புல உட்கார்ந்துக்கிட்டுத்தான் வோட்டு கேட்பேன்னு அடம்பிடிச்சாராம்... அதான்!''

- ராம்சுப்ரமணி, திருவாரூர்



கூட்டத்தில்



''நம்ம தலைவருக்குத்தான் அரசியலில் 'அ, ஆ' கூட தெரியாதே... அப்புறம் எப்படி இவ்வளவு கூட்டம் அவரு பேச்சைக் கேட்க வந்தது...?''

''பொதுக் கூட்டம் முடிஞ்சவுடனே குலுக்கல் முறையில் பத்து பேருக்கு தங்கக் காசு தரப்போறதா சொல்லியிருக்காரே!''


- ராம்சுப்ரமணி, திருவாரூர்

''நேத்து இரவு எங்க வீட்டுல திருடன் புகுந்துட்டான்!''

''பிறகு?''

''எங்க கட்சித் தலைவருக்கு வோட்டுப் போடலைன்னா அடுத்த எலெக்ஷனுக்கு வோட்டுப் போட உங்க குடும்பத்துல யாருக்குமே கை இருக்காதுன்னு சொல்லிட்டுப் போயிட்டான்!''

- சீர்காழி எஸ்.புவனா





"கணவனும் மனைவியுமா சேர்ந்து நான் ஒரு சிந்து நீ ஒரு சிந்துன்னு பாடலை மாற்றி மாற்றிப் பாடறாங்களே ஏன்?"

"ரெண்டு பேருக்குமே ஜலதோஷம் பிடிச்சிருக்காம்!"

- சீர்காழி எஸ். புவனா

குலுக்கல்!



"அந்த ஜவுளிக் கடையை ஏன் இழுத்து மூடிட்டாங்க?"

"100% தள்ளுபடின்னு சரக்குகளை விற்றுத் தீர்த்துட்டாங்களாம்!"

- சீர்காழி எஸ்.புவனா



"தலைவரே... நேத்து பொதுக் கூட்டத்தில் நீங்க பேசினதை ஜீரணிக்கவே முடியலைன்னு அந்தத் தொகுதி மக்கள் பேசிக்கிட்டாங்களே...!"

"அதனாலதான் என் செலவுல ஆயிரம் சோடா பாட்டில்கள் வாங்கி அனுப்பியிருக்கேன்!"

- ராம்சுப்ரமணி, திருவாரூர்



நியூஸ் ஏந்தி பவன்

பத்தினிக் கோட்டம்

கேரளாவில்தான் கண்ணகிக்குக் கோயில் இருக்கிறது; தமிழகத்தில் இல்லை என்ற குறையைப் போக்கும் வண்ணம் பூம்புகாருக்கு அருகிலுள்ள மேலையூரில் பத்தினிக்கோட்டம் என்ற பெயரில் கோயில் அமைத்திருக்கிறார்கள். திருவெண்காடு, மயிலாடுதுறை, பூம்புகார் என மூன்று கடற்கரைச் சாலைகள் சேரும் இடம் தான் மேலையூர். கண்ணகி வீடுபேறு அடைந்த ஆடி அனுஷம் அன்று கண்ணகி சிறப்பு வழிபாடும் அபிஷேக ஆராதனைகளும் கடந்த முப்பது ஆண்டுகளாக நடைபெறுகின்றன; கூடவே சிலப்பதிகாரக் கருத்தரங்கக் கூட்டமும் கோயிலைக் கட்டியவர்கள் தாசில் பண்ணை குடும்பத்தினர். பூம்புகாரின் சிறப்புகளில் ஒன்றான இந்திரவிழா, சங்க காலத் தொடர்ச்சி விட்டுப்போகாமல் இன்றும் கொண்டாடப்படும்போது கண்ணகி கௌரவிக்கப்படுகிறாள். காவிய நாயகிக்கு கருங்கல்லால் கோயில் என்பது செய்யப்பட வேண்டிய மரியாதை தான்!

- இரா.ராஜசேகரன்,
மேலூர்




சம்பாபதி அம்மன்

பூம்புகாரின் காவல் தெய்வம் சம்பாபதி அம்மன். அந்த அம்மனின் திருக்கோயில் அமைந்த இடத்தில் உள்ள காவல் பூதங்களின் சிலைகள் மட்டும் சிதைந்த நிலையில் இன்றும் உள்ளன. தொல்பொருள் அறிஞர்களும் இச்சிலைகள், சங்க காலத்தைச் சேர்ந்தவை என்று கணித்துக்

யமுனம்பா சத்திரம்

நீடாமங்கலத்தைச் சேர்ந்த பூர்விகக் குடிகளுக்குக் குலதெய்வமாக விளங்குவது யமுனம்பா பாய். தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னன் பிரதாப சிம்மன், தனது மனைவியின் மீதான காதலை வெளிப்படுத்த நீடாமங்கலத்தில் கட்டிய வசந்த மாளிகைதான் இன்று 'யமுனம்பா சத்திரம்' என்றழைக்கப்படுகிறது. கலை நுணுக்கம் மிக்க இக்காதல் கட்டடம் முன்னூறு ஆண்டு கால வரலாற்றைக் கொண்டது. தஞ்சை கலெக்டரின் அதிகாரத்துக்கு உட்பட்டு இருக்கும் இக்காதல் மாளிகைக்குச் சொந்தக்காரியான யமுனம்பா, மன்னர் இறந்ததும் உடன்கட்டை ஏறியவராம். அழிந்து கொண்டிருக்கும்



இம்மாளிகையை சுற்றுலா மையமாக்கிப் பராமரிக்கலாம். அரசின் காதுகளில் எப்போது விழுமோ?

- என் செல்வராஜ்,
அய்யம்பேட்டை

குட்டி கல்லணை!



வெண்ணாறு, பாமினி ஆறு, கோரையாறு... மூன்றும் பிரியும் இடம் நீடாமங்கலத்துக்கு அருகே இருக்கிறது. சமீபகாலமாக சிறந்த சுற்றுலாத்தலமாக உருவாகி வரும் இவ்விடத்தை, குட்டி கல்லணை என்றே சொல்லலாம். இந்த அணை இருக்கும் இடத்திலிருந்து தென்மேற்கில் ஐந்து கிலோ மீட்டர் தொலைவிலிருக்கும் கோயில்வெண்ணி ஊரில் சோழ மன்னன் கரிகாலன் பிறந்ததாக வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அந்த ஊரில் பழைமையான, சங்க காலத்தைச் சேர்ந்த அய்யனார் கோயில் ஒன்றும் உள்ளது. இந்த ஊரின் ஆதிப் பெயர் வெண்ணிப்பரந்தலை.





- கணேசன்,
நீடாமங்கலம்



கூறியுள்ளனர். இப்படிப்பட்ட தொன்மை வாய்ந்த சிலைகள் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன. 'இது வெளிநாட்டில் இருந்திருந்தால் பொக்கிஷமாகப் பாதுகாப்பார்கள்' என்று வேதனைப் படுகின்றனர் பூம்புகார்வாசிகள்.

- வீர.செல்வம்,
பூம்புகார்



லிங்க வடிவ பிள்ளையார்

வேதாரண்யத்துக்கு அருகே குரவப்புலம் கிராமத்தில் இருக்கிறார் லிங்க வடிவத்தில் பிள்ளையார். தாயின் மடியில் விநாயகர் வீற்றிருப்பது மரபு. ஆனால், உலகிலேயே தந்தையின் மடியில் இங்கே விநாயகர் வீற்றிருப்பதால், அதிக வல்லமை வாய்ந்த விநாயகர் என்று போற்றப்படுகிறார். இங்கே ஒவ்வொரு கன்னிப்பொங்கல் அன்றும் கன்னிப் பெண்கள் ஒன்று கூடி பிள்ளையார் பிடித்து கும்மியடித்து வணங்கி மகிழ்வது கண்கொள்ளா காட்சி. சாதி மத பேதமின்றி அனைத்து மதத்தினரும் இக்கோயிலின் கருவறை வரை சென்று மலர் தூவி வழிபாடு செய்ய அனுமதி உண்டு! பூஜை புனஸ்காரங்கள் செய்வது எல்லாமே பெண்கள்தான்.

- வி.பி.கண்ணன், நடுக்காடு





நன்றி... நன்றி...நன்றி

திருவாரூர் - நாகை மாவட்ட சிறப்பிதழ் தயாரிக்க ஆலோசனை வழங்கி மலை போல் கடிதங்கள் குவிந்தன. அதில் தேர்ச்சியான தகவல்கள், நம்பகத்தன்மையான விவரணங்கள், படங்கள்... என அசத்திய வாசகர்களின் பட்டியல்தான் இது. இவர்களின் உதவியால்தான் இந்த இதழைச் சிறப்பாகத் தயாரிக்க முடிந்தது. அவர்களுக்கு சபாஷ் சல்யூட்!

(ஆ-ர்.)

அ. சக்திமதி - வேதாரண்யம், என். ரங்கநாயகி - கோலை, இரா.ராஜசேகரன் - பூம்புகார், மன்னை.வி. மகாதேவன், வெ. அனகா - மன்னார்குடி, ஜி.கோகுல கிருஷ்ணன்-விசலூர், என்.ரெங்கநாதன் - திருவாரூர், வி.சரஸ்வதி - திருத்துறைப்பூண்டி, க.சரவணன் - திருமஞ்சனவீதி, எம்.புஷ்பவல்லி - மன்னார்குடி, சிவபூசை தி.வேதாசலம் - மஞ்சக்கொல்லை, எம்.பழனிவேல்- திருமாளம், எம்.மங்கையர்க்கரசி - நெய்வேலி, ஆ.பிரேம்குமார் - குத்தாலம், திருமாளம் எம்.பழனிவேல்-திருவாரூர், ஆர்.ராஜதுரை-சீர்காழி, வீர.செல்வம்-பல்லவனம், ஆர்.ஜானகிராமன்-வேதாரண்யம், ஆர்.கே.திருப்பதிரங்கன் - மயிலாடுதுறை, ஆர்.ராம்சுப்ரமணி - திருவாரூர், செந்தமிழ்ச்செல்வி ராமலிங்கம் - செம்பொன்னார்கோவில், டி.வி.ராமமூர்த்தி-சோழிங்கநல்லூர், கி.கலா-காவேரிப்பூம்பட்டினம், அ.சம்பத் -திருவரங்கம், கீதா ரங்கராஜன்-திருக்கண்ணபுரம், டி.முருகேசன் - விளமல், சரஸ்வதி இராசேந்திரன் - மன்னார்குடி, என்.செல்வராஜ் - அம்மாப்பேட்டை, மு. சக்திவேல்-தேப்பாக்குடி,கி.சரவணன்- அண்ணா சாலை, திருவாரூர் சரவணன் - திருமஞ்சன வீதி, வி.பி.கண்ணன் - நடுக்காடு, தையு.ராமமூர்த்தி - அண்ணாநகர்.





தன்னை உயிருக்குயிராய் நேசிக்கும் சக நண்பனின் மரணத்துக்குக் காரணமானவர்களைப் பழிவாங்கும் மாணவனான சூர்யாவுக்கு ஏற்படும் நிலையை, குளிரக் குளிரச் சொல்ல வந்திருக்கிறார் படத்தின் இயக்குநர் அனிதா உதீப்.

பள்ளியில் மாணவர்களுக்கு இடையே நடக்கும் ஈகோ மோதல்களும், நட்பும், நேசிப்பும்தான் கதையின் மையம்.

படத்தின் தலைப்புக்கு ஏற்றவாறு அழகிய குளிர் பிரதேச, உயர் வகுப்பினர் மட்டுமே படிக்கும் லேக் வியூ மேல் நிலைப் பள்ளியில் கல்வி கற்க வருகிறான் மிகப் பெரும் ரவுடியான ஆறுமுகத்தின் மகன் சூர்யா. (பிந்துகோஷை ஞாபகப்படுத்தும் படியான) 'பப்ளு' என்கிற தன் பழைய நண்பனைச் சந்திக்கிறான். விடுதியில் ஒரே அறையில் தங்கிப் படிக்கின்றனர். அப்பள்ளியின் லீடராக இருக்கும் ரோஹித்துக்கும், சூர்யாவுக்கும் இடையே அடிக்கடி ஈகோவால் சண்டை. மாணவர் சங்கத் தேர்தலில் 'பப்ளு'வின் உதவியால் சூர்யா ஜெயிக்க, கோபத்தின் உச்சியில் பப்ளுவைக் கொன்று விடுகின்றனர் ரோஹித்தும் அவனது நண்பர்களும். அதன் பிறகு சூர்யா என்னவானான் என்பதே படத்தின் மீதிக் கதை.

சூர்யாவின் தாயாக வருபவர், சூர்யாவின் காதலியான தான்யா - இருவர் மட்டுமே படத்தின் பெண் கதாபாத்திரங்கள். இருவருமே போட்டி போட்டுக்கொண்டு ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காமல் தங்கள் பாத்திரத்தை வெளிப்படுத்தி சபாஷ் வாங்கிக் கொள்கின்றனர். அடுத்த சபாஷ் கலர்ஃபுல்லான, அதே சமயத்தில் சரியான ஆடை வடிவமைப்பும், ஒளிப்பதிவும் செய்த தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு!

இயக்குநர் லாஸ் ஏஞ்சல்ஸில் மூன்று வருட ஃபிலிம் மேக்கிங் கோர்ஸ் படித்து விட்டு, அமெரிக்காவின் பிரமாண்ட இயக்குநரான ஸ்டீவன் ஸ்பீல்பெர்க்கின் கம்பெனியில் வேலை செய்தவராம். ஆனாலும் கதையும், அதை வழிநடத்தும் திரைக்கதையும் தெளிவில்லாமல் போனதால் வெறும் அழகியலோடு மட்டுமே படம் முடிந்து போவதும், முடிவைச் சரியாகச் சொல்லத் தெரியாமல் விட்டிருப்பதும் படத்தின் மைனஸ்.

குளிர் நூறு டிகிரி - இளமை சூடு!

- கிராபியென் ப்ளாக்



70 முதல் 7 வரை - II

புனரபி ஜனனம்; புனரபி மரணம்!

(மரணங்களைப் பற்றி படிக்க விரும்பாதவர்கள் தயவுசெய்து என்னை மன்னித்து, இந்த அத்தியாயத்தைப் புறக்கணித்து விடவும்!)

''நீச்சல் குளத்தில் நீந்துவதற்காகச் சென்ற பத்து வயது சிறுவன் மூழ்கி இறந்து போனான்'' என்ற செய்தியை நாளிதழில் படித்து மனம் நொந்துபோயிற்று. ஏறத்தாழ இதே போல் என் தாய் வழிச் சித்தியின் பேரன் போட் கிளப்பில் சேர்ந்து, படகு செலுத்தப் பழக முற்பட்டு, கரையோரம் சிக்கிய படகை மீட்கிறேன் என்று நீரில் இறங்கி, புதை சேற்றில் கீழே இழுக்கப் பட்டு மாண்டு போனான். நீச்சல் குளமும் போட் கிளப்பும் நடத்துகிறவர்கள், எச்சரிக்கை உணர்வோடு செயல்படாதது எவ்வளவு பெரிய குற்றம்!

போலீஸில் புகார், வழக்குகள், நஷ்ட ஈடுகள் எல்லாம் ஒரு பக்கமிருந்தாலும் போன உயிர் திரும்பியா வரும்? இந்த உலகில் நம்மால் கணிக்க முடியாத இரண்டே விஷயங்கள், பிறப்பும் இறப்பும்தானே! என் வாழ்நாளில் நான் சிலருடைய ஆச்சர்யமான இறுதி நாட்களைப் பார்த்திருக்கிறேன்.

டாக்டர் அருணாசலம், டாக்டர் சஞ்சீவி ஆகிய பிரபல டாக்டர்கள் இருவரும் 'கல்கி' அவர்களைக் கவனித்துக் கொண்டார்கள். அவருக்கு ஓய்வு தேவை; மேலும், சில பரிசோதனைகளும் செய்ய வேண்டும் என்று கருதி அவரை பொது மருத்துவமனையில் (ஜி.எச்.) சேர்த்தார்கள். ஓய்வாவது, ஒன்றாவது! ''கல்கி'', ஆஸ்பத்திரி படுக்கையில் அமர்ந்தவாறே கல்கி தீபாவளி மலருக்குக் கதை எழுதினார்; புருப் பார்த்தார்! ஸ்பெஷல் வார்டில் இருந்த அவருக்கு ஸ்பெஷல் ஆஸ்பத்திரி சாப்பாடு வரும். ''தம்பி!'' என்று என்னை அழைத்து, ''அதை அப்படியே தட்டோடு திருப்பி அனுப்பினால் நன்றாயிராது; நீ சாப்பிட்டு விடு!'' என்று உத்தரவு போட்டு விட்டு அவர், வீட்டிலிருந்து வந்த ரசம் சாதம் சாப்பிடுவார். ஒரு வாரத்தில் ஆஸ்பத்திரியிலிருந்து வீடு திரும்பியும் விட்டார். திடீரென்று ஒருநாள் காலை, நெஞ்சைப் பிடித்துக் கொண்டு வாஷ்பேஸினுக்குச் சென்றார். நான் ஏதோ வயிற்றுக் கோளாறு என்று நினைத்து, அவர் நெற்றியை உள்ளங்கையில் தாங்கி உதவினேன். திரும்பி வந்து படுத்தவர், ''டாக்டருக்கு ஃபோன் பண்ணு'' என்றார். அருணாசலம், சஞ்சீவி இருவருமே வீட்டில் அச்சமயம் இல்லை. இதை நான் கூற, ''மடையா! அவா இல்லேன்னா உலகமே அஸ்தமிச்சுடுமா? டி.என்.கேக்கு போன் போடேன்!'' என்று கோபித்தார். டாக்டர் டி.என். கிருஷ்ணசாமி ஸான்தோமிலிருந்து பத்தே

கல்கி ராஜேந்திரன்

நிமிடங்களில் அடையாறு வந்து சேர்ந்தார். 'கொராமின்' ஊசி போட்டார். அப்போது தான் அப்பாவுக்கு ''ஹார்ட் அட்டாக்'' என்று எனக்குப் புரிந்தது. அந்த நிலைமையிலும் அப்பாவின் மனோதிடமும் தெளிவான சிந்தனையும் எனக்கு ஆச்சர்யமளித்தன.

முதல் ஹார்ட் அட்டாக்குக்குப் பிறகும், படுத்திருந்த நிலையிலேயே அவர், ''அமர தாரா'' தொடர்கதையின் அத்தியாயங்களைக் கற்பனை செய்து கூறி வர, நான் எழுதி பிரஸ்ஸுக்கு அனுப்பினேன். ஆடிட்டரை அழைத்து உயில் எழுதச் செய்து, 1954 டிசம்பர் 4ம் தேதி, வீட்டுக்கே தருவிக்கப்பட்ட ரிஜிஸ்திரார் முன்பு கையெழுத்திட்டார். அன்றிரவு எம்.எஸ். அவர்களையும் சகோதரி ஆனந்தியையும் பாடச் சொல்லி அமைதியாகக் கேட்டார். ஐந்தாம் தேதி காலை 5:30 மணிக்குக் காலமானார்! ''தேய்பிறை காணாமல் பூரண சந்திரனாக மறைந்து போனார்'' என்று ராஜாஜி சொன்னது, ''கல்கி'' ரசிகர்களுக்கு ஆறுதலையும் பெருமிதத்தையும் ஒருங்கே அளித்தது.



10

பல காலம் சென்று ராஜாஜி தம் முடிவு நெருங்குவதை உணர்ந்தார். டாக்டர் சத்தியநாராயணா அவரைப் பரிசோதித்துவிட்டு, ''ராஜாஜி, உங்களை ஜி.எச்க்கு அழைத்துப் போகிறேன்'' என்றார் (G.H.). உடனே ராஜாஜி, ''எதற்கு? என்னைச் சித்திரவதை செய்யவா?'' என்று கேட்டார். ஒரு வினாடி இந்தக் குத்தலான பேச்சில் திகைத்துப் போன சத்திய நாராயணா, ''ராஜாஜி, உங்களுடைய உணர்வுகள் எனக்குப் புரிகின்றன. ஆனால் டாக்டர்களாகிய நாங்கள் எங்கள் கடமையைச் செய்ய வேண்டாமா? நீங்கள் பாரதத்தின் தவப்புதல்வர். உங்களை தேசத்துக்குக் காப்பாற்றித் தர நாங்களும் முழு முயற்சி எடுக்க வேண்டாமா?'' என்றார்.

''ஆமாம், உங்கள் நிலைமை எனக்குப் புரிகிறது. உங்கள் விருப்பத்துக்குக் கட்டுப்படுகிறேன்'' என்றார் ராஜாஜி.

ஜி.ஹெச்சில் டாக்டர்கள் சில நாட்கள் போராடினார்கள். ஏதோ சர்வ கட்சி மாநாடு

போல, பக்கத்து அறையில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் கூடியிருக்க, ராஜாஜியின் உடல் உறுப்புக்கள் ஒன்றன் பின் ஒன்றாகச் செயலிழந்தன. இருதயம் மட்டும் துடிப்பை நிறுத்தவில்லை என்பதை 'மானிட்டர்' உணர்த்தியது. கிறிஸ்துமஸ் தினம் வரை காத்திருந்து, மகன் நரசிம்மன் விஷ்ணு சகஸ்ரநாமத்தை அவர் காதுகளில் ஓத, இருதயமும் படிப்படியாக நின்று, மானிட்டரில் நேர்க்கோடு உருவாயிற்று.

என் அண்ணன், (பெரியப்பா மகன்) ராமமூர்த்தி, புத்தமங்கலம் கிராமத்திலேயே பிறந்து, வளர்ந்து, வாழ்ந்தவர். கிராம அதிகாரி (கர்ணம்) என்ற முறையில் அந்த வட்டாரத்தில் செல்வாக்குடன் இருந்தார். அவர் பிள்ளைகள் நன்றாகப் படித்து நல்ல உத்தியோகத்தில்



"உங்கள் முடிவுக்குக் கட்டுப்படறேன்..."

அமர்ந்து, டில்லியில் வாழ்ந்தார்கள். அப்பா திடமாக இருக்கும்போதே அவரை காசி, கயை, ரிஷிகேசம், திரிவேணி சங்கமம் என்று புனிதமான இடங்களுக்கு அழைத்துப் போக எண்ணினார்கள். அவரும் சம்மதித்து டில்லி சென்றார். சுற்றுப்பயணத்தின் இடையில் காசிக்குப் போய், கங்கையில் மூழ்கி எழுந்து கரையேறினார். அப்படியே நெஞ்சைப் பிடித்துக் கொண்டு சாய்ந்து விட்டார். மகன்கள் ஈமக் கடன்களை கங்கைக் கரையிலேயே முடித்துக் கொண்டு கிராமத்துக்குத் திரும்பி, பத்தாவது நாள் காரியங்களைச் செய்தார்கள். ராமமூர்த்திக்குக் கிடைத்த பாக்கியம் உலகில் யாருக்குமே கிடைப்பது அரிதிலும் அரிது என்று நான் அடிக்கடி நினைப்பதுண்டு.

என் பாட்டி, (அம்மாவின் அம்மா) 103 வயது வாழ்ந்தாள்! என்னுடனேயே என் பராமரிப்பில்தான் இருந்தாள். ராஜாஜி ஏதாவது விசேஷத்துக்கு எங்கள் வீட்டுக்கு வந்தால், ''உங்களை ஆசிர்வாதம் பண்ணக் கூடியவள் நான் ஒருத்திதான் இருக்கேன்'' என்பாள்! ராஜாஜி சிரித்து, கைகூப்பி வணங்குவார். அவ்வளவு வயதாகியும் தன் காரியங்களைத் தானே பார்த்துக் கொள்வாள். அவளால் ஒருவருக்கும் ஒரு சிறு இடைஞ்சலும் இராது. திடீரென்று ஒரு நாள், ''நான் என் பிள்ளை வீட்டுக்குப் போகணும்; இப்பவே போகணும்'' என்று மூட்டை கட்டினாள். அவளுக்கு மரணம் பற்றிய நினைவு வந்து விட்டது என்றும் இறக்கும்போது மகன் பக்கத்தில் இருப்பதை விரும்புகிறாள் என்றும் புரிந்து கொண்டு, மாமா மகாதேவனிடம் ஒப்படைத்து விட்டுத் திரும்பினேன். அப்புறம் அதிக நாள் அவள் உயிர் வாழவில்லை.

''**ரா**ஜாஜியை விட ஒரு வருஷம் கூடுதலாய் வாழ்ந்துட்டேன்'' என்று சதாசிவம் கூறும்போது, பெருமிதமா, வருத்தமா என்று எங்களுக்குப் புரியாது. 95வது வயதில் அவர் இஸபெல்லா ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டதும் விஜயாவும் நானும் அவரைப் பார்க்கப் போனோம். தைரியம் சொல்ல நினைத்து நான் வாய் திறப்பதற்குள், ''எனக்கு ஒண்ணுமில்லே, நாளைக்கு வீடு திரும்பிடுவேன்; நீங்க தைரியமா

இருங்கோ!'' என்றார். அதே சமயம் என் அத்திம்பேர் ராமச்சந்திரனும் ஒரு அறுவை சிகிச்சைக்காக அப்போலோ மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருந்தார். மறுநாள் ஆபரேஷன். அன்று காலை நான் விஜயா வுடன் காரில் புறப்பட்டு அவளை இஸபெல்லாவில் இறக்கி விட்டேன். ''ஆபரேஷன் தியேட்டருக்கு அம்பி அண் ணாவை (அத்திம்பேர்) அழைத்துப் போறதுக்கு முன், அவரைப் பார்த்து தட்டிக் கொடுத்துட்டு திரும்பி இங்கே வந்துட றேன்'' என்று கூறி விடைபெற்றேன். சற்று தூரம் சென்றதும் அப்போலோவில் அத்திம்பேர் இருக்கும் அறை எண் என்ன என்று கேட்டுத் தெரிந்து கொள்ளவில்லையே என்ற நினைவு வந்தது. திரும்பி இஸபெல்லா வுக்கு வந்து விஜயாவை நெருங்கிய அதே சமயம் சதாசிவத்தின் இறுதி மூச்சு பிரிந்து கொண் டிருந்தது. விஜயாவுக்கும் எம்.எஸ். அவர்களுக்கும் உடனிருந்து ஆறுதல் கூறித் தேற்றும் கடமை யைச் செய்தேன். அறை எண்ணைக் கேட்டறிய மறந்ததும் அதற்காகத் திரும்பவும் சரியான சமயத்தில் வந்ததும் எல்லாம் ஈசன் செயல் தானே!



* ''ராஜாஜியைவிட ஒரு வருடம் கூடுதலாக...''

வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு எங்கள் பூர்விக கிராமமான புத்தமங்கலத் தில் வரதராஜப் பெருமாளுக்கு சிறப்பு ஆராதனைகளை முடித்துக் கொண்டு விஜயாவும் நானும் சென்னை திரும்பி னோம். அம்மாவிடம் பிரசாதங்களைக் கொடுத்தேன். அவற்றுள் சுவாமிக்கு சாத்திய சாமந்தி மாலையும் இருந்தது. ''கல்கி'' அவர்கள் படத்துக்கு மலர் அலங்காரம் செய்வது மனைவி ருக்மிணி அம்மா ளுக்கு தினசரி வழக்கம். அன்று பிரசாதமாக வந்த மலர்களை அலங் காரத்துக்குப் பயன்படுத்தினாள் அம்மா. ஞாயிற்றுக்கிழமையான தால் நான் ஆபீஸ் போகவில்லை. பிற்பகல் மூன்று மணி சுமாருக்கு காப்பி சாப்பிடலாம் என்று மாடி யிலிருந்து இறங்கி வந்தேன். ''அம்மா கூப்பிடறா'' என்று விஜயா சொன் னாள். அம்மாவின் அறைக்குள் நுழைந் தேன். நாற்காலியில் அமர்ந்திருந்தாள்.

''நான் பிழைக்க மாட் டேன் ராஜா'' என்றாள்.

''என்ன பண்ணறது உனக்கு? லக்ஷ்மி சதுர் வேதிக்கு (டாக்டர்) ஃபோன் பண்ணி வரச் சொல்றேன்'' என்றேன்.

''விஜயாவைக் கூப்பிடு'' என்றாள். அவள் உடனே வரவும், இருபக்கமும் எங்கள் இருவர் கைகளை யும் பிடித்துக் கொண் டாள். அப்படியே பின் னுக்குச் சாய்ந்து விட் டாள்.

93 வயது வாழ்ந்து, கடைசி வரை தன் காரியங்களைத் தானே கவனித்துக் கொண்டு, ஒருநாள் கூட படுத்த படுக்கை யாக இராமல் பிரதோஷ காலத்தில் மர ணத்தை வரவேற்ற அவள் பாக்கியசாலியா, அல்லது, அந்தக் கணத்தில் அவள் கை களைப் பற்றிக்கொள்ளும் வாய்ப்பு பெற்ற விஜயாவும் நானும் பாக்கியசாலிகளா? எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு இன்னமும் யோசித்துக் கொண்டுதான் இருக்கிறேன்!

(அடுத்த வாரம்: மோதிரக் கை குட்டுக்கள்)



இப்போது ஜீரோவுக்குத்தான் இளசுகள் மத்தியில் மதிப்பு. 'ஜீரோ'வாக அவர்கள் இப்போது நம்பியிருப்பது ஜிம்களைத்தான். அதென்னங்க 'ஜீரோ'வாவது? வேற ஒண்ணுமில்லை. உடம்பிலுள்ள தசைகளை எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்ளோ... குறைப்பது; முக்கியமாக இடுப்பு சதையைக் குறைப்பது! மேலும், ஜிம்முக்குப் போவது ஒரு ஃபேஷனாகிவிட்டது. ''எதுக்காக ஜிம்முக்குப் போறீங்க?'' யூத்களிடம் கேட்டோம். ஒவ்வொரு பதிலும் ச்சும்மா கும்கும்னு வந்தது.



'ஜீரோ'தான் இப்ப ஹீரோ..!

''முதல்ல வெயிட் குறைஞ்சாப் போதும்னுதான் ஜிம்முக்கு வந்தோம். ஆனால், இப்ப பாருங்க உடல், மனம் இரண்டிலுமே ஆரோக்கியமான முன்னேற்றம் இருக்குது. படிப்பில் நல்லா கான்சன்ட்ரேட் பண்ணமுடியுது. டீப்பா யோசிக்க நல்லா இன்வால்வ் ஆக முடியுது. எங்களுக்குள்ளேயே ஏதோ எனர்ஜியைப் புதுசா ஃபீல் பண்றோம். எல்லாத்துக்கும் மேல பாடியை 'ஜீரோ'வா கொண்டுவந்து ப்ரண்ட்ஸ் மத்தியில் ஹீரோவாகலாம்ல!'' என்றவர்கள், ''நிறைய ஃப்ரண்ட்ஸ் கிடைச்சிருக்காங்க. நல்லா

ஜாலியா கலாய்ச்சுட்டே இருக்க முடியுது. ஒரு ஆரோக்கியமான போட்டி எங்களுக்குள்ளே நடக்குது. இன்னொரு முக்கியமான விஷயம்... பிடித்த உணவு அல்லது ஸ்நாக்ஸை வெட்டோவெட்டுன்னு வெட்டிட்டு இருப்போம். ஆனா ஜிம்முல கிடைக்கிற எங்க மாஸ்டரோட டயட் அட்வைஸை ஃபாலோ பண்றதால அதே பிடித்தமான உணவை, ஸ்நாக்ஸை மெதுவா குறைச்சுச் சாப்பிடற மனநிலை வந்துவிட்டது'' என்று கோரஸாய்க் கும்மியடித்தனர்

சுறுசுறுப்பா ஃபீல் பண்றேன். உடலும், மனமும் நல்ல ரிலாக்ஸ் ஆக இருக்குது'' என்கிறார் ராமகிருஷ்ணா கல்லூரியில் பி.எஸ்.சி. கம்ப்யூட்டர் சயன்ஸ் இறுதி ஆண்டு படிக்கும் திவ்யா.

கார்த்திக் நாராயணன், குமரகுரு பொறியியல் கல்லூரி:





ஃபிட்னஸ் கண்ணா ஃபிட்னஸ்

அஞ்சனா, கீர்த்தி, கல்பகா, சௌம்யா.

''உடம்பு ஃபிட்னஸ், நல்ல கட்டான உடல்வாகு இரண்டையும் டெவலப் செய்து நல்ல மாடலாக வரணும். அதுக்கு ஜிம் ரொம்பவே கை கொடுக்குது.''

''**ஜி**ம்முக்குப் போற பழக்கம் வந்த பிறகுதான் என் ஆரோக்யம் இம்ப்ரூவ் ஆகியிருக்குது. ஃபாஸ்ட் ஃபுட் சாப்பிடுவது தான் வாழ்க்கையின் அன்றாட லட்சியம் என்று இருந்த நான், இப்பொழுது மாதம் ஒரு முறை ஃபாஸ்ட் ஃபுட் சாப்பிட்டாலே அபூர்வம். ஜிம்முக்கு வர ஆரம்பித்ததில் இருந்து ரொம்ப ரொம்ப

"ஜிம்முக்குப் போற பழக்கம் வந்த பிறகு என் ஆரோக்யம் இம்ப்ரூவ் ஆகியிருக்கு!"

தனியார் நிறுவனத்தில் வேலை செய்யும் சீனிவாஸ், ''ரொம்பவும் பரபரப்பா இருப்பேன். சில சமயம் எதைப் பார்த்தாலும் சலிப்பாக இருக்கும்! ஆனால் இங்கு ரெகுலராகப் பயிற்சி எடுக்க ஆரம்பிச்ச பிறகு உற்சாகம் ஊற்றெடுக்க, சோம்பல் என்னைப் பார்த்து சோர்ந்து ஓட, ரொம்ப ரொம்ப 'ப்ரிஸ்க்'கா



★ விநாயகம்

ஆணழகன்-தமிழ்நாடு

"பதினேழு வயதில் நான் பாடி பில்ட்-அப்பில் கோவை மாவட்ட அளவில் முதல் வெற்றியைப் பெற்றேன். தொடர்ந்து பத்து வருடங்களாக மேற்கொண்ட கடுமையான முயற்சிகள், உணவு முறைகள்தான் எனக்கு இன்று மிஸ்டர் தமிழ்நாடு என்ற சேம்பியன் பட்டத்தை வாங்கிக் கொடுத்திருக்கின்றன. ஆறு முறை மிஸ்டர் கோயம்புத்தூர் பட்டத்தைப் பெற்றிருக்கிறேன்" என்கிறார் விநாயகம்!

"வாரத்தில் நான்கு நாட்கள் பயிற்சி செய்வேன். அதாவது இரண்டு நாள் பயிற்சி... ஒரு நாள் ஓய்வு. மறுபடியும் இரண்டு நாள் பயிற்சி. ஒவ்வொரு முறையும் பயிற்சியின்போதும் உடலின் ஒவ்வொரு பாகங்களுக்கும் தனித்தனியாகப் பயிற்சி கொடுக்க வேண்டும். அந்தக் குறிப்பிட்ட பகுதிகள் நல்ல பலம் அடையுமாறு பயிற்சி செய்ய வேண்டும்.

அதிகமான புரதமுள்ள உணவுகளை நிறையச் சாப்பிடுவேன். கோழி, மீன், தினமும் பத்து முட்டைகள் சாப்பிடுவேன்" என்று சொல்லும் விநாயகத்தின் இலட்சியம், 2010ல் அகில இந்திய ஆணழகன் போட்டியில் வெற்றி பெற வேண்டும் என்பதுதானாம்.

இருக்கேன்'' என்கிறார்.

கோவை ஹிந்துஸ்தான் கல்லூரியில் விஷுவல் கம்யூனிகேஷன் படிக்கும் ராகவேந்தர், ''என்னுடைய லட்சியமே மிஸ்டர் வேர்ல்டாக வரணும்ங்கறதுதான். அதுக் காகத்தான் இந்த ஜிம் பயிற்சிகள். என்னால் முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இந்தப் பயிற்சியில் கிடைக்கும் முன்னேற்றம் கல்லூரிப் போட்டிகளில் கலந்து கொண்டு வென்று வரும் பரிசுகளிலேயே தெரிகிறது!'' என்கிறார்.

ஜிம் உரிமையாளர், பயிற்சியாளர் இராதாகிருஷ்ணன்:

''இப்போது இளைஞர்களிடையே உடல், மனம், வலிமை, ஆரோக்கியம், அழகமைப்பு... பற்றி நிறைய விழிப்புணர்வு வந்துவிட்டது. விளையாட்டு வீரர்கள்தான் அவர்களது ரோல்மாடல். அவர்களிடம், தாங்களும் எதையாவது சாதிக்க வேண்டும் என்ற ஆர்வம் அதிகமாகக் காணப்படுகிறது. உடல் இளைக்க ஓயாது பட்டினி கிடப்பது உடம்பில் பல வியாதிகளை வரவழைத்துவிடும். உணவு முறை + உடல் உழைப்பு இரண்டையும் சரிவிகிதத்தில் கொடுக்கும்போது உடல், மனம் இரண்டும் ஆரோக்கியத்தின் உச்சத்தைத் தொடும். இது பெண்களுக்கும் பொருந்தும்'' என்கிறார்.

"எங்களுக்குள்ளே ஏதோ ஓர் எனர்ஜியை ஃபீல் பண்ணறோம்!"

செய்தி, சித்திரம்:
ஆர்.பாலா,



ஜெகத்துக்கு செக்!

''அரசியல்வாதிகள் நடத்தும் பல மருத்துவ, பொறியியல் கல்லூரிகளில் லட்சக்கணக்கில் கேபிடேஷன் கட்டணம் வசூலிக்கப்பட, ஜெகத்ரட்சகனை மட்டும் டார்கட் செய்தது ஏன்?'' என்று அவரது ஆதரவாளர்கள் கொதித்துப் போய்க் கேட்கிறார்கள். ''அவரது பல் மருத்துவக் கல்லூரி, சென்னை மற்றும் பாண்டி மருத்துவக் கல்லூரிகள் ஆகியவற்றுக்கு ஜெகத் மத்திய அரசிடம் அனுமதி வாங்கிய போது, அங்கே அப்போது 'பொறுப்பில்' இருந்தவர்களிடம் கோடி கோடியாய்க் கொட்டி அழுதுதானே வாங்கினார்'' என்று கோபத்துடன் கேட்கும் அவர்கள், ''இந்த மீடியா துள்ளலுக்குக் காரணம் பாண்டியைச் சேர்ந்த முக்கிய பா.ம.க. பிரமுகர் ஒருவர்தான்'' என்றும் குற்றம் சாட்டுகிறார்கள். எப்படிப்பட்ட சவாலையும், புன்னகையுடன் சமாளிக்கும் ஜெகத் அமைச்சரானவுடன் தம்மை மீடியா சீண்டும் என்று எதிர்பார்க்கவில்லை. இதற்கிடையில் அவ்வப்போது பரபரப்பை உண்டாக்குவதற்காக இதுபோன்ற சில பின்னணி வேலைகளில் பா.ம.க. உற்சாகமாக ஈடுபட்டிருப்பதாகவும் குற்றச்சாட்டு வலம் வருகிறது.



உச்சகட்ட அதிகாரம் துணை முதல்வர் ஸ்டாலின் கையில் வந்துள்ள நிலையில், கோட்டை அதிகாரிகள் 'அப்பாடா' என்று பெருமூச்சு விடுகிறார்கள். அதற்குக் காரணம் முதல்வர் அலுவலகத்திலிருந்த சில அதிகாரிகளின் கெடுபிடியிலிருந்து அவர்கள் விடுபட்டிருப்பதுதான். ''கிட்டத்தட்ட முதல்வருக்குச் சமமாக அந்த அதிகாரிகள் நடந்து கொண்ட விதத்தில் சில ஜூனியர் அமைச்சர்களே கூட காயப்பட்டுப் போனார்கள். இப்போது ஸ்டாலினுக்கு உதவியாக நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் அதுபோல செயல்படமாட்டார்கள் என்று எதிர்பார்க்கிறோம்'' என்கிறார் ஓர் அதிகாரி. ''அரசியல்வாதிகளை ஊழல் என்கிறீர்கள்! ஆனால் அதிகாரிகள் அடிக்கும் கொள்ளையை யாரும் கண்டு கொள்வதில்லை'' என்று புலம்புகிறார் ஒரு ஜூனியர் அமைச்சர்.

தில்லியில் நியமிக்கப்பட்டுள்ள தி.மு.க.வின் மூன்று காபினெட் அமைச்சர்களுக்கும் நான்கு இணை அமைச்சர்களுக்கும் தனி உதவியாளர்கள் நியமிக்கும் பணி நடந்து வருகிறது. பல சிபாரிசுகள் முட்டி மோதுகின்றன. ஒவ்வொருவருக்கும் செக் வைக்கும் விதமாக (உளவு பார்க்க!) தமது நம்பிக்கைக்குரிய ஒரு நபரை நியமிக்க அழகிரி விரும்புகிறாராம். குறிப்பாக ராஜா இலாகாவில் தமது ஆள் இருக்க வேண்டும் என்று கருதுகிறாராம்.

- ஸ்ரீநி



குறும்படம்

''**நா**ன் இருக்கறது சென்னை வண்ணாரப் பேட்டைல. அப்பா கூலி வேலை பாக்கறார். அம்மா வீட்ல சும்மாதான் இருக்காங்க. நாலு வருஷமா சினிமாவுல உதவி இயக்குநரா சேரணும்னு முயற்சி பண்ணிக்கிட்டு இருக்கேன். சிறுகதைகள் நிறைய படிப்பேன். என் நண்பர் வெங்கடேஷ் ஒரு குறும்படம் பண்ணினார். அதுக்காக பல படங்கள் பார்க்க வேண்டியிருந்துச்சு. அந்த அனுபவத்தை வச்சுதான், நாமளும் ஷார்ட் ஃபிலிம் எடுக்கலாம்ங்கற நம்பிக்கை எனக்கு வந்துச்சு. எழுத்தாளர் தமயந்தி எழுதியிருந்த 'அனல்மின் மனங்கள்' சிறுகதை என்னை ரொம்பப் பாதிச்சுது. அதையே படமாக்கிடலாம்னு முடிவு பண்ணினேன். அவங்களும் சம்மதம் சொல்லிட்டாங்க.''






பெற்ற தாயை நடுத் தெருவில் விட்டுவிட்டுப் போகிற கொடுமை எங்காவது நடக்குமா?

மூச்சுவிடாமல் பேசுகிறார் 'கழுவேற்றம்' குறும்படத்தின் இயக்குநர் ராஜா. ஆறே முக்கால் நிமிடங்கள் மட்டுமே ஓடுகிற இந்தப் படம் நம்மை ஓர் உலுக்கு உலுக்கி விடுகிறது.

மதுரை மாநகராட்சிப் பூங்கா. ஒரு பெஞ்சில் நடுத்தர வயது இளைஞன் ஒருவனும் ஒரு மூதாட்டியும் அமர்ந்திருக்கிறார்கள். இருவர் முகத்திலும் சோகம். இளைஞனின் பார்வையில் ஃப்ளாஷ்பேக் விரிகிறது.

வீட்டு வாசலில் பல்விளக்கிக் கொண்டிருக்கிறான் இளைஞன். ஓரமாகத் துணி துவைத்துக் கொண்டிருக்கிறது ஒரு பெண்ணின் கை. மனைவி என்பது பேச்சிலிருந்து புரிகிறது. ''உங்க அம்மாவை நான் பாத்துக்க முடியாது. உங்க அண்ணன் வசதியாத்தானே இருக்காரு. அங்க கொண்டுபோய் விடுங்க!''

மதுரையில் ஒரு வீடு. வாசலில் அம்மா உட்கார்ந்திருக்க, காலிங் பெல்லை அடிக்



அனல்மின் மனங்கள்

கிறான் இளைஞன். வெளியே ஒருவன் வந்து பார்க்கிறான். விசாரிக்கிறான். இவன் சென்னையில் இருந்து வருவதாகச் சொல்கிறான். வெளியே வந்தவன், இளைஞனின் அண்ணன் வீட்டைக் காலி செய்துவிட்டு, கொடைக்கானலில் போய் செட்டில் ஆன விவரத்தைச் சொல்கிறான். திடுக்கிட்டுப் போகிறான் இளைஞன். அண்ணனின் நம்பரை தன்னுடைய செல்ஃபோனிலேயே போட்டுப் பேசச் சொல்கிறான் அந்த வீட்டுக்காரன். அம்மா பேச, ''இங்கல்லாம் வந்துடாதே!'' என்று சொல்லிவிட்டு ஃபோனை கட் பண்ணிவிடுகிறான். அதற்குப் பிறகு ஸ்விட்ச் ஆஃப்.

ஃப்ளாஷ் பேக் முடிகிறது. இப்போது அதே பார்க். இளைஞனும் அம்மாவும் அதே பெஞ்சில் அமர்ந்திருக்கிறார்கள். அம்மா, ''ரொம்பப் பசிக்குதுப்பா!'' என்கிறாள். ''ஏதாவது வாங்கிட்டு வரேம்மா'' என்றுவிட்டு எழுந்து போகிறான் மகன். பொழுது கொஞ்சம் கொஞ்சமாக இருட்டுகிறது. இன்னும் போனவன் திரும்பவில்லை. அம்மா தனியே அதே பெஞ்சில் அசையாமல் அமர்ந்திருக்கிறாள். நன்கு இருட்டிவிட, ரோட்டில் விரையும் ஒரு பஸ். அதில் ஒரு சீட்டில் அமர்ந்து சென்னைக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறான் மகன்.

காத்திருந்து காத்திருந்து பொறுமை இழந்து போன அம்மா, மெதுவாக எழுந்து ஒரு கையில் கம்பை ஊன்றிக் கொண்டு நடக்கத் தொடங்குகிறாள். அப்போதுதான் அந்த மூதாட்டியின் ஒரு கையும் காலும் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டிருப்பது நமக்குத் தெரிகிறது.



ராஜா

பெற்ற தாயை நடுத்தெருவில் விட்டுவிட்டுப் போகிற கொடுமை எங்காவது நடக்குமா? நடந்துகொண்டுதான் இருக்கிறது என்கிற நிஜத்தை அடித்துச் சொல்கிறது இந்தப் படம். ஒரு அற்புதமான சிறுகதையை அதன் அழகு கொஞ்சம்கூட குறையாமல் படமாக்கியிருக்கிறார் இயக்குநர் ராஜா. அதே சமயம் பாலுமகேந்திராவின் 'கதை நேரம்' சாயல் தெரிவது ஏன்? விவேக்கின் எடிட்டிங், சந்தோஷின் இசை, ராஜேஷின் ஒளிப்பதிவு... என்று குறும்படத்தின் ஒவ்வொரு அசைவிலும் தேர்ந்த தொழில்நுட்பம்!

பத்தாவது வரைக்கும்தான் படித்திருக்கிறார் இயக்குநர் ராஜா. அதற்கு மேல் படிக்க வைக்க வீட்டில் வசதி இல்லை.

- பாலு சத்யா



போக்குவரத்து நெரிசலில் மாநகரம் பிதுங்கும் காலை நேரத்தில், நூறடி சாலையில், இருபத்தெட்டு வயது இளைஞனொருவன் உரக்கச் சிரித்தபடி நிர்வாண மாய் ஓடினால் எப்படி இருக்கும்? வடபழனி சிக்ன லிலிருந்து அசோக் பில்லர் வரை இந்த 'அம்மண மாரத்தா'னை நிகழ்த்தி சாதனை புரிந்தவன் பிஜுமேனன். நிற்பதுவும் நடப்பதுவுமாயிருந்த வாகனங்களுக்கிடையே, பிஜுமேனன் நடத்திய இந்தப் 'புதிரோட்டம்' சிலருக்கு அதிர்ச்சியைத் தந்தது. சில பெண்கள் சட்டென பார்வையை வேறு பக்கம் திருப்பிக் கொண்டனர். சில முகங்களில் ஆழ்ந்த வினாக்களின் ரேகைகள்.

பிஜுமேனனுக்கும் எனக்கும் நேரடிப் பழக்கமில்லை. என் கேரள நண்பன் சனல்நாயரின் அறையில் ஒரு முறை சந்தித்திருக்கிறேன்.

அப்போது நாங்கள் மறைந்த மலையாள இயக்குநர் பி.பத்மராஜனைப் பற்றி பேசிக் கொண்டிருந்தோம். அப்போதுதான் சரியாக பிஜுமேனன் அறைக்குள் பிரவேசித்தான். வசீகரமான முகமும் கட்டுடலுமாக இளமை கொப்பளிக்கும் ஆகிருதியில் இருந்தான்.

''இந்தா மாமு. வெச்சுக்கோ. ரொம்ப நாள் ஆச்சு உன்னைப் பார்த்து!'' என்றபடி கையிலிருந்த கேரி பேக்கை சனலிடம் கொடுத்தான் சிரித்தபடி. சனலும் அவனைப் பார்த்தவுடன் முகமெல்லாம் சந்தோஷமானதைக் கவனித்தேன்.

எஸ்.ராஜகுமாரன்



எஸ்.ராஜகுமாரன்

திருவாரூர் மாவட்டம் மாவூருக்கு அருகே, வயலூர் என்னும் குக்கிராமத்தைச் சேர்ந்தவர். எழுத்தாளரும், கவிஞருமான இவர் திரைத் துறையில் இயக்குநர் பயிற்சி பெற்றவர்.

'மழை வாசனை', 'மேக வீடு' ஆகிய சிறுகதை நூல்களும், 'வண்ணத்துப் பூச்சிக்கு எந்த நிறம் பிடிக்கும்', 'நதியோடிய காலம்' ஆகிய கவிதை நூல்களும், 'யாதுமாகி நின்றாய்' என்ற கட்டுரை நூலும், 'ஞானப் பூங்கோதை' என்ற கடித இலக்கிய நூலும் இதுவரை வெளியாகியுள்ள இவரது படைப்புகள்.

''என்னடா பிஜு, ரொம்ப காலமா ஆளையே காணோம், எந்த தேசத்தில் இருக்கிறே?'' என்றான் கிண்டலாக சனல்நாயர். தாலூத்பாய் என்பவரின் எக்ஸ்போர்ட் கம்பெனியில், வாணியம்பாடியில் இருப்பதாக பிஜு சொன்னான். சனலின் முகம் மேலும் பிரகாசமானது.

''சரியான பார்ட்டியைப் புடிச்சிட்டேடா, பிஜு! பாயை விட்டு வந்துடாதே.

இரவுக்கு மனநலம் சரியில்லை!



நல்ல மனுஷன். அவர்கிட்டேயே செட்டில் ஆயிடு. ஒரு நல்ல பொண்ணைப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கோ!'' என்றான்.

கல்யாணத்தைப் பற்றிப் பேசியதும் பிஜுவின் முகம் இறுக்கமானது.

''டேய் உனக்கென்னடா குறைச்சல் பிஜு? பாய்கிட்ட செட்டில் ஆகிட்டே! பைசாவுக்குப் பஞ்சமில்ல. இனிமே பட்சிங்க உன்னைத் தேடி வரும் பாரு!'' என அவனைப் பார்த்துக் கண்ணடித்தான்.

அவ்வளவு நேரம்தான் பிஜு அங்கிருந்தான். ''சரி, மாமு, வர்றேன்!'' - சட்டென எழுந்து சனலிடம் கை குலுக்கியபடி அறையிலிருந்து வேகமாக வெளியேறினான்.

பிஜு போன பிறகு அவனைப் பற்றி சனல் என்னிடம் பேசினான். கொல்லம் மாவட்டத்தில் பத்தனத் திட்டாவுக்குப் பக்கத்தில் இடமண் என்ற கிராமம் பிஜுவின் சொந்த ஊர். நாலைந்து அண்ணன் தம்பிகளைக் கொண்ட குடும்பத்தில் இவன் கடைக்குட்டி. குடும்பத் தொழில் சிறிய ஹோட்டல். பிஜுவைப் படிக்க வைக்க, படிக்காத அண்ணன்கள் செய்த முயற்சி தோற்றுப் போனதால், ஹோட்டலிலேயே உதவிக்கு வைத்துக் கொண்டனர். டீ கிளாஸ் கழுவவும், பாத்திரம் கழுவவும், சாப்பாட்டு பெஞ்ச் துடைக்கவும் பிடிக்காமல் சென்னைக்கு ஓடிவந்துவிட்டான். சகதேச நண்பனான எஸ்.டி.டி. பூத் ரெகுவால், சனலுக்கு பிஜு அறிமுகம். சில நாட்கள் தங்கவும், சாப்பிடவும் சனல் உதவியதன் நன்றிக் கடனே அன்றைய கேரிபேக் உபயம்.

சரி! பிஜு ஏன் நிர்வாணமாக ஓடினான் என்பது தானே இப்போது உங்கள் மூளையை அரிக்கும் கேள்வி. பதற்றமான குரலில் பிஜுவின் 'அம்மண ஓட்டம்' குறித்து செல்பேசியில் சனல் என்னிடம் தெரிவித்த போதும் இதே அரிப்புதான் என் மூளையிலும்.

அசோக்பில்லரில் போலீஸாரால் சுற்றி வளைக்கப்பட்ட நிர்வாண பிஜு, இப்போது கே.கே. நகர் ஸ்டேஷன் லாக்கப்பில்.

''பிஜுவுக்கு யாரும் இல்லடா. பாவம்! இன்னசண்ட்! அவனை எப்படியாவது ஸ்டேஷன்லேருந்து எடுக்கணும். ப்ளீஸ். கொஞ்சம் வந்து ஹெல்ப் பண்ணுடா!'' என்ற சனலின் அனுதாபக் குரலின் காட்சி பிம்பமாக, அப்பழுக்கற்ற பிஜுவின் முகமும் அந்த கேரிபேக்குடனான பிரவேசமும் என் கண் முன் நிழலாடின.

காவல் நிலையத்தை அடைந்த போது, ஒரு காசித் துண்டை இடுப்பில் கட்டியபடி லாக்கப்புக்குள் உட்கார்ந்திருந்தான். பார்க்கப் பரிதாபமாக இருந்தது. நொடிக்கொருமுறை திசைமாறும் அவனது இலக்கற்ற பார்வையும், பொலிவற்ற முகமும் அளவற்ற மனக்குழப்பங்களின் தொகுப்பாகத் தெரிந்தது.

''இனி ஒருமுறை இந்த அசிங்கம் நடந்தா நீங்க ரெண்டு பேருந்தான் பொறுப்பு!'' என்ற எச்சரிக்கையுடன் பிஜுவை விடுவித்தனர்.


ஆட்டோவில் பிஜுவை ஏற்றி ரெகுவின் எஸ்.டி.டி. பூத்துக்குக் கொண்டு வந்தோம். அங்கு ரெகுவின் ஏற்பாட்டில் வாடகை அம்பாசிடர் கார் தயார் நிலையில் நின்றது. சனல் கையோடு கொண்டு வந்திருந்த அவனுடைய பேண்ட் சட்டையை பக்குவமாக பிஜுவின் உடலில் திணித்தான். பசியுடன் இருந்த அவனுக்கு நான்கு இட்லிகளைக் கொடுத்தோம்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக எங்கள் மருத்துவ நண்பர் டாக்டர் மோகன கிருஷ்ணனை தொலைபேசியில் தொடர்பு கொண்டது, ஸ்டேஷனுக்கு வருவதற்கு முந்தைய நிகழ்ச்சி. தொந்தரவின்றி, பிஜுவை மயக்க நிலையில், சொந்த ஊர் கொண்டு செல்ல அவர் தொலைபேசியில் சொன்னது போல, 'ப்ரிஸ்க்ரைப்' செய்த மாத்திரையை, இட்லி சாப்பிட்டபிறகு, இயல்பாக டீயில் கலந்து கொடுத்தோம். பிஜு மயக்க நிலையை அடைந்தான்.

சட்டென அங்கு தயார் நிலையில் நின்றிருந்த அம்பாஸிடர் காருக்குள் பிஜுவைத் திணித்தோம். இரண்டு பக்க ஜன்னல் ஓரங்களில் துவாரபாலகர்களாக நாங்கள் அமர கேரள மாநிலத்தை நோக்கி கார் புறப்பட்டது.

திருச்சி, மதுரை மார்க்கமாக குமுளி மலைச் சாலையில் இருளைக் கிழித்து கார் போய்க் கொண்டிருந்தது. ஒரு கொண்டை ஊசி வளைவில் கார் திரும்பும்போது, சட்டென பிஜு உறக்கம் கலைந்தான். ''என்ன மாமு, நாம எங்க போய்க்கிட்டிருக்கோம்? நான் யூரின் போகணும்!'' என்ற பிஜுவின் குரல் எனக்குள் சற்று உதறலை ஏற்படுத்திற்று. சனலும் பதற்றமாகி விட்டான். காரின் விளக்கு எரிந்ததும் டிரைவரின் குரல் கேட்டது.

''இந்தப் பக்கமாகவே இறங்குங்க லெஃப்ட் சைடுல பள்ளம்!'' என்றான்.



துக்கடா நியூஸ்

ஓ.ஹென்றி, உலகப் புகழ்பெற்ற சிறுகதை எழுத்தாளர். இவர் கோழி திருடினார் என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகி, சிறையில் இருந்தபோது ஒன்றும் செய்யத் தோன்றாமல் கதை எழுதினாராம். பிறகுதான் எல்லோருடைய மனங்களையும் திருடும்படியான உலகப் புகழ்பெற்ற சிறுகதைகளை எழுதினார்.

– விர. செல்வம், பூம்புகார்

காரின் வலது பக்க கதவைத் திறந்து சனல் இறங்கினான். அவனைத் தொடர்ந்து பிஜு வும் நானும் இறங்கினோம்.

அவன் எந்த நேரத்தில் என்ன செய்வானோ என நான் நினைக்கும் கணத்தில் நடந்தே விட்டது அந்த விபத்து.

பெரும் குரலில் ஓவெனக் கத்தியபடி திடுமென பிஜு அந்த மலைச் சாலையில் ஓடத் தொடங்கினான். எனக்குள் பதற்றம் பரவியது. ''மாப்ள! என் பின்னால ஓடி வா! டிரைவர் எங்களை ஃபாலோ பண்ணு!'' என்று நடுங்கும் குரலில் கட்டளைகள் பிறப்பித்த சனல், பிஜுவைத் துரத்தியபடி ஓடத் தொடங்கினான்.

பதினைந்து இருபது நிமிடத் தொடர் ஓட்டத்துக்குப் பின் சட்டென ஒரு இடத்தில் பிஜு நின்று விட்டான். ஒழுங்கற்ற அவனது ஓவென்னும் ஓசை இப்போது ஹஹ்ஹாவென பெரும் சிரிப்பு ஓசையாக மாறத் தொடங்கியது. மெல்ல சனல் அவனை நெருங்க, சற்று தூரத்தில் நான் நின்று விட்டேன். ஓடி வந்த இரைப்பு ஆழ்ந்த மூச்சாக தாளகதியுடன் வெளியேறத் தொடங்கியது.

பிஜு ஒரு மெல்லிய புன்னகையை உதிர்த்தவாறு, ''என்ன மாமு, உங்க ரெண்டு பேரையும் இந்தப் பள்ளத்தாக்குல பிடிச்சுத் தள்ளிட்டு நானும் குதிச்சிடுவேன்னு பயந்துட்டியா... ச்சீ! ச்சீ! அதெல்லாம் செய்ய மாட்டேன்!'' என்றவாறு சனலின் தோளில் கையைப் போட்டதும், என் குரல்வளையை யாரோ 'சரக்'கென அறுப்பது போலிருந்தது.

'மனநோயாளிகளின் வார்த்தைகளைக் கூர்ந்து கவனித்து, அவர்கள் உடனடியாக அடுத்து மேற்கொள்ளப் போகும் நடவடிக்கையை அறிந்து, மிகுந்த முன் ஜாக்கிரதையுடன் அவர்களிடம் நாம் நடந்து கொள்ள வேண்டும்.' - பிஜுவின் கேரள யாத்திரை குறித்து, தொலைபேசி வழியே டாக்டர் மோகன கிருஷ்ணன் கொடுத்த 'எச்சரிக்கை டிப்ஸ்' எனக்கு நினைவுக்கு வந்தது. இந்த 'விபரீத யாத்திரை'யில் நான் கலந்து கொண்டது தவறோ!?

''உன்னை அப்படியெல்லாம் நினைப்பேனாடா பிஜு? வா காருக்குப் போவோம்!'' - சனலின் முகத்திலும் அப்பிக் கிடந்தது பீதியின் சாணம்!

காருக்குள் உட்கார்ந்த பிஜு, ''எனக்கு டீ வேணும் மாமு!'' என்றான். நல்ல வேளையாக நாங்கள் ஒரு ஃபிளாஸ்க் வாங்கி அதில் டீயை நிரப்பிக் கொண்டு வந்திருந்தோம்.

பேண்ட் பாக்கெட்டுக்குள் கையை விட்டு மாத்திரையை எடுத்து தம்ளரில்

எல்லா சிவாலயங்களிலும் சிவபெருமானின் முன்பு நந்தி அமர்ந்த நிலையில்தான் இருப்பார். ஆனால், தியாகேசப் பெருமாளின் முன்பு இருக்கும் நந்தி எழுந்து நின்றவண்ணமாகக்காட்சி தருகிறார்.

- ஆர். ராம்சுப்ரமணி, திருவாரூர்



"உனக்கு பலாப்பழத்தை உரிச்சுக் கொடுத்துட்டுப் போலாமுன்னு வந்தேன் மாமு!"



போட்டு, ஃபிளாஸ்க்கி லிருந்து டீயை ஊற்றி அவனிடம் கொடுத்தேன். பிஜு சிறிது நேரத்திலேயே மீண்டும் மயக்க தேசத்துக்குப் போனான்.

சனல் தோளைத் தட்டி, நான் விழித்த போது இடமண் வந்திருந்தது. காரை விட்டு இறங்கியதுமே, பிஜுவின் சகோ தரர்கள், சனலையும் அவனையும் சூழ்ந்து கொண்டனர். கடைக்குள் சென்றோம். பிஜுவின் 'அம்மண' ஓட்டம் தொடங்கி, நடந்த எல்லாவற்றையும் மலையாளத்தில் உணர்ச்சிபூர்வமாகச் சொல்லி முடித்தான் சனல்!

பிஜுவின் கதை கேட்ட எல்லோர் முகத்திலும் அடுத்து என்ன என்ற கேள்வி யின் பாவனைகள்.

கட்டஞ்சாயா குடித்துவிட்டு, குளித்து, உடை மாற்றினோம். இட்லியும் குழாப்புட் டும் சாப்பிட்டுவிட்டு பிஜு சகோதரர் களிடம் விடைபெற்றுப் புறப்பட்டோம். அதுவரை நடந்த எதுவுமே அறியாத வனாய், சிரித்தபடி கை அசைத்து, பிஜு எங்களுக்கு விடைகொடுத்தான்.

அவனுடைய சகோதரர்கள் இரண்டு பெரிய பலாப்பழங்களை அன்பின் நன்றி யாக கார் டிக்கியில் வைத்தார்கள்.

திரும்பும் பயண வழியில், அந்தப் பகுதியில் இருந்த சில பழைமையான கோயில்களுக்கு சனல் என்னை அழைத்துச் சென்றான். வழியில் குறுக்கிட்ட ஒரு பெரிய ஆற்றில் குளித்தோம். ஒரு பெரிய அணைக்கட்டைச் சுற்றிப் பார்த்தோம். போகும்போது பிஜுவால் ஏற்பட்ட மன இறுக்கம், வரும்போது முற்றிலும் வடிந்து விட்டிருந்தது. பிஜு ஏன் நிர்வாணமாக ஓடினான் என்ற கேள்விக்கு இதுவரை விடை சொல்லவே இல்லையே என்ற உங்கள் ஆதங்கம் புரிகிறது. எனக்குத் தெரிந்தால்தானே? சனலுக்கும் ஒன்றும் தெரியவில்லை.

சரி! கதையை முடித்து விடுவோம்...

சென்னைக்குத் திரும்பிய மறுநாள் நான் சனலின் அறைக்குப் போனபோது தான் பிஜுவுடன் புறப்பட்ட இடமண் யாத்திரை, முழுமையான ஒரு முடிவுக்கு வந்தது. சனல் உள்ளிக்குழம்பு வைத்துக் கொண்டிருந்தான். தேங்காய் அரைத்து அவன் வைக்கும், அந்தக் கேரளபாணி குழம்பின் தீவிர ரசிகன் நான். ஆவியுடன் தேங்காய் மணக்கும் குழம்பை, சுடுசோற் றில் ஊற்றி இருவரும் சாப்பிட ஆரம்பிக் கும்போதுதான் திடுமென்று, பிஜுமேனன் அறைக்குள் பிரவேசித்தான் - சிரித்தபடி!

சினிமாவில் சோற்றுக் கவளத்தை வாயில் எடுத்து வைக்கும்போது, அங்கு நிகழும் ஒரு எதிர்பாராத சம்பவ அதிர்ச்சி யில் உறைந்து, அப்படியே விக்கித்துப் போவார்களே... அந்த நிலைதான் எங்கள் இருவருக்கும்!

''என்ன மாமு அதுக்குள்ள மெட்ராஸ் வந்துட்டேன்னு பாக்குறியா? ஒண்ணும் இல்ல... உனக்கு பலாப்பழம் உரிக்கத் தெரியாதே, அத உரிச்சிக் குடுத்துட்டுப் போலாம்னு வந்தேன் மாமு...!'' என்று சொல்லிச் சிரித்தபடி, பக்கத்தில் இருந்த எண்ணெய் பாட்டிலை எடுத்து, உள்ளங் கையில் கவிழ்த்தான். இரண்டு கையிலும் எண்ணெயை நன்கு குழைத்துத் தேய்த்த படி, பக்கத்தில் கிடந்த காய்கறிக் கத்தியை எடுத்து, சுவரோரமாக இருந்த பலாப் பழத்தை அரியத் தொடங்கினான் பிஜுமேனன்.

● சரா ஏ.முரளி, சென்னை - 33

? தமிழ்நாட்டுக்குத் தற்போது துணை முதலமைச்சர் மிகவும் அவசியமானவரா?

! முதல்வருக்கு அவசியம்; முதுமை காரணமாக. ஆகவே தமிழகத்துக்கும் அவசியம்தான். தி.மு.க.வுக்கு அவசியம் - முதல்வருக்குப் பின் கட்சி சிதறு தேங்காயாக உடையாமல் காக்கும் முயற்சியில் ஓர் அங்கம்.

● ஏ.எஸ்.யோகானந்தம், கலிங்கியம்

? ''இனிமேல் நான் அரசு ஊழியர். ஆகவே, சினிமாவில் நடிக்க மாட்டேன்'' என்கிறாரே மத்திய சமூக நீதித் துறை இணை அமைச்சர் நெப்போலியன்?

! சிறந்த முன்னுதாரணம். அரசியலில் பலரைப் போல் 'நடிக்காமல்' இருப்பது அதைவிட முக்கியம்.

● ஆர்.கே.லிங்கேசர், மேலகிருஷ்ணன்புதூர்

? கேரளாவில் இல்லாத இலக்கியச் செழுமை தமிழ்நாட்டில் இருக்கிறது என்கிறாரே மனுஷ்யபுத்திரன்... தங்கள் பார்வையில் எப்படி?

! உண்மைதான்! அந்தச் செழுமையை மக்களிடம் கொண்டு சென்று அதன் மூலமான மதிப்பைப் பெறத் தவறிவிட்டோம் என்பது இன்னும் உண்மை. இந்தப் பின்னடைவுக்கு முக்கியக் காரணம், கேரளாவைப் போல் அன்றி, நீண்ட காலமாகவே நல்ல கல்வி வழங்குவதில் கவனம் செலுத்த நாம் தவறி விட்டதுதான்.

● எஸ்.பக்கிரிசாமி, திருவாரூர்

? கடந்த மக்களவைத் தேர்தலில் பதினெட்டாயிரம் பேர் வாக்களிக்க மறுத்ததாக மாநில தேர்தல் ஆணையர் நரேஷ் குப்தா தெரிவித்துள்ளாரே?

! யாருக்கும் வோட்டளிக்க விருப்பமில்லாதவர்கள் 49ஓ-வுக்குத் தங்கள் வாக்குகளை அளித்துள்ளனர். ஆனால், இதே காரணத்துக்காக, வாக்குச் சாவடிக்கே வராமல் இருந்தவர்கள் எத்தனை பேரோ?



நெப்போலியன் இனி நடிக்கமாட்டாராமே?

● ஆர்.கோபாலன், சென்னை - 33 ★

? மத்திய ஆட்சியில் அமைச்சர்களாகப் பதவி ஏற்றவர்களில் பெரும்பாலோர் வார்த்தைகளை ஊன்றிக் கவனித்து, சரியாக உச்சரித்து பதவிப் பிரமாணம் செய்து கொண்டதாகத் தெரியவில்லையே?

! கடமையைச் சரியாகச் செய்து, மக்களுக்கு அளித்த வாக்கை நிறைவேற்றுவதாக இருந்தால்தானே வார்த்தைகளைக் கவனிக்க வேண்டும்! பதவிப் பிரமாணத்தை வெறும் சம்பிரதாயமாக நினைப்பவர்களுக்கு அதைப் பற்றி என்ன கவலை?

● கே.வி.ராமன், சென்னை - 73

? சிகரெட் அட்டைகளுக்கு மேல் தேள்-சுவாசப் பை படத்தைப் போட்டு, புகை பிடிப்போருக்கு எச்சரிக்கை விடுத்தால் மட்டும் புகைபிடிப்பதை நிறுத்தி விடுவார்களா?

! எழுதப் படிக்கத் தெரியாத லட்சோப லட்சம் பேருக்கு அச்சின்னம் புகைப்பதன் அபாயத்தைப் பளிச்சென்று உணர்த்தும். அதன் பிறகு புகைப்பதை நிறுத்துவதும் நிறுத்தாததும் அவரவர் பாடு!



★ தமிழில் செழுமை



★ அதிரடி ஆரம்பம்!



★ வீழ்ந்த வழக்கு



★ மறுத்த பொறுப்பு!

● எம்.ராஜேந்திரன், லால்குடி

? மானிய விலையில் உரம்; மலிவு விலையில் மாத்திரை கிடைக்க ஏற்பாடு செய்யப் போவதாக அமைச்சர் மு.க.அழகிரி சொல்லியுள்ளாரே?

! அது மட்டுமா? 'மருந்து விலைகளை எப்படிக் குறைப்பீர்கள்?' என்று கேட்டதற்கு, 'அது ரகசியம்' என்றுகூட பதில் சொல்லியுள்ளார்! அழகான, ஸாரி; அழகிரி ஸ்டைல் ஆரம்பம்தான்!

● ஆர்.பஞ்சவர்ணம், போளூர்

? பிச்சை எடுப்பவர்கள் ஏன் கோயில்கள் இருக்கும் இடத்தில் அதிகமாகக் காணப்படுகிறார்கள்?

! கடவுளிடம் பிரார்த்திக்க வருவோருடைய மனம் கனிந்திருக்கும் என்ற நம்பிக்கையில்தான்!

● பே.ராமலட்சுமி, ராஜபாளையம்

? பிரதமர் பதவிக்கு சோனியா ஆசைப்


படாதது ஏன்?

! இந்தியப் பிரஜையேயானாலும் ஓர் அயல்நாட்டவரைப் பிரதமராக ஏற்க பெருவாரியான இந்திய மக்கள் விரும்ப மாட்டார்கள் என்ற தயக்கம் ஒரு பக்கம். பொறுப்பு இல்லாத அதிகார கேந்திரமாக விளங்க முடிகிறது என்னும்போது எதற்காக பிரதமர் பதவியை இழுத்துவிட்டுக் கொண்டு சிரமப்படவேண்டும் என்ற கருத்து மறுபக்கம்.

● **ஜி.இந்திரா, பெங்களூரு** ❐

? தி.மு.க. தலைவர் தமது உறவினர் மற்றும் வாரிசுகளுக்கு முக்கியப் பதவிகளைக் கொடுப்பதற்கு அக்கட்சியினர் எந்தவித எதிர்ப்பையும் காட்டாதது கட்டுக்கோப்பின் அடையாளமா அல்லது தலைமையிடம் கொண்ட பயமா?

! தி.மு.க. தலைவரிடம் தனிப்பட்ட முறையில் உள்ள மரியாதை ஒரு புறமிருக்க, பயிருக்குப் பாய்ந்த பிறகு புல்லுக்கும் பொசியும் என்ற நம்பிக்கையும் காரணம்.



தவறிய வியூகம்

● **பவானி கிருஷ்ணா, பெங்களூரு**

? அவனவன் கோடி கோடியாக லஞ்சம் வாங்கிக் குவிக்கிறான் என்கிறபோது, கேரளாவில் 1989ம் ஆண்டு ரூ.25 லஞ்சம் வாங்கிய அரசு ஊழியர் ஒருவர், இருபது வருடம் கழித்து இந்த ஆண்டில் விடுதலை ஆகியுள்ளார்! இப்படியும் சாமர்த்தியம் இல்லாத மனிதர்கள் உள்ளனரே - பார்த்தீர்களா?

! அட தேவுடா! என்ன சொல்லவர்றீங்க? சாமர்த்தியம் இருந்தா கோடிகளில் குற்றம் செய்யலாமா? ஒரு ரூபாய் வாங்கினாலும் ஒரு கோடி வாங்கினாலும் குற்றம் குற்றம்தான் மேடம்! பெரிய அளவில் ஊழல் புரிந்த பலர், அரசியல் செல்வாக்கு காரணமாக சுதந்திரமாக உலவி வருவதால் அவர்கள் செய்த குற்றம் மன்னிக்கப்பட்டுவிட்டதாக ஆகாது.

● **எம்.சம்பத், வேலாயுதம்பாளையம்**

? மும்பை தாக்குதலின் மூளை ஹஃபீஸ் அகமது சயீத்தை இந்தியாவின் அலட்சியத்தால் லாகூர் நீதிமன்றம் விடுதலை செய்திருப்பது எதைக் காட்டுகிறது?

! இந்தியாவின் அலட்சியத்தால் சயீது விடுதலை செய்யப்பட்டதாகக் கருதவே முடியாது. பாக். அரசு சரியான முறையில் வழக்குரைக்காமல் அவர் விடுதலைக்கு வழி வகுத்தது என்பதே உண்மை. இதற்குக் காரணம், சயீது சார்ந்துள்ள அமைப்பிடம் உள்ள பயம்; இந்தியா மீதுள்ள துவேஷம், இரண்டும்தான்.

● **பாலு, சிவகாசி**

? அத்வானியைப் பிரதமராக முன்னிறுத்தியதால்தான் பா.ஜ.க. தோல்வி கண்டதா?

! நிச்சயமாக இல்லை. அத்வானியை விடச் சிறந்த (ஓய்வு பெறாத) தலைவர் இன்று பா.ஜ.க.வில் இல்லை. தோல்விக்கு முக்கியக் காரணம்; பொருளாதார ரீதியான கொள்கைக்கு முதலிடம் தராமல் மத ரீதியான பிரசாரத்துக்கு முக்கியத்துவம் தரப்பட்டதுதான். இதை என்று பா.ஜ.க. உணர்கிறதோ, அன்று வியூகம் அமைப்பதும் மிக எளிதாகிவிடும். வெற்றி நிச்சயம்!

❐ ரூ.150/- பரிசு பெறுபவர் :	★ ரூ.75/- பரிசு பெறுபவர் :
ஜி. இந்திரா, பெங்களூரு	ஆர்.கோபாலன், சென்னை - 33



''யே... யக்கோவ்...''

''எவடியவ?''

''நாந்தேன் தனம்! ஜோலியா இருக்கியளாக்கும்!''

''அஞ்சாறு குருணை கெடந்துச்க... அதைப் பொடச்கப் போடலாமுண்டு ஒக்காந்தேன்.''

''ராத்திரி பலமான தூக்கமா? தட்டிப் பாத்துப்பிட்டு விட்டுட்டேன்.''

''என்னவாம்...?''

''தெரியாதா?''

''என்னாவாம்டீ?''

''நம்ம நாட்டாமக் காரய்யா, பதவியப் புடுங்கிட்டாங்களாம்!''

''என்னாடி சொல்றே?''

''நெசந்தேக்கா! நடு ஜாமத்துலெ, சர்ரு புர்ருனு ரெண்டு மூனு

21

பாரதிபாலன்

காற்று வரும் பருவம்!

சிப்பு வந்துச்சு. மெயின் ரோட்டுலெ வேற போலீஸ்" வந்துச்சாம். கெஸ்தி புஸ்தகம், சிட்டா, அடங்கல்னு அம்புட்டையும் தூக்கிட்டுப் போயிட்டாங்க.''

''எதுக்காமுடி இப்படி?''

''யார் கண்டாக்கா?''

''வடக்குத் தெருக்காரங்க வேலையா இருக்கும்.''

''எல்லா ஊர்லெயும் தானாம்! இந்தப் பக்கம் கூழையனூர், கோட்டூர், உப்பார்பட்டி அங்குட்டு மாக்காங்கோட்டை, பாளையம், பண்ணைப்புரம் எல்லா ஊர் நாட்டாமைங்களையும் காலி பண்ணியாச்சாம்.''

''அடப்பாதகத்தி!''

''எம்.ஜி.ஆர்.தேன் பிடுங்கிட்டாருங்குறாங்க. யார் கண்டா?''

''எப்பேர்க்கொத்த மனுஷன் அவர்! எத்தனை பரம்பரையா இந்த ஊருக்கு பண்டுதம் பாத்தாங்க. என்ன என்னமோ நடக்குது...''

கோவிந்துக்கு மனசு சரியில்லை. வயல் வெளியெல்லாம் சுற்றிவிட்டு உச்சிப் பொழுதுக்கு ஊருக்குள் வந்தான். நாட்டாமைக்காரர் வீட்டு வாசலில் இரைச்சல் கேட்டது. இன்று நாட்டாமைக்காரரைச் சந்திப்பதாக இருந்தான். தன் மனத்தைத் திறந்து காட்டி அவரிடம் மண்டியிட நினைத்தான். குதூகலமாய் ஓடிக்கொண்டிருந்த குழந்தை தொபகடீர்னு விழுந்து காலை ஒடித்துக் கொண்டாற்போல் இருந்தது. வீட்டில் ஐயாவும் இல்லை. அவரும் நாட்டாமைக்காரர் வீட்டில்தான் இருப்பார். கோவிந்து நேராக மீசை மாயாண்டித் தேவர் தென்னந்தோப்பைப் பார்க்கக் கிளம்பினான். தேவரின் தம்பி விருமாண்டி பாளை கிழித்துக் கொண்டிருந்தார். அவர் கொஞ்சம் குஷி பேர்வழி.

''வாங்க மாப்ளெ.''

''என்ன செய்யுறீங்க?''

''சட்டுபுட்டுனு மாமனுக்கு வேலை கொடுக்கமாட்டீங்கிறீங்களே!''

''வேலையா?''

''ம்! கலியாண ஜோலிதேன். முதல் கல்யாணம். எப்படியும் நாலு தெருவுக்குப் பந்தல் போடுவீகள்லெ..''

''ம்! அதச் சொல்றீகளாக்கும்.''

''என்னா மாப்புள சப்புனு பேசிப்பிட்டீக!''

விருமாண்டி முகம் மாறிற்று. சற்று அதிர்ந்தாற்போலும் புதிராகவும் பார்த்தார். கோவிந்துக்குத் தயக்கமாகவும் தடுமாற்றமாகவும் இருந்தது.

''வடக்குத் தெரு மம்பட்டியான் தெரியுமா?''

''இப்படி கேட்டுட்டா? நமக்கெல்லாம் கூட தண்ணி கட்ட வருவாப்புலெ.''

கோவிந்து சற்று நிறுத்தினான்.

''தயக்கமா இருந்தா சொல்ல வேண்டாம்...''

''இல்லெ. எப்படிச் சொல்றதுனுதேன் பாக்குறேன்.''

''ம்! புரியுது கோவிந்து!''

கோவிந்து அவரைப் பார்த்தான்.

''அரசல் புரசலாக் கேட்டது.''

''ஒங்க காதுக்கு என்ன வந்துச்சுனு தெரியாது. ஆனா அவகிட்ட நான் நெஜமாத்தேன் இருக்கேன்.''

''ஒரே நோக்கமா இருப்பிய போல இருக்கு!''

''ம்.''

''வில்லங்கம்தேன்! இந்த நேரத்துலெ கோக்குமாக்கான ஜோலியாத்தேன் ஆயிப் போயிடும். அப்படியே ஒங்க பேச்சுப் படியே ஒத்து வந்தாலும் இத எந்தக் கணக்குலெ கொண்டு போயி சேக்குறது.''

''கல்யாணம்தான்.''

''கல்யாணமா?''

விருமாண்டி முகம் அதிர்ச்சியில் சிறுத்துவிட்டது. ஒருமுறை தொண்டையைச் செருமிக் கொண்டார். கோவிந்துவை நேராகப் பார்க்க முடியாமல் எங்கோ பார்த்தார்.

''நாட்டாமைக்காரர்ட்ட நானே இதச் சொல்லணும்னுதேன் இருந்தேன். அதுக்காக ஒரு தருணத்தையும் தேர்ந்தெடுத்து வெச்சிருந்தேன். இப்ப அது தவறிட்டது. இந்த நேரத்துலெ இத அவரிட்ட பேசுறது நல்லா இருக்காது. அவருக்குத் தெரியாம இதப் பண்றதுக்கும் மனசு ஒப்பலெ. அவர் மூலமா எங்க வீட்டுக்கு தெரிஞ்சா அது ஒரு மாதிரி இருக்கும்...''

''மாப்ளெ! ஒங்களுக்குப் புத்தி சொல்றதா நெனைக்க வேண்டாம்...''

''வேண்டாம் மாமா. மேற்கொண்டு எதுவும் பேசாதீங்க. உங்ககிட்ட எறக்கி வெச்சா பாரம் கொறைஞ்சாப்லெ இருக்கும்...''

கோவிந்து முகம் கனிந்து விட்டது.

''நாட்டாமைக்காரரிட்ட நா இது விசயமா பேசணும் அவ்வளவுதானே. அண்ணே காலையிலெ இங்கதேன் குளிக்க வருவார்...''

துக்கடா நியூஸ்



நாகை பாராளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்படுவோர் எக்கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும், ஒரிரு முறைகளைத் தவிர பெரும்பாலும் கோட்டூர் ஒன்றியத்தைச் சார்ந்தவராகவே இருப்பது குறிப்பிடத்தக்கது. தற்சமயம் வெற்றி பெற்றுள்ள ஏ.கே.எஸ். விஜயனும் கோட்டூர் ஒன்றியம் சித்தமல்லி கிராமத்தைச் சார்ந்தவர்தாம்!

- மீனா சுந்தர், மன்னார்குடி

''அந்த உதவி செஞ்சா போதும்.''

''அதுக்கு மேலே ஒண்ணும் சொல்லாதேங்குறீங்க. அப்படித்தானே?''

''நீங்க தப்பா புரிஞ்சுக்கிட்டீங்க.''

''போங்க மாப்ளெ! எது தப்பு, எது ரைட்டுனு நாமளா முடிவு பண்ணிக்கிட்டா ஆச்சாங்குறேன். நீங்கல்லாம் படிச்சவங்க. நாசூக்கானவங்க. இந்தப் படிப்பும் நாசூக்கும் மட்டுமே எல்லாத்தையும் ரைட்டாக்கிப்புடுமாக்கும்.''

''அப்ப இது தப்புங்குறீங்களா?''

''ஐயா! அங்கதான் தப்பு பண்றீங்க. இது தப்பு; இது ரைட்டுனு சொல்றதே தப்புங்கிறேன்னா... புரிஞ்சுக்கிட்டீங்களா? சரி, இப்பச் சொல்றேன். முடிவு பண்ணிப்பிட்டீங்க. முன்னாடி நடந்தது, பின்னாடி

நடக்கப் போறது ரெண்டையும் யோசனை பண்ணுவீங்களா?''

''முன்னாடி நடந்தது எதுக்கு?''

''எதுக்கா? ஒங்க வீட்டுலெ ஒரு உசிரு போயிருக்கு.''

''அதுக்காக இன்னொரு உசிரு போகணுமுங்குறீங்களா?''

''நீங்க ஒங்க ரூட்டுலெதான் போறீங்க. சரி பேசிப் பிரயோஜனப்படாது. மம்பட்டி யானுக்கு ரெண்டு பொண்ணா?''

''ம்.''

''மூத்தவதேன் கோட்டூர்லெ கொடுத் திருக்காக்கும்? இது பேரு...''

''பஞ்சு! பஞ்சவர்ணம்.''

''ஊருக்குள்ள ஒரு புரட்சி நடக்கப் போறதுங்குறீங்க!''

தென்னந்தோப்பை விட்டு வெளியே வரும்போது பொழுது இறங்கிவிட்டது.

நாட்டாமைக்காரர் வீட்டுக்கு ஆட்கள் வருவதும் போவதும் இன்னும் குறைய வில்லை. குழாயடி நிழலிலும் சுவற்று நிழலிலும் நின்றிருந்த கூட்டமெல்லாம் இப்போது வாசலுக்கு வந்திற்று. இப்போது வடக்குத் தெரு கூட்டம். நம்ப முடிய வில்லை. இந்த அதிசயத்தையும் ஆச்சரியத் தையும் பார்த்து, கோவிந்து மனம் திளைத் தது. எத்தனை நாட்களுக்குப் பிறகு அந்தக்

துக்கடா நியூஸ்

மகாத்மா காந்தி பாதயாத்திரை யின் போது தங்கிச் சென்ற இடம் மன்னார்குடி ஆர்.பி.சிவம் நகரில் உள்ளது. இங்கு காந்தி மண்டபம் கட்டப்பட்டுப் பராமரிக்கப்படுகிறது.

- மீனா சுந்தர், மன்னார்குடி

கூட்டம் இந்தத் தெருவுக்கு வந்திருக்கிறது.

''எல்லாரும் உள்ள வாங்க...'' நாட்டாமைக்காரர் வாசலுக்கு வந்தார்.

''உள்ள வாங்கப்பா...''

எல்லோரும் உள்ளே நகர்ந்தனர். துண்டல்காரரும் தலையாரியும் வாடிய முகத்தோடு இருந்தனர். நாட்டாமைக்காரர் முகத்தில் இரவின் இருள் அப்படியே தங்கிவிட்டது. ஆனால் நடை, உடை, பேச்சு, அந்த மிடுக்கு எல்லாம் அப்படியேதான் இருந்தது. எழுது



மேஜையை நகர்த்திவிட்டு பாய் விரிப்பில் உட்கார்ந்தார்.

''ராவுலெ தாசில்தார், ரெவின்யூ ஆபீசருங்க வந்தாங்க. இப்படிக்கு... இப்படிக்குனு வெவரம் சொன்னாங்க; சரிதான்னு ஒதறியாச்சு.''

''பரம்பரை பரம்பரையா இருக்கு. இப்ப என்னடாண்டாக்க ராவோட ராவா வந்து புடுங்குனா...''

''சர்தான்னு போக வேண்டியதுதான்.''

''என்னத்துக்காக இப்படி...?''

''கவர்மெண்ட் முடிவுன்னாங்க. நாம என்ன சொல்ல முடியும்?''

''எம்.ஜி.ஆர். இதச் செய்ய மாட்டாருய்யா!''

''என்னவோ!''

''வெசாளக் கெழமைக்கு, ஐயாவ வெச்சுத்தேன் அந்த மேட்டோடைகிட்ட இருக்குற எங்க பதினெட்டு குழிய பங்கு பாகம் போடலாமுண்டு இருந்துச்கயா...'' என்று கரிக்கடை மாரியன் குரல் தளுதளுத்தது.

''அதுக்கென்னடா இப்ப?''

''ஐயா அவுகண்டா எங்களைத் தெரியும். அனுசரணையா பண்ணிப்பிடுவீங்க..''

''பண்ணலாம்பா.''

''எப்பவும் எங்களுக்கு நீங்கதான் நாட்டாமை!''

நாட்டாமைக்காரருக்கு கண்ணில் நீர் கோத்துக் கொண்டது. சட்டென்று அதைச் சமாளிக்க எழுந்தார். தலையாரியைக் கூப்பிட்டு ஏழு எட்டு டீ வாங்கிட்டு வரச் சொன்னார். திரும்பவும் வந்து உட்கார்ந்து கொண்டார்.

''ஐயா ஒரு உதவி''

என்ன என்பது போல் பார்த்தார்.

''நம்ம பயக ஒரு ஏழு எட்டுப் பேர் மேல கேசு எழுதியிருக்காங்க. இந்த ஏழு எட்டுப் பேரும் சூசுவாண்டு இருந்தவங்க. நீங்க குடியானவுக கிட்ட பேசி...''

நாட்டாமைக்காரர் யோசனையில் விழுந்துவிட்டது மாதிரி இருந்தார். அவர் கண்ணும் கன்னத்துச் சதையும் துடிதுடித்தன. பின்னர் உதட்டை மடக்கி எச்சில் பண்ணினார். உதடு குழியிட்டது!

''கருப்பு ஒனக்கு முன்னாடியே இத எங்கிட்ட சொல்லிட்டார் ஒருத்தர். இப்பன்னு இல்லை. அப்பப் பிடிச்சே சொல்லிட்டிருக்கார்!''

''யார்யா?''

''ஒரு உசிரைப் பலிகொடுத்தவர்!''

பெரிய தோட்டத்து கருப்பையா தலையைக் கவிழ்த்துக் கொண்டார்.

''எனக்குத் தெரியாதா கருப்பு... யாரு எப்படினு? ரெண்டு பக்கத்துலயும் வேற ஆட்கள்தேன் புகுந்து வெளையாடுறது!''

''அத நசுக்கிப்பிடணும்யா'' என்றார். அந்த வார்த்தையில் தீவிரம் இருந்தது.

(காற்று வீசும்)

"ஆட்சியில் பங்கு வேண்டும்!"



★ கே.எஸ்.அழகிரி

கடலூர் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினரும் ஸீனியர் காங்கிரஸ் பிரமுகருமான கே.எஸ்.அழகிரியை, தில்லியில் சந்தித்தபோது தமிழக அரசியல் சூழல் குறித்துப் பேசினோம்...

காங்கிரஸ் - தி.மு.க. கூட்டணி அதிக இடங்களில் வென்றதற்குக் காரணம் வோட்டுக்குப் பணம் கொடுத்ததுதான் என்று ஜெயலலிதா, டாக்டர் ராமதாஸ்... சொல்கிறார்களே?

"பைத்தியக்காரத்தனமான பேச்சு. அ.தி.மு.க. கூட்டணி பன்னிரண்டு இடங்களில் வென்றதே; அப்படியென்றால் அவர்கள் பணம் கொடுத்துத்தான் வென்றார்களா? ஜனநாயகத்தில் மக்களை இப்படிக் கேவலப்படுத்தக் கூடாது. நாங்கள் வென்றதற்குக் காரணம் மத்தியில் ஐக்கிய முன்னணி அரசு செயல்படுத்திய திட்டங்களும், மாநிலத்தில் தி.மு.க. அரசு செயல்படுத்திய திட்டங்களும்தான். முக்கியமாக, மன்மோகன் சிங்தான் எங்கள் பிரதமர் வேட்பாளர் என்று சொல்லிப் பிரசாரம் செய்ய முடிந்ததால் மேலும் ஆதரவு கிடைத்தது. ஒன்று மட்டும் நிச்சயம். இனி செயல்பாடுகளைப் பார்த்துத்தான் மக்கள் வோட்டு போடுவார்கள். வெட்டிப் பேச்சால் மக்களை இனி கவர முடியாது!"

மின்னணு வாக்கு இயந்திரத்தில் கோல்மால் செய்துவிட்டீர்கள் என்ற குற்றச்சாட்டு பற்றி...!

"இது ஜெயலலிதாவின் மற்றொரு சொதப்பலான சொத்தை வாதம்! இந்த மின்னணு இயந்திரங்கள் மூலம் முன்பு நடைபெற்ற தேர்தல்களில் இவர் வெற்றி பெற்றிருக்கிறாரே! அப்படியென்றால் அப்போது இவர் கோல்மால் செய்தாரா? தோல்வியைப் பெருந்தன்மையாக ஏற்றுக்கொள்ள வேண்டும்."

தே.மு.தி.க. - காங்கிரஸுடன் நெருங்கி வரும் வாய்ப்பு உண்டா?

"தேர்தல் பிரசாரத்தில் காங்கிரஸை எதிர்த்து பல விமர்சனங்களை வைத்ததன் மூலம் விஜயகாந்த் அதை விரும்பவில்லையோ என்று நாங்கள் நினைக்கிறோம்."

'ஆட்சியில் பங்கு'- தமிழகத்தில் சாத்தியம்தானா?

"காங்கிரஸும், தி.மு.க.வும் மத்தியில் இணைந்து நல்லாட்சி நடத்துவது போல தமிழகத்திலும் நடக்கவேண்டும் என்பதுதான் காங்கிரஸ் தொண்டர்களின் விருப்பம். அன்னை சோனியா, உள்துறை அமைச்சர் சிதம்பரம், கப்பல்துறை அமைச்சர் ஜி.கே.வாசன்... ஆகியோர் முடிவெடுப்பார்கள்."

- ப்ரியன்

விட்டு விலகி ஓடிக் கொண்டேயிருக்கின்றன, ஜன்னலோரப் பிம்பங்கள் - வாழ்க்கையை மாதிரி தான்! அது இனம்புரியா வருத்தத்தைத் தந்தாலும், யுகயுகமாக ஆறுதல் அளித்தபடி எல்லோருடைய பயணங்களையும் பின் தொடர்கிறது ஒரே ஒரு நிலவு. அந்நிலவு இப்போது கோவை எக்ஸ்பிரஸ்ஸின் கூடவே வந்து கொண்டிருந்தது சசிக்கு குஷியாக இருந்தது. முரட்டுக் காதலனைப் போல காற்று சற்றும் சலிப்புறாமல் முகத்தைத் தடவிக் கொண்டே இருந்தது. அப்போதுதான் எதிர் சீட்டிலிருந்தவளை சசி முழுமையாகப் பார்த்தாள். ஜீன்ஸ் பேண்ட்டும் டி ஷர்ட்டுமாக இருந்த யுவதி இருப்புக்கொள்ளாமல் தவித்தபடி கொஞ்சம் பதற்றமாக இருந்தாள். மிரள மிரளப் பார்த்தவள் தன் பேக்கிலிருந்த ஃப்ளாஸ்க்கை எடுத்துத் தோளில் போட்டபடி வாஷ்பேஸினை நோக்கி நகர்ந்தாள்.


பக்கத்தில் இருந்தவர் ஆங்கிலப் பத்திரிகையொன்றை வாசித்துக் கொண்டிருந்தார். அருகிலிருந்த சசியின் அப்பாவும் அவருக்கு இணையாக இலவசமாக வாசித்தபடியே பக்கங்களைக் கடந்து கொண்டிருந்தார். ஒரு பக்கத்தில் அவரின் முகத்தில் தெம்பை வரவழைத்தது ஒரு செய்தி: இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் சலீல் அங்கோலா. ஆட்டத்திலிருந்து விலகி இந்தி சினிமாவுக்குள் நுழைந்து இரண்டு படங்கள் நடித்தவர். டீ.வி. தொடர்களிலும் நடித்துக் கொண்டிருந்த அவரை ஒரு மாதம் ஆளைக் காணோம். எல்லா இடத்திலும் தேடிப் பார்த்ததில் அவர் குடிக்கு அடிமையாகி அதிலிருந்து விடுபட சிகிச்சை எடுத்துக் கொண்டிருக்கிறார் என்று தகவல் பிரசுரமாகி இருந்தது.

அதைப் பார்வையால் வாசித்தபடியே, ''உனக்கும் கீழே உள்ளவர் கோடி நினைத்துப் பார்த்து நிம்மதி நாடு... மயக்கமா... கலக்கமா... மனதிலே குழப்பமா'' கண்ணதாசனின் பாடலை அப்பா ஹம் செய்ததிலிருந்தே அவர் நிம்மதியை நாடியது புரிந்தது. சலீல் அங்கோலா கூட, ஜாலிக்காகவும் கௌரவத்துக்காகவும் குடிக்க ஆரம்பித்தவர். பின் குடியால் தொழிலில் முடக்கம் ஏற்பட்டு, மனஅழுத்தத்துக்கு ஆளாகி, சிகிச்சையில் இருக்கிறார்.

குடிபோதையில் கலாட்டா செய்த ஆல் ரவுண்டர் ஆண்ட்ரு சைமன்ட்ஸ்ஸை உலகக் கோப்பைப் போட்டியிலிருந்து நீக்கி, ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பியுள்ளது ஆஸி. நிர்வாகம். இது லேட்டஸ்ட் நியூஸ். குடியின் போதைவலை ஒவ்வொரு







அமிர்தம் சூர்யா

வராகத் தேடித் தேடி வேட்டையாடிக் கொண்டேயிருக்கிறது என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள் சசி.

கொஞ்ச நாட்களுக்கு முன் பார்த்த, மனத்தில் வந்து குந்திக் கொண்ட ஒரு குறும்படம் அனுமதி பெறாமலேயே மீண்டும் புத்தியில் செகண்ட் ஷோவாக ஓட ஆரம்பித்தது. குறும்படத்தின் பெயர் - தொட்டி. வடசென்னையில் இறைச்சிக் காக ஆடு மாடுகளை அறுக்குமிடம் தொட்டி. தொட்டியைக் கடக்கும் பயணி கள் மூக்கைப் பொத்தாமல் கடக்க முடி யாது. உள்ளேயிருக்கும் உறுப்புக்கள் குமட் டலில் தானாகவே வெளியே வந்து கொட்டிவிடும் அளவு நாற்றம் (துர்நாற்றம்



பூக்களை வீழ்த்தும் போதைவலை

தான்). தொட்டியில் வேலை செய்யும் ஒரு சிறுவனின் குடும்பம் குடியால் எப்படிச் சீரழிகிறது என்று சொல்லும் கதை.

குடிகார அப்பா ரௌடிகளால் கொலை யாகிறார். குடிபோதையில் கணவனால் நடத்தை கெட்டவளாகக் குற்றம்சாட்டப் பட்டதால் வெறுத்துப் போய் தற்கொலை செய்து கொள்கிறாள் அம்மா. ஆதரவற்ற சிறுவனுக்கு அடைக்கலம் தருபவரும் குடியால் ரத்தவாந்தி எடுத்துச் சாகிறார். சிறுவனின் கண்ணீரோடு படம் முடிகிறது. தொட்டிக்கும் விளிம்பு நிலை மக்கள் சேர்ந்து வாழும் சேரிக்கும் என்ன வித்தியா சம்? அங்கு இறைச்சிக்காக ஆடு மாடுகள் தினந்தோறும் அறுபடுவதும், இங்கு குடி யில் பாமரர்கள் பலியாவதும் ஒரே நேர்க் கோட்டில் வந்து போகின்றன. மீள முடியாதபடி சிறுவனின் வாழ்வு மீண்டும் மீண்டும் தொட்டியின் ரத்தச் சகதியில்... என்று தத்ரூபமாக ஜி.முரளியின் இயக்கத் தில் தீபிகா வழங்கிய குறும்படம் நறுக் கென்று அரசின் தலையில் குட்டியது போல் காட்சி கண்டனம் என்று நினைத்துக் கொண்டாள் சசி.

அவள் நினைவைச் சட்டென அறுத்தது அழுகிப் போன பழத்தின் வாசனை. எதிரே வந்தமர்ந்தாள் அந்த மாடல் யுவதி. ஃபினாஸ்க்கில் எடுத்து வந்து குடித்திருக் கிறாள் போலும். 'சம உரிமை, சுதந்திரம், பெண்ணியப் புரட்சி என்பதெல்லாம் இப்



எச்சரிக்கை

பெண்களின் குடிப்பழக்கம் ஆண்களை விட ஆபத்தான விளைவுகளை அப்பெண்களுக்கும் சமூகத்துக்கும் தந்துவிடும். குடிக்கும் பெண்களுக்கு மாதவிடாய்க் கோளாறுகளுடன், மார்பகப் புற்றுக்கும், கருச்சிதைவுக்கும் வாய்ப்புகள் அதிகம். மேலும், குறைபாடுடைய, எடை குறைவான குழந்தைகள் பிறப்பும் தவிர்க்க இயலாததாகும்.

படிப் பலரை குறுக்குசால் ஒட்ட வைத்து விடுகிறது. பப் கலாசாரத்தை ஸ்வீகரித்துக் கொள்வதற்குக்கூட சமத்துவ வாதத்தை முன்வைக்கிற காலம்! வாழ்க்கையை வீணடித்துக் கொள்ளும் உரிமைக்கா பெண்ணியம் என்று பெயர்?' என்றெல்லாம் தனக்குள் பேசிக் கொண்டவள், ''அப்பா அடுத்த வருஷம் ஒரு வி.ஐ.பி. ஒரு பவுன் மோதிரம் பரிசளிப்பார்'' என்றாள். ''ஏம்மா?'' என்றார். ''போன வாரம் எழுத்தாளர் திருப்பூர் கிருஷ்ணன் ஸார் போன்ல பேசும்போது 'சசி குடும்பத்திலிருந்து குடியை வேரோடு பிடுங்கி எறியும் உன் முயற்சி ஒவ்வொரு குடும்பத்திலேயும் முளைக்கணும்மா... நீ அறந்தை நாராயணன் எழுதிய குடியால் குடைசாய்ந்த கோபுரங்கள் புத்தகத்தை வாசிச்சிருக்கியா? அவசியம் படி. அது குடியின் விளைவுகளை ஆதாரத்தோடு சொல்கிற வாழ்வின் அசலான ஆவணம். அது மட்டுமல்ல. அ.தி.மு.க. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சைதை துரைசாமி குடியை விட்டுத் திருந்தியவர்களுக்கு ஒரு சவரன் பரிசு தந்து கொண்டிருக்கிறார் என்பதும் உற்சாகத் தகவல். உங்க அப்பா அந்தப் பரிசை வாங்க வாழ்த்துக்கள்'னு சொன்னார்'' என்று பூரிப்பாய்ச் சொன்னாள் சசி. சசியின் தலைகோதிய அப்பா, ''சசிம்மா கோவை வந்திடுச்சு... இறங்கத் தயாராகும்மா'' என்றார்.

(ஸ்டேஷனில் சின்னராஜும், விஜயகுமாரும் காத்திருந்தனர்)



துக்கடா நியூஸ்

ஔவையார், தெரியும்! அவர் தங்கையைத் தெரியுமா? இருவருக்குமாக ஒரு கோயில், நாகை மாவட்டம் துளசியாபட்டினத்தில் உள்ளது. அவ்வை - உவ்வை கோயில் என்றழைக்கப்படும் இது வேதாரண்யம் - பட்டுக்கோட்டை சாலையில் முப்பதாவது கி.மீ.ல் அமைந்துள்ளது. தமிழகத்தில் வேறெங்கும் ஔவையாருக்குக் கோயில் இல்லை என்பது தனிச்சிறப்பு!

- ஜானகிராமன், வேதாரண்யம்.

மாயாண்டி குடும்பத்தார்

மாயாண்டி மற்றும் விருமாண்டி இந்த இரண்டு குடும்பங்களுக்கிடையேயான மோதல்களே படத்தின் மையக் கதை என்றாலும், அதையெல்லாம் தாண்டி குடும்ப உறவுகளுக்கிடையே அணையாமல் கிடக்கும் தீராப்பகைகளையும், குரோதத்தையும், அன்பையும், விட்டுக் கொடுத்தலையும், நேசிப்பையும் ரத்தமும், சதையுமாகச் சொல்லியிருக்கும் இயக்குநர் இராசு மதுரவனுக்குத் துணிச்சல் அதிகம்!

படத்தின் வெற்றிக்குத் துணையாக நின்று நடித்திருக்கும் இயக்குநர்களுக்கு மனம் திறந்த பாராட்டுக்கள்.

'இப்படி யாரு கேட்டாலும்
பிஸ்கட் கொடுக்காத...
வண்டியிலே ஏறுறியா டபுள்ஸ் போகலாம்' - என வெள்ளந்தியான கதாபாத்திரத்தில் வந்து, நடிப்பில் மொத்த மதிப்பெண்களையும் அள்ளிச் செல்கிறார் சிங்கம் புலி.


'தங்கம், வைரம், வைடூரியம் எல்லாம் மண்ணுக்குள்ள கிடைக்குதுன்னு சொல்வாங்க... ஆனா இதெல்லாம் ஒன்னா சேர்ந்த என் தகப்பனை... இந்த மண்ணுக்குள்ளே போட்டுப் புதைச்சிட்டேனே...' எனக் கூறி முகத்தில் அடித்துக் கொண்டு கதறி அழும்போது, நம் கண்களிலிருந்து வரும் கண்ணீரைக் கூட துடைத்தெறிய முடிவதில்லை. தருண்கோபி இனி, இயக்கத்தை விட்டுவிட்டு நடிப்பதை முழு நேரமாகக் கொள்ளலாம். முற்போக்குவாதியாக, விவசாயிகளுக்குக் குரல்கொடுக்கும் தோழனாக சீமான், 'போசாம போசாம...' என ஒரு பாடலை எழுதிப் பாடியிருக்கிறார்.

இரண்டு குடும்பங்களிலும் (மாயாண்டி குடும்பத்தில் விருமாண்டி பெயர், விருமாண்டி குடும்பத்தில் மாயாண்டி) பகை இருந்தபோதும் ஒருவருக்கொருவர் அன்பு உண்டு என்பதை ரகசியமாகச் சொல்லியிருப்பதும், பரமன், வாழ்வில் கடந்து போன துயரங்களைத் தலைமுழுகி விட்டு வெளியே வருவது மூலமான காட்சி மாற்றங்கள் என திரைக்கதையில் மெனக்கெட்டிருப்பது, இயக்குநருக்கு வெற்றிவாகை சூட கைகோர்த்திருக்கிறது.

படத்தின் பின்னணி இசைப் பாடலாக வரும் 'முத்துக்கு முத்தாக...' மற்ற அத்தனை பாடல்களையும் ஓரங்கட்டி விடுவது ஆச்சர்யம் கலந்த அழகு. படம் முழுக்க கேமிராவை எந்த இடத்திலும் வைத்து விடாமல் தன் தோளிலேயே வைத்துப் படம்பிடித்திருக்கும் பாலபரணி, கிராமிய மணத்தைப் படம் முழுக்க பின்னணி இசையாகத் தூவியிருக்கும் சபேஷ் முரளி, தொகுத்திருக்கும் சுரேஷ் அர்ஸ் என அத்தனை கரங்களுக்கும் முடிந்தால் தயாரிப்பாளர் தங்க மோதிரம் பரிசளிக்கலாம்.

- கிராபியென் ப்ளாக்





இயக்குநர் ஜனநாதன்

"சோறு தண்ணியில்லாம உழைக்கிறான்னு நம்ம ஊர்ல சொல்லுவாங்க. அப்படி உண்மையாகவே சோறு தண்ணியில்லாம உழைச்சு, கஷ்டப்பட்டது மட்டுமில்லாம, ரொம்ப இஷ்டப்பட்டும் 'பேராண்மை'க்காக வொர்க் பண்ணியிருக்கார் ஜெயம் ரவி" என்கிறார் பேராண்மை இயக்குநர் ஜனநாதன்.

"கதையின் நாயகன் ஜெயம் ரவிக்கு மலைவாழ் பழங்குடி இளைஞன் வேடம். பழங்குடியினரின் உடலமைப்பு இறுக்கமானதாகவும் நரம்புகள் வெளியே தெரியும் படியும் அமைந்திருக்கும். இந்த உடலமைப்பைப் பெற ஜெயம் ரவி அரிசி உணவைச் சாப்பிடாமல், தண்ணீர் அருந்தினால் தோல் இறுக்கமாக இருக்காது என்பதற்காக நீரும் பருகாமல் நிறைய நாட்கள் நடித்திருக்கிறார். விஷயம் தெரிந்தால் நான் வருத்தப்படுவேன் என்பதற்காக என்னிடம் கூட ஷூட்டிங் முடியும் வரை சொல்லவில்லை. இது இயக்குநருக்கு ஜெயம் ரவி கொடுத்த மரியாதை.

தனுஷிகா, லியாஸ்ரீ, ஷரண்யா, மஹா, வசுந்தரா... என ஐந்து கதாநாயகிகள். இருந்தும் காதல் இல்லை. ஐந்து பேருக்கும் தமிழ் நன்றாகத் தெரிய வேண்டும் என்ற உறுதியுடன்தான் ஹீரோயின்களைத் தேர்வு செய்தேன். இவர்களுக்கு குங்ஃபூ, கராத்தே, கம்புச் சண்டை, ஜிம்னாஸ்டிக், வில் வித்தை போன்றவற்றில் பயிற்சி அளித்திருக்கிறேன்.

வில்வித்தை ஒலிம்பிக்கில் இடம்பெற்றுள்ளது. இராமாயணம், மகாபாரதம் போன்றவற்றில் வில் வித்தை பற்றிப் பெருமையாகப் பேசப்படுகிறது. ஆனால் இதைக் கற்றுத் தர நமது தமிழ்நாட்டில் ஆட்களே இல்லை. ஹுசைனிக்கு வில் வித்தை தெரிந்ததால் அவரைப் பயன்படுத்திக் கொண்டோம்.

'புறத்தை வெல்வது ஆண்மை; அகம், புறம் இரண்டையும் வெல்வது பேராண்மை' என்கிறது தொல்காப்பியம்.

அகம்...புறம்...

"புறத்தை வெல்வது ஆண்மை. அகம்.புறம் இரண்டையும் வெல்வது பேராண்மை!"



இந்தப் படத்தின் ஹீரோவை அகம், புறம் இரண்டையும் வென்றெடுப்பவனாகக் காட்டியிருக்கிறேன்'' என்கிறார் ஜனநாதன்.

"**நா**ன் மயிலாப்பூரில் பிறந்து வளர்ந்தவன். எஸ்.எஸ்.எல்.சி. வரைதான் படித்திருக்கிறேன். என்னுடன் பிறந்த ஐந்து பேரில் நான்தான் அதிகம் படித்தவன்.

என் சூழலுக்கு என்ன காரணம் என யோசித்தேன். 'உழைப்பு மட்டும்தான் எல்லா விஷயங்களையும் மாற்றி அமைக்கிறது. ஆனால் உழைக்கும் வர்க்கம் மட்டும் முன்னேறாமல் இருக்கிறது' என்ற காரல் மார்க்ஸின் வரிகளால் ஈர்க்கப்பட்ட நான் என்னுடைய படைப்புகளிலும் மார்க்சியச் சிந்தனைகளைக் கொண்டுவர முயற்சிக்கிறேன். அதே போல சினிமாவையும் சரியாகப் புரிந்து வைத்துக் கொள்ள வேண்டும். அப்போது

ஜெயம் ரவி..!



தான் வெற்றி பெறமுடியும்.

நாம் எந்த மாதிரி உடையணிய வேண்டும், எந்த வகையான உணவுகளை உண்ண வேண்டும் என பன்னாட்டு கம்பெனிகள் முடிவு செய்கின்றன. அதிக மக்கள் தொகை கொண்ட இந்தியா அமெரிக்கச் சந்தையாகி விட்டது. காலையில் எழுந்து பல் தேய்க்கும் பேஸ்ட் முதல் இரவு படுக்கையில் படுக்கும் மெத்தை முடிய அனைத்தும் அந்நியப் பொருட்கள்தான். நம்மில் பலருக்கு 'சுதேசி' என்பது மறந்தே போய் விட்டது.

நமது இயற்கை வளங்கள்கூட கொள்ளை போகின்றன. சென்ற நூற்றாண்டில் தங்களின் தேயிலைத் தேவைகளுக்காக மூலிகை வளம்மிக்க காடுகளை அழித்த வெள்ளையர்கள், இந்த நூற்றாண்டில் நமது வேப்பமரத்துக்குக் கூட காப்புரிமை வாங்கி விட்டார்கள். வனத்தின் இயற்கை வளங்களைச் சுரண்டும் அந்நிய சக்திகளை சாமான்யன் எவ்வாறு எதிர்கொண்டு போராடுகிறான் என்பதுதான் பேராண்மையின் மையக் கரு'' என்கிறார் ஜனநாதன்.

- ராகவ்குமார்

Sri Matha Trust

(ஜாதி, மத, இன சார்பு அற்ற ஏழை புற்றுநோயாளிகளுக்கு புகலிடம் தரும் தொண்டு நிறுவனம்)

ஸ்ரீ மாதா டிரஸ்ட் என்ற இந்த தொண்டு நிறுவனம், ஸ்ரீ காஞ்சி பெரியவர்களின் அருளாசியுடன் திருமலை "பாலாஜி" தெய்வ சன்னிதானத்தில் ஆரம்பிக்கப் பட்டது. அதிக துன்பத்திற்கு ஆளாகும் "புற்றுநோயாளிகளில்" மிகவும் ஏழ்மை நிலையில் இருப்பவர்களைப் பாதுகாக்கும் நோக்கத்தோடு பாடுபட்டு வரும் அடையாறு கேன்சர் இன்ஸ்டிட்யூட், ராஜஸ்தானி அசோசியேஷன் (தமிழ்நாடு)ன் பண உதவியால் இந்த நோயாளிகளுக்கான காப்பகத்தை கட்டி பயன்பாட்டுக்கு கொண்டு வந்தார்கள்.

இந்த ஸ்தாபனம் ஸ்ரீ காஞ்சி பெரியவர்களுக்கு விடுத்த வேண்டுகோளுக்கு இணங்கி "ஸ்ரீ மாதா டிரஸ்ட்" இந்த தர்மசாலாவை பராமரிக்கும் மிகப்பெரிய பொறுப்பை ஆகஸ்டு மாதம் 2000ம் ஆண்டு ஏற்றுக்கொண்டது. அன்றிலிருந்து இன்று வரை எந்தவித தொய்வும் இன்றி, பொதுமக்கள் - நல்ல உள்ளங்கள் அளித்து வரும் நன்கொடைகளின் உதவியின் பலனாக, பல மாகாணங்களிலிருந்து சென்னை அடையாறு புற்றுநோய் மருத்துவமனைக்கு புற நோயாளிகளாக வரும் பல்லாயிரக்கணக்கான ஏழைகளுக்கும் உடன்வரும் அவர்களது ஒரு உதவியாளருக்கும் இலவசமாக உணவும், இருக்க இடமும் கொடுத்து காப்பாற்றி வருகிறது இந்த ஸ்ரீ மாதா டிரஸ்ட்.

சில நன்கொடையாளர்களின் எண்ணங்கள்

மாதா டிரஸ்டே! நீ அன்னையாய்... அன்ன பூரணியாய்... உணவூட்டி வாழவைக்கிறாய்! இந்த அமுதப்பணியில் நாங்கள் ஓர் அணில்! இந்த இமாலயப்பணி உயர நாங்கள் வாழ்த்தி வணங்கி மகிழ்கிறோம்.

- **கு. வெங்கடேசன்**, தமிழாசிரியர்
விவேகானந்தா வித்யாலயா, குரோம்பேட்டை.

வள்ளல் பெருமானின் ஜீவகாருண்ய ஒழுக்கத்தையும், அன்னதானத்தையும், அன்னை தெரசாவின் சேவையையும், இங்கு கண்டேன். தொடரட்டும் இப்பணி வாழ்க வையகம், வாழ்க வளமுடன்.

- **அரிமா ஆர். மூர்த்தி**, செங்குன்றம்

தினம் தினம் நான் சந்திக்கும் மனிதர்களிலிருந்து மாறுபட்டு மாமனிதராக திகழும் அய்யா கிருஷ்ணமூர்த்தி அவர்களிடமிருந்து நம்பிக்கை, விடாமுயற்சி, ஆனந்தம் அனைத்தையும் கலந்து அனுபவித்தேன். எனது பணிக்கு இது மேலும் உதவியாக இருக்கும். அய்யாவின் திருப்பணி சிறக்க ஆண்டவனை பிரார்த்திக்கிறேன்.

- **ஜெ. பிரபாகர்**, ஓவியர், சென்னை - 24.

ஸ்ரீ மாதா டிரஸ்ட் செய்து வரும் பணி மிகவும் போற்றுதலுக்கும், பாராட்டுதலுக்கும் உரியது. தன்னலமற்ற பரமபக்தியோடு செய்கிற இவர்களின் பணிகளை, இங்குள்ள நோயாளிகளும், தங்களது தாய்வீட்டிற்கும் மேலாக நினைக்கிறார்கள். நானும் நேரில் பார்வையிட்டு உணர்ந்தேன். இவர்களின் பணி மேலும் தொடர எல்லாம் வல்ல சிவபெருமானை இவர்களுக்கு தேவையான அனைத்தையும் அருள வேண்டுகிறேன்.

- **க. பிச்சையா**, Post Master (Retd) தூத்துக்குடி

ராஜஸ்தானி தர்மசாலா

பழைய கேன்சர் இன்ஸ்டிட்யூட் வளாகம், ஈஸ்ட் கனால் பேங்க் ரோடு, காந்தி நகர், அடையாறு, சென்னை - 20. போன்: 2442 0727, 2440 4950

அலுவலகம்: 3, சாஸ்தா அவென்யூ, திருமழிசை தெரு, சுந்தரம் காலனி, கிழக்கு தாம்பரம், சென்னை - 59.

ஸ்ரீ மாதா டிரஸ்ட்



நிறுவனர் மற்றும் நிர்வாக அறங்காவலர்

வி. கிருஷ்ணமூர்த்தி, கைபேசி: **94440 01065**

உங்கள் சேவை தொடர, தொடர்புகொள்ளுங்கள்:

திரு. காமாட்சிமணி - 93848 33325 | அரிமா. என். சங்கரம் - 93848 20727

திருமதி. எஸ். ரமா - 93810 20727 | திரு. ஏ. அமெரிக்கன் - 9003247857

உணவு விஷயத்தில் நோயாளிகளுக்கு தகுந்த முறையில் மிகுந்த கவனத்துடன் சத்தான, தரமான சுகாதாரமான சுவையான சைவ உணவு தினமும் கொடுக்கப்பட்டு வருகிறது. காலையில் காபி மற்றும் சிற்றுண்டி, மதிய உணவு, மாலை தேநீர், இரவு சாப்பாடு என்று இந்த டிரஸ்டின் சமையல் அறை ஒரு நாள், ஒரு வேளை கூட மூடப்படாமல் காலை 6 மணி முதல் இரவு 9.30 மணி வரை 2000ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் எல்லா நாட்களிலும் தொடர்ந்து இயங்கி வருகிறது.

உங்கள் உதவிகளை இப்படி அளிக்கலாமே...

- ஒரு நாளைக்கு ஒரு நோயாளியின் உணவுக்காக ரூ. 60 அளிக்கலாம்.
- ஒவ்வொரு மாதமும் ஒரு நோயாளி என்ற அடிப்படையில் ஆண்டு முழுவதும் ரூ. 720 அளிக்கலாம்.
- தர்மசாலாவின் ஒரு நாள் சாப்பாடு செலவான ரூ. 7000 அளிக்கலாம்.
- ஏழை நோயாளிகளுக்கு மதிய உணவு அல்லது இரவு உணவு அளிக்க ரூ. 3000 வழங்கலாம். காலை சிற்றுண்டி மட்டும் கொடுக்க ரூ. 2000 வழங்கலாம்.
- ஒரு முழு நாள் உணவை ஆண்டுக்கு ஒரு முறை கொடுத்து உங்கள் சார்பாக ரூ. 60000 கொடுத்து நீங்கள் ஒரு **"வள்ளல்"** ஆகலாம். இந்த தொகை டிரஸ்டின் காப்பு நிதியில் சேர்க்கப்பட்டு, அதன் வட்டியி லிருந்து இந்த தர்மம் செய்யப்படும்.
- பெரிய மனதுடன் ரூ. 100000 கொடுத்து, நீங்கள் இந்த புனித சேவையின் ஒரு **"நிரந்தர காப்பாளர்"** ஆகலாம்.

உங்களது திருமண நாள், உங்களது குழந்தைகள் / பேரக் குழந்தைகளின் பிறந்தநாள் மற்றும் பாசம் மிகுந்த உங்களது பெற்றோர்களின் நினைவு நாட்களை, கொடிய புற்றுநோயினால் உயிருக்கு போராடும் ஏழை நோயாளிகளுக்கு, வயிறார உணவளித்து அவர்களது வியாதிக்கு தரம் வாய்ந்த சென்னை அடையாறு கேன்சர் மருத்துவமனையில் இலவசமாகவோ அல்லது குறைந்த செலவிலோ சிகிச்சை பெற உதவ நீங்கள் விரும்புகிறீர்களா?

மிகவும் குறிப்பாக அயல்நாட்டில் வாழும் இந்தியர்கள், அங்கே இருக்கும் சூழ்நிலையில் தங்களது பெற்ற தாய் தந்தையருக்கு வருடம்தோறும் நன்றியுடன் நிறைவேற்ற வேண்டிய "நினைவு நாள் கடமைகளை" செலுத்த முடியாதபோது, இதை ஒரு புனித நேர்த்திக்கடனாக கருதி, எங்கள் தர்மசாலாவில் ஏழை நோயாளிகளுக்கு அந்த குறிப்பிட்ட நாளில் உணவு அளிப்பதன் மூலம், பெற்றோர்களுக்கு அளிக்க வேண்டிய உரிய மரியாதை செய்ய விரும்புகிறீர்களா?

உங்களது நல்ல எண்ணங்களுக்கு மனநிம்மதியளிக்கக்கூடிய சரியான தீர்வு எங்களது தர்மசாலாவிற்கு நிதி உதவி செய்து அங்கு தங்கியிருக்கும் ஏழை நோயாளிகள் உயிர்பிழைக்க உங்களால் முடிந்த உதவி செய்வதுதான். இதைவிட சிறந்த மனிதநேய செயல் வேறு எதுவுமில்லை.

எங்கள் தர்மசாலாவிற்கு விஜயம் செய்து, எங்கள் செயல்பாடுகளை நேரிடையாக அறிந்து கொண்டு உங்கள் உதவியை எங்களுக்கு அளிக்கலாம். நீங்கள் அளிக்கும் நன்கொடையை, ஸ்ரீ மாதா டிரஸ்ட் - **Sri Matha Trust** என்ற பெயரில் காசோலையாக அனுப்பி வைக்கலாம். 80 (G) பிரிவின்படி வருமான வரிவிலக்கு உண்டு.

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 09 -11 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 09 - 11* Registered as a Newspaper in Srilanka.

